REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஜுலை 6 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN

வரு. 91 இல. 158 | Thursday 06, July, 2023 | 16பக்கங்கள் | 50/-




## நீர் வழங்கல் துறையின் எதிர்கால திட்டங்களுக்கு ADB தொழில்நுட்ப உதவி

### சாகல, ஜீவன், ADB தூதுக்குழுவுடனான சந்திப்பில் ஆராய்வு

நாட்டின் நீர் வழங்கல் துறையின் புதிய சீர்திருத்த செயற்பாட்டு வேலைத் திட்டத்துக்கும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கொள்ளளவை அதிகரிக்கும் வேலைத் திட்டத்திற்கும் அவசியமான அறிவு மற்றும் தொழில்நுட்ப உதவியை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி விருப்பம் தெரிவித்துள்ளது.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் வதிவிடத் தூதுக்குழுவின் பணிப்பாளர் டகாபுமி கடோனோ (Takafumi kadono) ஆகியோருக்குமிடையில் நேற்று (05) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பிலே, இவ்விடயம் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

நாட்டின் நீர் வழங்கல் துறையின் திட்டங்கள், கண் 06

## பதிவு செய்யப்படாத மருந்துகளை அரசாங்கம் பயன்படுத்துவதில்லை

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்துக்கு கெஹெலிய பதில்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பதிவு செய்யப்படாத மருந்துகளை உபயோகத்துக்கு எடுத்துக் கொள்வதில்லையென சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல பாராளுமன்றத்தில் பதிலளித்தார்.

நாட்டில் பயன்படுத்தப்படும் மருந்து பாவனையின் போது சிலருக்கு பாதிப்பு ஏற்பட்டதன் காரணமாக கடந்த காலங்களில் சில சம்பவங்கள் பதிவாகியுள்ளதை சுட்டிக் காட்டிய அமைச்சர், அவ்வாறு பதிவு 06

### ஜப்பான் அரசின் அனுசரணையுடன்

## இலகு ரயில் போக்குவரத்து திட்டத்துக்கு அங்கீகாரம்

ஜப்பான் அரசாங்கத்தின் அனுசரணையுடன் உத்தேச இலகு ரயில் போக்குவரத்துத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலகு ரயில் போக்குவரத்துத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு சிறந்த உடன்படிக்கை எட்டப்படவுள்ளது. இதற்குப் பொருத்தமான காலக்கெடுவை தயாரிப்பதற்காக கொழும்பிலுள்ள 06




# மத ஒற்றுமைக்கு குந்தகம் விளைவித்தால் இனி ஆபத்து

### தடுப்பதற்கு விரைவில் புதிதாக சட்டம் வருகிறது என்கிறார் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க

மத நல்லிணக்கத்துக்கு குந்தகம் விளைவிக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் எதிராக புதிய சட்டம் கொண்டு வரப்படுமென, புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

மத சுதந்திரம் என்ற போர்வையில் எந்த மதத்தையும் ஒடுக்கவும், மத நல்லிணக்கத்தை அச்சுறுத்தவும் யாருக்கும் உரிமை இல்லை. இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க புதிய சட்டமொன்றை கொண்டுவர எதிர்பார்க்கிறோம். எந்த மதத்தையும் இழிவுபடுத்தாத வகையில் புதிய சட்ட வரைபை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளதென்றும் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

பேச்சுச் சுதந்திரம் அல்லது மத சுதந்திரம் என்ற போர்வையில் எந்த மதத்தையும் அவமதிக்க யாருக்கும் உரிமை இல்லையென்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (05) நடைபெற்ற ஊடக மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க,



நமக்கே உரிய கலாசாரம் மற்றும் உணவு முறைகளில் இருந்து விலகியதன் காரணமாக நாம் நோய்வாய்ப்பட்ட தேசமாக மாறிக்கொண்டிருக்கிறோம். பணத்துக்கு முன்னுரிமையளிக்கும் சூழலில், இன, மத அடிப்படையில் மோதல்கள் ஏற்படும். போதைப்பொருள் பிரச்சினையும் தலைதூக்குகிறது. சிலர் மதச் சுதந்திரம் என்ற போர்வையில் ஏனைய மதங்களை விமர்சிக்கின்றனர். மத சுதந்திரம் என்ற போர்வையில் எந்த மதத்தையும் ஒடுக்கவும், மத நல்லிணக்கத்தை அச்சுறுத்தவும் யாருக்கும் உரிமை 06

**பேச்சுச் சுதந்திரம், மத சுதந்திரம் என்ற போர்வையில் எந்த மதத்தையும் அவமதிக்க எவருக்கும் உரிமை இல்லை என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.**

## நயினாதீவு நாகதீப விகாரையில் விஹாராதிபதியாக 50 வருடங்கள்

### மதத் தலைவர்கள், மக்கள் புடைசூழ கௌரவிப்பு விழா



**யாழ். விசேட நிருபர்**

யாழ். நயினாதீவு விகாரையின் விஹாராதிபதி நவதகல பதுமகீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரர், மக்களால் கௌரவிக்கப்பட்டார். அவர், நயினாதீவுக்கு வந்து 50 வருடங்கள் நிறைவடைந்ததையிட்டு, பிரதேச மக்கள் அவருக்கு இக் 06



03
**உள்ளூராட்சி நிறுவனங்களில் இதுவரை நிரந்தரமாக்கப்படாதோருக்கு நியமனம்**
படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும் - பிரதமர்

### தமிழரின் பாரம்பரிய கலாசார வீர விளையாட்டான

## ஜல்லிக்கட்டு போட்டியை இலங்கையில் நடத்த திட்டம்

### திருச்சியில் கிழக்கு ஆளுநர் செந்தில் தெரிவிப்பு

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**



இலங்கையில் ஜல்லிக்கட்டுப் போட்டியை நடத்த நடவடிக்கை எடுக்கப்படுமென கிழக்கு 06

## அத்தியாவசிய மருந்துகள் அனைத்தும் கைவசமுள்ளன

### சுகாதார அமைச்சு நேற்று தெரிவிப்பு

அனைத்து அத்தியாவசிய உயிர் பாதுகாப்பு ஔடதங்களும், கைவசம் உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவசர நிலைமை ஏற்பட்டால், முகங்கொடுக்கத் தயார் நிலையிலேயே இருப்பதாக சுகாதார அமைச்சின் செயலாளர் ஜானக்க ஸ்ரீ சந்தரகுப்த தெரிவித்துள்ளார். 06

## அஸ்வெசும நிவாரணக் கொடுப்பனவு இதுவரை 5,50,000 மேன்முறையீடுகள்

### பிரதேச மட்டத்தில் குழுக்கள் அமைத்து விசாரணை

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு திட்டம் தொடர்பில் இதுவரை 5,50,000 க்கும் அதிகமான மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக, நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. இம்மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை விசாரணை செய்யும் நடவடிக்கைகளும் தற்போது 06

### ஹிரு TV 'பலய' நிகழ்ச்சியில்

## தேசிய கடன் மறுசீரமைப்பு கலந்துரையாடல் இன்று






தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பாக பாராளுமன்ற நிதிக் குழுத் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா மற்றும் போக்குவரத்து பெருந் 06

## தேசிய அடையாள அட்டைகள் பலவற்றை வைத்திருந்தவர் கைது

### ஹற்றன் பகுதியில் வட்டிக்கு பணம் கொடுப்பவர் சிக்கினார்

**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**

ஆட்பதிவுத் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட ஒரு தொகுதி தேசிய அடையாள அட்டைகளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ், ஒருவர் கைதானார். ஹற்றன் பொலிஸ் குற்ற விசாரணை 06



## திருமலை, KKS, பொத்துவில், கொழும்பு, காலி கடற்பரப்பில் காற்றின் வேகம் அதிகரிப்பு

### மீனவர்களுக்கு எச்சரிக்கை

கடற்றொழிலில் ஈடுபடுவதை தவிர்த்துக்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் மீனவர்களைக் கேட்டுள்ளது. திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறை, 06



## எட்டு வருடங்களின் பின் மூன்று சிசுக்களை சுமந்த தாய் மரணம்

### ராகம வைத்தியசாலையில் சம்பவம், விசாரணைகள் ஆரம்பம்

மூன்று குழந்தைகளைப் பெற்றெடுக்கத் தயாரான நிலையிலிருந்த கர்ப்பிணித்தாய், ராகம போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

நாரஹேன்பிட்டி பிரதேசத்திலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றின் விசேட வைத்தியரின் ஆலோசனைக்கமைய, ராகம போதனா வைத்தியசாலையில் இத்தாய் அனுமதிக்கப்பட்டார்.

23 வாரங்கள் கருவுற்றிருந்த நிலையில் கடந்த (28) 06

03
தொழில் சட்ட கட்டமைப்புக்கான Rough Bill
**தொழில் பற்றிய ஆலோசனை குழுவிடம் இன்று சமர்ப்பிப்பு**



03
**யானை - மனித மோதலை கட்டுப்படுத்த புதிய திட்டம்**
தேசிய கொள்கை தயாரிப்பு பணி ஆரம்பம்

03
**பொலிஸ் முறைப்பாட்டு குறிப்பேடுகள் எரிப்பு**
அக்கரைபத்தனையில் சார்ஜண்ட் பணி இடைநிறுத்தம்

## நாட்டில் விசேட வைத்திய நிபுணர்களுக்கு பற்றாக்குறை

### அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

விசேட வைத்தியர்களின் பற்றாக்குறை காரணமாக நாடளாவிய ரீதியிலுள்ள சில வைத்தியசாலைகளில் சிகிச்சை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக, அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பிரதான வைத்தியசாலைகளிலும் 06

### பௌத்த மதத்தை அவமதித்த குற்றச்சாட்டு

## நடாஷா எதிரிசூரியவுக்கு உயர்நீதிமன்றம் பிணை



மத நல்லிணக்கத்தை சீர்குலைத்து பௌத்த மதத்தை அவமதிக்கும் வகையில் அறிக்கைகளை வெளியிட்டதாகக் கூறப்படும் நடாஷா எதிரிசூரியவுக்கு, கொழும்பு உயர்நீதிமன்றம் நேற்று (05) பிணை வழங்கியது.

நடாஷாவை, ஜூலை (12) வரை விளக்கமறியலில் 06

## மண்டைதீவு காணிகள் கடற்படையினருக்கா?

### சுவீகரிக்கும் நடவடிக்கையை எதிர்ப்போம்



யாழ். மாவட்டம் வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவின், மண்டைதீவு (J/07) கிழக்கிலுள்ள, 29 பேருக்குச் சொந்தமான 18 ஏக்கருக்கும் அதிகமான தனியார் காணிகளை அபகரிக்கும் முயற்சிக்கு 06

## இராகலை கீழ் பிரிவிலுள்ள தொடர் குடியிருப்பில் தீ

### 20 வீடுகள் முற்றாக எரிந்து நாசம், 75 பேர் வரை நிர்க்கதி



நுவரெலியா, இராகலை கீழ் பிரிவில் 20 வீடுகளைக் கொண்ட தொடர் குடியிருப்பில், நேற்று புதன்கிழமை (05) காலை 10.30 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில், இருபது 06



# நகர்வலம்



# சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு நாம் ஒருபோதும் அடிபணிய மாட்டோம்

## நாடா அல்நஜீப் அறிக்கைக்கு அலி சப்ரி பதில்



இலங்கையின் பொறுப்புக் கூறல், உள்ளக பொறிமுறைக் கமையவே முன்னெடுக்கப்படும், எந்தக் காரணத்துக்காகவும் சர்வதேச பொறிமுறையின் கீழ் முன்னெடுக்கப்படமாட்டாதென வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53ஆவது கூட்டத்தொடர் கடந்த ஜூன் 19ஆம் திகதி ஆரம்பமானது.

இதன்போது, இலங்கை தொடர்பான அறிக்கையை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பதில் உயர்ஸ்தானிகர் நாடா அல் நஷீப் முன்வைத்திருந்தார்.

அந்த அறிக்கையில், 'இலங்கை பொறுப்பு கூறலை உறுதிப்படுத்துவதற்கு தாமதிக்கும் பட்சத்தில், சர்வதேச விசாரணைப் பொறிமுறை உள்ளிட்ட வலுவான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியேற்படும்' என எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வினவிய போதே அமைச்சர் அலி சப்ரி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டிலுள்ள 02 கோடி இலங்கை பிரஜைகளுக்கு அரசாங்கம் பொறுப்பு கூறுமே தவிர எந்த சந்தர்ப்பத்திலும் சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணியாது.

பொறுப்புக் கூறல் விவகாரத்தில் இலங்கையில் என்ன செய்ய முடியுமோ அதனை நாம் செய்வோம். இந்த விடயத்தில் சர்வதேச பொறிமுறைகளை ஏற்றுக் கொள்ள முடியாது. அவ்வாறு செய்தால் இலங்கையிலுள்ள மக்கள் மத்தியில் மேலும் பிரிவினைகள் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

எனவே பொறுப்பு கூறல் விவகாரத்தில் வெளிநபர்களுக்கு பதிலளிக்க வேண்டிய தேவை எமக்கு கிடையாது. மாறாக இலங்கைப் பிரஜைகளான 22 மில்லியன் மக்களுக்கே பொறுப்பு கூற வேண்டியுள்ளது.

இந்த நிலைப்பாட்டில் இலங்கை ஸ்திரமாகவுள்ளதென அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## அமைச்சர் ஹபீஸுடன் பெல்ஜியம் தூதுவர் சந்தித்து பேச்சுவார்த்தை



புது டில்லியில் இருந்து பணியாற்றும் இலங்கைக்கான பெல்ஜியத் தூதுவர் Diier Vanderhasselt நேற்று முன்தினம் (04) சுற்றாடல் அமைச்சுக்கு வருகை தந்து அமைச்சர் நஸீர் அஹமட்டுடன் பரஸ்பர கலந்துரையாடலில் ஈடுபட்டார். இரு நாடுகளுக்கிடையிலான சுற்றாடல் அனுபவங்கள், வரலாற்று ரீதியிலான நல்லுறவு என்பன தொடர்பாகவும் இருவரும் கருத்துப்பரிமாறிக் கொண்டனர். இலங்கையின் பொருளாதார சிக்கல் இத்தீர்வுக்கான IMF இன் ஒத்துழைப்புக்கும் பெல்ஜியத்தின் பங்களிப்பு தொடர்பாகவும் அமைச்சர் நஸீர் அஹமட் இதன்போது நன்றி தெரிவித்தார்.



கலைஞர் எஸ்.என்.நடராஜாவின் 50 வருட கலைப்பணிக்காக அவரை கௌரவிக்கும் நிகழ்வு சங்கவி நிறுவனத்தின் ஏற்பாட்டில் கொழும்பு பழைய நகர சபை மண்டபத்தில் நடைபெற்றபோது, புரவலர் ஹாசீம் உமர், நடராஜாவுக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் மற்றும் சான்றிதழ் வழங்குவதையும் அருகில் சங்கவி பிலிம்ஸ் அதிபர் துரைராசா சுரேஸ் நிற்பதையும் காணலாம்.

### தனியார் பல்கலைக்கழகங்களுக்கு

## வட்டியில்லா கடனுதவி ஆரம்பம்

தனியார் பல்கலைக்கழகங்களுக்கு வட்டியில்லா கடனுதவி வழங்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்துக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் பணி நேற்று முன்தினம் (04) ஆரம்பமாகியது.

இதன்படி, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு நேற்று முதல் விண்ணப்பிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

தனியார் பல்கலைக்கழகங்களுக்கான அரச வட்டியில்லா கடன்களுக்கான விண்ணப்பங்களை www.studentloans.mohe.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக சமர்ப்பிக்க முடியுமென அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## பாணந்துறையில் போலி வைத்திய நிலையம் பொலிஸாரால் முற்றுகை

### போலி வைத்தியர், உதவியாளர் கைது

(பாணந்துறை மத்திய குறுப் நிருபர்)

பாணந்துறை வடக்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெசல்வத்தை பகுதியில் போலியாக இயங்கி வந்த வைத்திய சிகிச்சை நிலையமொன்றை சுற்றிவளைத்தபோது, அதனை நடத்திவந்த போலி வைத்தியரொருவரும் உதவியாளரும் பாணந்துறை வலான பொலிஸ் மத்திய மோசடி ஒழிப்பு சிறப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வைத்திய நிலையத்திலிருந்து கருத்தடை மாத்திரைகள் உள்ளிட்ட சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான பல வகையான மருந்துப் பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இதில் காலாவதியான மருந்துப் பொருட்களும் காணப்படுவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நபர் காலம் சென்ற வைத்தியர் ஒருவரின் வைத்திய பதிவிலக்கத்தைப் பயன்படுத்தி வைத்திய சேவையை முன்னெடுத்து வந்துள்ளதாகவும் பூர்வாங்க விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. இந்த வைத்திய நிலையத்தை பொலிசார் சுற்றி வளைத்தபோது சிகிச்சை பெறுவதற்காக பதினெட்டு நோயாளிகள் வந்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பிரதேசத்தில் வைத்தியருக்கான தகுதியற்ற ஒருவர் வைத்திய நிலையமொன்றை நடாத்தி சிறுவர்கள் மற்றும் முதியவர்களுக்கும் சிகிச்சையளித்து வருவதாக விசேட பொலிஸ் பிரிவுக்கு கிடைத்த தகவலின் பேரில் பொலிஸ் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும் பெண் பொலிஸ் கான்ஸ்டபிளும் தம்பதியினர் போன்று சிகிச்சைபெற்று வைத்திய சான்றிதழும் பெற்றுள்ளனர்.

மேற்படி வைத்திய சான்றிதழில் அடிக்கப்பட்டிருந்த வைத்தியரின் பதவி முத்திரை இலங்கை வைத்திய சபையில் பரீட்சிக்கப்பட்டபோது அது 1968 ல் பதிவு செய்யப்பட்டதாக இருந்துள்ளதுடன் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படாமையும் தெரிய வந்துள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## தென் மாகாணத்தில் மழையுடன் கூடிய காற்று

(வெலிகம தினகரன் நிருபர்)

தென் மாகாணம் காலி, மாத்தறை மாவட்டங்களில் சில தினங்களாக கடும் மழையுடனான காலநிலை நிலவி வருவதால் மழையுடன் கூடிய காற்றும் வீசுகின்றது. இதனால் மக்களின் இயல்பு நிலை பாதிப்படைந்துள்ளது. குறிப்பாக பாடசாலை மாணவர்களும் இதனால் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இப்பகுதிகளில் அடிக்கடி காற்றுடன் சேர்ந்து மழை பெய்து வருவதால் மின்கம்பங்களில் மரக்கிளைகள் முறிந்து வீழ்ந்ததில் மின் துண்டிப்பும் ஏற்பட்டுள்ளது. வீதியோர வடிகான்களிலும் நீர் நிரம்பி வழிந்தோடுகின்றன.

## மாத்தளை பொலிஸ் பிரிவு; 61 குற்றச்சம்பவங்கள் பதிவு

தம்புள்ள தினகரன் நிருபர்

மாத்தளை பொலிஸ் அதிகாரப் பிரிவில் இவ் வருடத்தின் கடந்த 06 மாத காலத்தினுள் 61 குற்றச் சம்பவங்கள் பதிவாகியிருப்பதாகவும், இவற்றில் சில குற்றச் செயல்கள் தொடர்பில் சட்டபூர்வ நடவடிக்கைகளின் மூலம் தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் மாத்தளை தலைமையக பொலிஸ் உயரதிகாரி உபுல் குணவர்தன தெரிவித்தார். போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனை, வழிப்பறி, மாத்தளை நகரில் பெண்களின் தங்கச் சங்கிலிகள் அபகரிப்பு முதலான குற்றச் செயல்கள் மேற்படி குற்றச் செயல்களில் அடங்குகின்றன.

வீதியில் செல்லும் பெண்களின் கழுத்துச் சங்கிலிகளைப் பறிக்கும் சம்பவங்கள் மேற்படி நகரில் சர்வசாதாரணமாக இடம் பெற்று வருவது தொடர்பில் மாத்தளை அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அரசுக்கு எதிரான போஸ்டர்கள்

### 136 போஸ்டர்கள் பொலிஸாரால் மீட்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வேலைப்பிரிவில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த அரசாங்கத்துக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய 136 போஸ்டர்களை மீட்டுள்ளதாக மருதானை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுகாதார அமைச்சின் விசாரணை அதிகாரிகள் குழுவொன்றின் மூலம் (03) முற்பகல் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் நுழைவாயிலுக்கு அருகாமையில் காணப்படும் வேலைப் பிரிவை சோதனையிடும் போது இந்த போஸ்டர்களை கண்டெடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பல்வேறு வாசகங்கள் பொறிக்கப்பட்ட மேற்படி போஸ்டர்களை அண்மையில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள ஆர்ப்பாட்டங்களில் உபயோகப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்டது என்ற சந்தேகம் எழுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தேசிய வைத்தியசாலையின் விசாரணைப்பிரிவு அதிகாரிகள் தாம் கண்டெடுத்த போஸ்டர்களை மருதானை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதுடன் அந்த பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி ஏ.எ பலதொடுவவின் தலைமையின் கீழ் அதுதொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையில் 'High Dependency Unit' திறந்து வைப்பு

ருஸைக் பாரூக்



ராகமை கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையில் High Dependency Unit அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. ராகம மருத்துவ பீடத்தின் மகப்பேறு மற்றும் பெண்ணோயியல் பிரிவின் தலைவர் பேராசிரியர் ரசிக ஹேரத் மற்றும் பணிப்பாளர் கலாநிதி எஸ்.பி. லியனகே ரணவீர ஆகியோர் வத்தளை ரோட்டரி கழகத்தை தொடர்பு கொண்டு விடுத்த வேண்டுகோளின்பேரில் சுமார் 4 மில்லியன் செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாவட்ட ஆளுநர் 3202 பி. இளங்குமரன், காரமடை ரோட்டரி சங்கத் தலைவர் ஆர். மகேஷ், வத்தளை ரோட்டரி கழகத்தின் தலைவர் ஜி.ஜெயபாலன், வத்தளை ரோட்டரி கழகத்தின் முன்னாள் தலைவர்களான பிரபாத், தினேஷ் மற்றும் வைத்தியசாலையின் பேராசிரியர் ரசிக ஹேரத் மற்றும் பணிப்பாளர் கலாநிதி எஸ்.பி லியனகே ரணவீர ஆகியோர் உட்பட மாவட்ட 3203 சேர்ந்த உறுப்பினர்கள், வத்தளை ரோட்டரி கழக உறுப்பினர்கள், தென்னிந்தியாவில் இருந்து வருகை தந்த சுமார் 35 மேற்பட்ட கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



பேருவளை பொலிஸ் நிலைய பொலிஸ் பொதுமக்கள் பிரிவு ஆலோசனை சபையின் ஆலோசகராக சமூக சேவையாளர் இக்பால் சம்சுதீன் (JP) களுத்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் துமிந்த திஸாநாயக்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான அடையாள அட்டை அண்மையில் பேருவளை ஸாரா வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்ற வைபவத்தின் போது துமிந்த திசாநாயக்கவினால் வழங்கி வைக்கப்படுவதையும் அருகில் பேருவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லலித் பத்மகுமாரவையும் படத்தில் காணலாம். (படம்: பேருவளை விசேட நிருபர்)

## வெலிகம அறபா மாணவன் சாதனை


(வெலிகம தினகரன் நிருபர்)



மாத்தறை கல்வி வலய பாடசாலைகளுக்கிடையே இடம்பெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெலிகம அறபா மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) சாதனை படைத்துள்ளது. கடந்த 20, 21, 23ம் திகதிகளில் மாத்தறை உயன்வத்தை விளையாட்டுத்திடலில் இடம்பெற்ற இப்போட்டியில், வெலிகம அறபா மத்திய கல்லூரி மாணவன் எம்.ஏ அம்மார் 16 வயதுக் கீழ் 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றதோடு அதே மாணவன் 100 மீற்றர் ஓட்டப் போட்டியிலும் அதே வயது மட்டத்தில் முதலாம் இடத்தைச் சுவீகரித்து சம்பியனாக தெரிவு செய்யப்பட்டார்.

## அநுராதபுரம் – நாச்சியாதீவு பாலம் பல இலட்சம் ரூபாவில் புனரமைப்பு

### முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் அன்வருக்கு மக்கள் பாராட்டு





திறப்பனை தினகரன் நிருபர்

'கிராமத்துக்கான அபிவிருத்தி' திட்டத்தின் கீழ் திறப்பனை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் அன்வர் சதாத் (பஸ்மி) யின் உதவியுடன் அநுராதபுரம் நாச்சியாதீவு பிரதான பாதையின் நாச்சியாதீவு புதிய நகர் மையவாடி வீதி பாலம் புனரமைக்கப்பட்டு வருகிறது. நான்கு அடி அகலம் கொண்ட இப்பாலம் வாகனப் போக்குவரத்துப் பாலமாக மாற்றியமைப்பதற்கான வேலைகள் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

நாச்சியாதீவு புதிய நகரில் அமைந்துள்ள பாடசாலை, பள்ளிவாசல், தபாலகம், அரபுக் கல்லூரி, கிராம உத்தியோகத்தர் காரியாலயம், பாலர் பாடசாலை ஆகியவற்றுக்கு இலகுவில் பிரயாணம் செய்யக்கூடிய பாலமாக பழைய பாலம் புனரமைக்கப்படுகிறது.

இப்பாலத்தின் வேலைகளை ஆரம்பிப்பதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் பிரதேச சபை உறுப்பினர் அன்வர் சதாத் (பஸ்மி) தலைமையில் இடம் பெற்றபோது, பிரதேச சபை உறுப்பினர் உரையாற்றுவதையும் நிகழ்வில் சமய தலைவர்கள், அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், என ஊர் பொது மக்களும் கலந்து சிறப்பித்தனர்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 ஜுலை 6 வியாழக்கிழமை
தினகரன் THINAKARAN




தொழுகை நேரம்

| | |
|---|---|
| சுபஹ் | 04.35 |
| லுஹர் | 12.16 |
| அஸர் | 03.43 |
| மஃரிப் | 06.31 |
| இஷா | 07.47 |

இன்றைய சுபதினம்

சோபகிருது வருடம் ஆணி 22

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

# உள்ளூராட்சி நிறுவனங்களில் இதுவரை நிரந்தரமாக்கப்படாத ஊழியர்களுக்கு நியமனம்

## படிப்படியாக வழங்கப்படுமென்கிறார் பிரதமர்



உள்ளூராட்சி நிறுவனங்களில் இதுவரை நிரந்தரமாக்கப்படாதுள்ள ஊழியர்கள்,விரைவில் படிப்படியாக நிரந்தரமாக்கப்படுவரென பிரதமர் தினேஸ் குணவர்தன தெரிவித்தார்.மஹரகம நகரசபையில் (05) நடைபெற்ற மதிப்பீட்டு வரிகள், ஆதன வரிகள் உட்பட ஏனைய கொடுப்பனவுகளை இணையத்தளத்தினூடாக செலுத்தும் வசதியை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் உரையாற்றிய பிரதமர், நேற்று முதல் ஒன்லைன் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி மதிப்பீட்டு வரியைச் செலுத்த முடியும். மேலும் எதிர்காலத்தில், பொதுமக்களுக்குத் தேவையான சேவைகளை எளிதாகவும் திறமையாகவும் வழங்குவதற்கும் ஏனைய பொது சேவைகளையும் இத்தொழிநுட்பத்தினூடாகப் பெறவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மஹரகமவில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், அபேக்ஷா வைத்தியசாலை மற்றும் ஜயவர்தனபுர வைத்தியசாலை போன்ற விசேட நிறுவனங்கள் உள்ளன. சிறிய மற்றும் பெரிய அளவிலான ஆடை வணிகங்களுக்கான மையமாகவும் இவை உள்ளன . மேலும் அரிதான, சில வர்த்தகங்களுக்கான புகலிடமாகவும் இவை,விளங்குகிறது. அவற்றைப் பாதுகாத்து அந்தத் தொழில்களை வளர்ச்சியடையச் செய்ய வேண்டும். அது நகர சபையின் பணி.

எமது அதிகார பிரதேசம் அதிகரிக்காது. நிலம் முறையாகத் திட்டமிடப்பட்டு அதிகபட்ச முன்னேற்றத்தை மேற்கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். இதனால் பல்வேறு வர்த்தகத் துறைகள் மஹரகமைக்கு ஈர்க்கப்படும். வித்யாகர, ஜனாதிபதி, தர்மபால, புவனேகபா போன்ற பாடசாலைகளில், மஹரகமைக்கு வெளியில் உள்ள பிள்ளைகள் கல்வி கற்க வருகின்றனர். பெரும்பாலும் அந்தப் பிள்ளைகள் பின்னர் மஹரகம தொகுதியிலேயே தங்கள் வாழ்க்கையைத் தொடங்குகின்றனர். எங்கள் நகரம் அதன் மூலம் வளர்ச்சியடைகிறது.

மஹரகமைக்கு வந்த முதலாவது வங்கி தேசிய சேமிப்பு வங்கியாகும். வங்கி அமைப்பு மேம்பட்டு வருகிறது. இன்று இந்த நகரத்தில் மட்டுமின்றி பல பொது தனியார் வங்கிகள் இரண்டாவது புறநகர் பகுதியான கொட்டாவைக்கும் வந்துள்ளன.

75 வருடங்களாக சிறிய சந்தையாக இருந்த மஹரகம சந்தி, எமது வர்த்தக சமூகத்தினால் நகரமாக அபிவிருத்தி செய்யப்பட்டது. அவர்களின் கருத்துக்கள், தனிப்பட்ட முதலீடுகள் மஹரகமவை அபிவிருத்தி செய்வதற்கான முக்கிய முதலீடாகும். மாகாண சபைகள் கலைக்கப்பட்டுள்ளன. உள்ளூராட்சி மன்றங்களுக்கு வேட்புமனுக்கள்

06

தொழில் சட்ட கட்டமைப்புக்கான Rough Bill

# தொழில் பற்றிய ஆலோசனை குழுவிடம் இன்று சமர்ப்பிப்பு

நவீன தொழில் துறைகளைக் கொண்ட உலகுக்கு ஏற்றவகையில் தொழில் சட்ட கட்டமைப்பை தயாரிப்பதற்கு ,புதிய வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மக்களிடம் பெறப்பட்ட கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளுக்கு அமைய இந்த வரைபு (Rough Bill) தயாரிக்கப்பட்டுள்ளது.ஒன்றிணைந்த தொழில் சட்ட கட்டமைப்புக்கான இந்த வரைவு தேசிய தொழில் பற்றிய ஆலோசனைக் குழுவிடம் இன்று (06) சமர்பிக்கப்படவுள்ளது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார இந்த வரைவை தேசிய தொழிலாளர் ஆலோசனை சபையிடம் சமர்ப்பிக்கவுள்ளார்.

ஒன்றிணைந்த தொழில் சட்ட கட்டமைப்புக்கான வரைவை Rough Bill பகிரங்கப்படுத்துவதற்கு முன் தொழில் பற்றிய ஆலோசனைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சர் உறுதியளித்திருந்தார். இதற்கமைவாக இன்று இந்த திருத்த சட்ட மூலத்திற்கான வரைவு தொழில் ஆலோசனை சபையிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

06

# யானை - மனித மோதலை கட்டுப்படுத்த புதிய திட்டம்

## தேசிய கொள்கை தயாரிப்பு பணி ஆரம்பம்

யானை மனித மோதலை கட்டுப்படுத்துவதற்காக, தேசிய கொள்கையை தயாரிக்கும் பணி ஆரம்பமாகியுள்ளது.

வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தலைமையில் நேற்று நடைபெற்ற செயலமர்வில் இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், யானைமனித மோதல் தொடர்பான ஜனாதிபதி செயலணி, நீர்ப்பாசனத் திணைக்களம், ரயில்வே திணைக்களம், விவசாய திணைக்களம் மற்றும் சிவில் பாதுகாப்பு பிரிவினர் உட்பட அனைத்து தொடர்புடைய நிறுவனங்களின் அதிகாரிகளும் இந்த செயலமர்வில் கலந்து கொண்டனர். இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, வரலாற்றில் இதுபோன்றதொரு கொள்கை தயாரிக்கப்படாமையால், யானை – மனித மோதல்கள் தீவிரமடைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். எனவே, அதற்காக, கொள்கை ரீதியான தீர்மானம் அவசியமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பல் ஆராய்ச்சி கண்டுபிடிப்பு சாதனை

# அமெரிக்காவில் விருது வென்ற இலங்கையர்

அமெரிக்காவின் சிக்காகோ நகரிலுள்ள (University of Illinois Chicago) இல்லிநோய்ஸ் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் இலங்கை ஆய்வாளரான கலாநிதி கஸ்ஸப அல்லேபொல, பல் ஆராய்ச்சிக்கான சர்வதேச சங்கத்தின் பல் ஆராய்ச்சி கண்டுபிடிப்புக்கான விருதை வென்றுள்ளார்.

இவ்விருது கொலம்பியாவின் பொகோட்டாவில் நடைபெற்ற சர்வதேச பல் மருத்துவ ஆராய்ச்சி சங்கத்தின் 101ஆவது மாநாட்டில் வழங்கப்பட்டது. இதேவேளை, அல்லேபொலவின் ஆராய்ச்சிப் பணிக்காக சர்வதேச பல் ஆராய்ச்சி சங்கம் 50,000 அமெரிக்க டொலர்களையும் வழங்கியுள்ளது. கலாநிதி கஸ்ஸப அல்லேபொல கண்டி திரித்துவக்கல்லூரியின் பழைய மாணவரென்பதுடன், களனி பல்கலைக்கழகத்தில் நுண்ணுயிரியலில் நிபுணத்துவம் பெற்ற பட்டதாரியுமாவார். இவர் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டமும், அமெரிக்காவின் லுசியானா மாநில பல்கலைக்கழகம் மற்றும் சிக்காகோவிலுள்ள இல்லிநோய்ஸ் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் முனைவர் பட்டமும் பெற்றுள்ளார்.

# தேசிய கடன் மறுசீரமைப்பின் மூலம் EPF நிதி 12 ட்ரில்லியன் குறைவடையும்

## வெரிடேஸ் ஆய்வு தொடர்பில்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



தேசிய கடன் மறுசீரமைப்பின் மூலம் தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதியில் 12 ட்ரில்லியன் ரூபா குறைப்பு செய்யப்படுவதாக வெரிடேஸ் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அது தொடர்பாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய அதிகாரிகள் எந்தவித ஆய்வையும் மேற்கொள்ளவில்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். வெரிடேஸ் ஆய்வு நிறுவனம் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பாக ஆய்வொன்றை மேற் கொண்டுள்ளது. அதில் தேசிய கடன் மறுசீரமைப்பின் மூலம் தொழிலாளர்களுக்கு ஏற்படப்போகும் நட்டம் 12 ட்ரில்லியன் ரூபா என தெரிவித்துள்ளது. கடன் மறுசீரமைப்பின் மூலம் தொழிலாளர்களின் பணம் எந்தளவு குறைவடையும் என்பது தொடர்பாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய அதிகாரிகள் எவ்வித ஆய்வும் மேற்கொள்ளவில்லை என்றும் அவர் சபையில் சுட்டிக்காட்டினார்.

# பல்கலைக்கழகத்தையே நாம் கோரினோம் மலையகத்தில் மதுபான சாலைகள் அல்ல

## அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



நுவரெலியா மாவட்டத்துக்கு பல்கலைக்கழகத்தை கோரினோமே தவிர, மதுபான சாலைகளை கோரவில்லை என்றும் புதிய மதுபான சாலைகளை அமைக்கும் திட்டம் உடனடியாக கைவிடப்பட வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற நீதிமன்றங்களில் நீதி விசாரணைகளில் தாமதம் மற்றும் அதற்கான காரணங்கள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

நீதிமன்றங்களில் வழக்குகள் தாமதமாவதற்கு பல்வேறு காரணங்களை குறிப்பிட முடியும்.வழக்குகளை தாமதப்படுத்துவதால் குற்றவாளிகள் தப்பித்துக் கொள்கின்றார்கள் .சாட்சிகள் மாறிப்போகின்றார்கள்.வழக்குப்பொருட்களும் அழிந்து போகின்றன. சில வழக்குகளில் குற்றவாளிகளும் சாட்சிக்காரர்களும் கூட இறந்து விடுகின்றார்கள். ஆகவே, வழக்குகளை தாமதிப்பதனால் வழக்கு தாக்கல் செய்பவர்கள், சாட்சிக்காரர்களுக்கு அச்சுறுத்தல்கள் ஏற்படவும் இடமுண்டு.காலம் தாழ்த்தி வழக்குகள் விசாரிக்கப்படுவதால் பணவிரயமும் ஏற்படுகின்றது.

பெருந்தோட்டப்பகுதிகளில் ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகள் பற்றியும் அவதானம் செலுத்த வேண்டியுள்ளது. பொதுவாக மலையகப்பகுதி மக்கள் வாழ்க்கை சுமையால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் அவர்களுக்கு மதுப்பழக்கத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

நுவரெலியா மாவட்டத்தை இரண்டு கலால் பிரிவுகளாக பிரித்தால் நுவரெலியா மாவட்டத்தில் 48 மதுபான சாலைகளும் அம்பகமுவ, ஹற்றன் பகுதியில் 64 மதுபானசாலைகளும் என மொத்தமாக 112 மதுபானசாலைகள் உள்ளன.

பெருந்தோட்டப் பகுதியில் வாழும் மக்கள் தங்களுடைய வாழ்க்கை செலவை கொண்டு செல்ல முடியாத நிலையில், தமது வருமானத்தின் ஒரு பகுதியை இந்த மதுபானசாலைகளுக்கு செலவளிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கும் அப்பால் இப்போது அரசியல்வாதிகளின் அனுசரணையோடு கடந்த வாரம் டயகம பகுதியில் புதிய மதுபானசாலை ஒன்றை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.அதை எதிர்த்து அங்கு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.






# நாட்டில் விபத்துக்களால் வருடாந்தம் 12,000 பேர் பலி

## ஒவ்வொரு 03 மணி நேரத்தில் 04 பேர் வீதம் மரணம்

ஒவ்வொரு மூன்று மணி நேரத்திலும் நான்கு பேர் விபத்துக்களால், மரணிப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதற்கமைய வருடத்துக்கு விபத்துக்களால் மாத்திரம் 10, 000 முதல் சுமார் 12 ஆயிரம் பேர் உயிரிழப்பதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் ஐவரில் ஒருவருக்கு வருடாந்தம் விபத்து ஏற்படுவதுடன், இவர்களுக்கு மருத்துவ சிகிச்சைகளும் வழங்கப்படுகின்றன.

இதனால் அரசாங்கத்துக்கு பாரிய செலவுகள் ஏற்படுவதாகவும், விபத்துக்களை தவிர்த்துக் கொண்டால் இச்செலவை சேமிக்க முடியுமெனவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. அத்துடன், இலங்கையில் 15 வயது முதல் 44 வயதிற்கிடைப்பட்டோ ரே, விபத்துக்களில் அதிகம் உயிரிழக்கின்றனர்.

இதனால், விபத்துக்களை குறைக்கும் வகையிலும் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலும் தேசிய விபத்துக்கள் தடுப்பு வாரம் கடந்த (03) முதல் அமுல் படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# பொலிஸ் முறைப்பாட்டு குறிப்பேடுகள் எரிப்பு

## அக்கரைபத்தனையில் சார்ஜண்ட் பணி இடைநிறுத்தம்

அக்கரப்பத்தனை பொலிஸாரால் பதியப்பட்ட பல்வேறு முறைப்பாட்டு குறிப்பேடுகளின் பக்கங்களை எரித்து அழிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கிய குற்றச்சாட்டில், பொலிஸ் சார்ஜண்ட் ஒருவர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டதாக அக்கரப்பத்தனை பொலிஸார் தெரிவித்துள்ளனர். முறைப்பாட்டு புத்தகத்தை அழிக்குமாறு சந்தேக நபரான பொலிஸ் சார்ஜன்ட், பெண் பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு அறிவுறுத்தினார்.

இதன் பிரகாரம், அந்தக் குறிப்பேட்டை பெண்கள் விடுதிக்கு அவர் எடுத்துச் சென்று பக்கங்களை அகற்றி எரித்துள்ளதாக பொலிஸார் கூறினர். எந்தவொரு உயரதிகாரியிடமும் அனுமதி பெறாமல் பல்வேறு முறைப்பாட்டுக் குறிப்பேடுகளை அழித்த குற்றத்துக்காக, இந்த சார்ஜன்ட் நுவரெலியா உதவி பொலிஸ் அத்தியட்சகரினால் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பிலான விசாரணைகள், நுவரெலியா உதவி பொலிஸ் அத்தியட்சகரின் தலைமையில் நடைபெற்று வருகின்றன.




தினகரன்
THINAKARAN தினகரன்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆணி மாதம் 22ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 துல்ஹிஜ்ஜா பிறை 17



**குறள் தரும் சிந்தனை**

அற்றால் அறவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு

*உண்ட உணவு செரித்ததையும், உண்ணும் உணவின் அளவையும் அறிந்து உண்பது நீண்ட நாள் வாழ்வதற்கு வழியாகும்.*

## தேசிய கடன் மறுசீரமைப்புத் திட்டம் நாட்டுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரதிபலனாக மக்கள் எதிர்கொண்ட பொருளாதார அசௌகரியங்களும் நெருக்கடிகளும் கட்டங்கட்டமாக நீங்கி வருகின்றன.

இப்பொருளாதார நெருக்கடியில் இருந்து முழுமையாக மீட்சி பெறுவதை இலக்காகக் கொண்டு அனைத்து பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன.

அந்த வகையில் சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் கடன் மீளளிப்புக்கான சலுகைக்கு கடந்த (2023) மார்ச் மாதம் இணக்கப்பாடு எட்டப்பட்டது. அதற்கேற்ப இலங்கைக்கு 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்க இணக்கம் தெரிவித்துள்ள சர்வதேச நாணய நிதியம், அதன் முதல் தொகுதி கடனையும் வழங்கியுள்ளது.

பொருளாதார ரீதியில் நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கு விரிவான அடிப்படையில் வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தேசிய மற்றும் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. 'உள்நாட்டு, வெளிநாட்டு கடன் மீளச் செலுத்துதலுக்கு கடன் மறுசீரமைப்பு இன்றியமையாதது' என்று குறிப்பிட்டுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இதன் தேவையையும் முக்கியத்துவத்தையும் கடந்த சனியன்று பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையின் போது தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

தற்போது தேசிய உற்பத்தி பொருளாதாரத்தில் 128 சதவீதம் கடனாக உள்ளது. அதனால் வருடத்திற்கு கடன் மற்றும் வட்டியைச் செலுத்துதல், ஏனைய செலவுகளுக்காக தற்போதுள்ளதை விடவும் உற்பத்தி பொருளாதாரத்தின் ஊடான வருமானத்தை சுமார் 31 வீதம் அதிகரிப்பது அவசியம்.

அதேநேரம் அந்நிய செலாவணி ஊடான கடன் மீளச்செலுத்துதலை 10 சதவீதத்தில் இருந்து சுமார் 4. 5 வீதத்திற்கு குறைக்க வேண்டும். இந்நிலையில் இலங்கைக்கு கிடைக்கப்பெறும் வருமானத்தின் ஊடாகக் கடன்களை மீளச்செலுத்துதலைக் குறைப்பதற்கு தேசிய மற்றும் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பைச் செய்வதும் முக்கியமானது.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்டவற்றின் கடன்களை மறுசீரமைக்க முடியாது. அதனால்தான் வெளிநாட்டு கடன் வழங்குனர்கள் 2.6 சதவீதம் கடன் மறுசீரமைப்புக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகக் குறிப்பிட்டுள்ளதோடு, தேசிய கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும் அவர்களது கோரிக்கையாகக் காணப்படுகிறது.

அதனால் நாட்டில் மீண்டும் வங்குரோத்து ஏற்படாத வகையில் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் தேசிய கடன் மறுசீரமைப்பு முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. 'அந்த வகையில் வருடத்திற்கு 2.6 சதவீதத்தினால் கடன் மறுசீரமைப்பு செய்யப்பட உள்ளது. அவற்றில் 1.1 சதவீதம் இலங்கை மத்திய வங்கியினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 1.5 சதவீதம் மூன்று தரப்புக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட உள்ளது. வங்கிகள், பிணைமுறியாளர்கள், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகியனவே அந்த மூன்று தரப்புக்களும் ஆகும் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார் வெளிவிவகார அமைச்சர்.

இப்பின்னணியில்தான், தேசிய கடன் மறுசீரமைப்பு யோசனை கடந்த சனியன்று பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இப்பிரேரணைக்கு ஆதரவாக 122 வாக்குகளும் எதிராக 62 வாக்குகளும் கிடைக்கப் பெற்றன. ஆனால் 40 பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. இதன்படி இப்பிரேரணை 60 மேலதிக வாக்குகளால் நிறைவேறியுள்ளது.

நாட்டினதும் மக்களினதும் பொருளாதார நலன்களை முன்னிலைப்படுத்தியே தேசிய கடன் மறுசீரமைப்புத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. ஆனாலும் இப்பிரேரணை மீதான பாராளுமன்ற விவாதம் நிறைவுற்றதும் இடம்பெற்ற வாக்கெடுப்பின் போது எதிர்க் கட்சியினர் உள்ளிட்ட சிலர் நடந்து கொண்ட விதம் கவலை அளிக்கும் வகையில் அமைந்திருந்ததாகக் குறிப்பிட்டுள்ள ஐக்கிய தேசிய பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, 'தேசிய கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை எதிர்ப்பவர்கள் நாடு வீழ்ச்சியடையாமல் மீட்சி பெறுவதற்கு வேறு ஏதாவது தீர்வுகள் இருந்தால் அவற்றை முன்வைக்க முடியும்' என்றும் கூறியுள்ளார்.

அதுதான் உண்மை. நாடு பொருளாதார நெருக்கடிக்குள்ளாகி வங்குரோத்து நிலையை அடைந்திருந்த சமயம் எவரும் முன்வராத இக்கட்டான சூழலில்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பெறுப்பேற்றார். அத்தோடு பொருளாதார மீட்சிக்கான வேலைத்திட்டங்களையும் ஆரம்பித்தார். அதன் விளைவாக பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீட்சி பெற்று வருகிறது.

இம்மீட்சி தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு நாட்டில் உறுதியான பொருளாதார மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும் என்பதுதான் மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. அதற்கேற்பவே தேசிய கடன் மறுசீரமைப்புத் திட்டமும் முன்னெடுக்கப்படுகிறது. அதனால் இத்திட்டத்தை எதிர்ப்பதாயின் நாடு வீழ்ச்சியடையாமல் மீட்சி பெறுவதற்கான மாற்றுத்தீர்வுகள் முன்வைக்கப்பட வேண்டும். அதுவே நியாயமானது. இதைவிடுத்து அற்ப அரசியல் நலன்களை அடைந்து கொள்ளும் வகையில் செயற்படுவதற்கான வேளையல்ல இது.

editor.tkn@lakehouse.lk

# முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி வாழ்ந்த இல்லம் புனரமைக்கப்பட்டு உருவச்சிலைகள் திறந்துவைப்பு

தமிழுலகின் பேராளுமைகளுள் ஒருவராக வாழ்ந்து, தனது முத்தமிழ்ப் படைப்பாளுமைப் புலமைத்துவம், கவித்துவச் புலனெறிச் செழுமை, மும்மொழிச் சிறப்பாளுமை ஆகியவற்றின் மூலம் தாயகத்திலும் தமிழகத்திலும் தனக்கென்றோர் தனியிடத்தையமைத்துக் கொண்டவர்

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை தந்த முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி ஆவார். அவர் தமது துணைவியார் தங்கரத்தினம் நல்லதம்பியுடனும் தமது பிள்ளைகளுடனும் வாழ்ந்த இல்லமானது அவரது இளைய புதல்வர் புலவர் நல்லதம்பி சிவநாதன் அவர்களால் புனரமைக்கப்பட்டுள்ளது.

அவ்வீட்டின் புனருத்தாரண வைபவம் 'முருகனகம்', கண்ணகியம்மன் கோயிலடி, வட்டுமேற்கு, வட்டுக்கோட்டையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. புலவர் நல்லதம்பி சிவநாதனின் நண்பரான கலாபூஷணம் அழகரத்தினம் சர்வேஸ்வரனின் அயராத முயற்சியினால் முதுதமிழ்ப் புலவரின் மணிமண்டபமும் முதுதமிழ்ப்புலவரினதும் அவரது துணைவியாரினதும் உருவச்சிலைகளும் அங்கு அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் ஏராளமானோர் பங்கேற்றனர். இறைவாழ்த்தை முதுதமிழ்ப்புலவரின் கொள்ளுப்பேரன் நித்திலன் ரகுபாலனும் வரவேற்புரையினை அவரது பூட்டப்பிள்ளையான பூவிழி ரகுபாலனும் வழங்கினர்.

பேராதனை பல்கலைக்கழகத் தகைசார் பேராசியர் சி. தில்லைநாதன் தம் துணைவியார் சகிதம் பங்கேற்று உருவச்சிலைகளைத் திரைநீக்கம் செய்து வைத்தார்.

யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவும் பங்கேற்றார்.

யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் பொ. ரவிச்சந்திரன் தலைமையில் இல்லத்தின் முன்புறத்தில் முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி அரங்கில் நிகழ்வுகள் நடைபெற்றன.

இலங்கை வானொலியின் முன்னாள் தயாரிப்பாளரும் பல்துறைக்கலைஞரும் சிறுகதை எழுத்தாளரும் பாடகருமான கோவிலூர் செல்வராஜன் முதுதமிழ்ப்புலவரின் புலமைத்துவ ஆற்றல்கள் பற்றி பாராட்டிப் பேசினார்.

அவருக்கும் சுவாமி விபுலாநந்த அடிகளாருக்கும் இடையில் இருந்த நட்புறவு பற்றியும் அவர்கள் இருவரின் கடிதப் பரிமாற்றங்கள் பற்றியும் இருவரும் தமிழ்ப்பணியாற்ற உறுதி எடுத்துக் கொண்டது பற்றியும் அவர் தனதுரையில் குறிப்பிட்டார்.



தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறையைச் சேர்ந்த கலாநிதி க. ரகுபரன், புலவர் நல்லதம்பி சிவநாதன் அவர்களைக் காப்பாளராகக் கொண்டு லண்டனில் இயங்கிவரும் தமிழவையின் இணையவழி ஒன்றுகூடல்கள் வழியிலான தமது தொடர்பு பற்றியும் இத்தொடர்பின் வழியாக எழுந்த முதுதமிழ்ப்புலவரின் படைப்பாக்க நூற்திரட்டுக்கான எண்ணக்கரு பற்றியும் விபரித்தார்.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் அதிபர் கவிஞர் சோ. பத்மநாதன் தமது வாழ்த்துரையில் முதுதமிழ்ப்புலவரின் ஆய்வுநோக்கிய மும்மொழிப் புலமைத்துவம் பற்றிக் குறிப்பிட்டார். முதுதமிழ்ப்புலவர் நல்லதம்பி அவர்கள் தமிழில் மொழிபெயர்த்த இலங்கைத் தேசிய கீதம் பற்றி பேராசிரியர் தில்லைநாதன் குறிப்பிட்டு அங்கு உரையாற்றினார்.









முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி அவர்கள் தொடர்பான வரலாற்றுப் பதிவுகளை அங்கு உரையாற்றிய பலரும் முன்வைத்தனர்.

# காத்தான்குடிக்கு பெருமளவில் வருகை தரும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள்



ஹஜ் பெருநாளை அடுத்து வந்த தினங்களில் காத்தான்குடி நகரம் அதிகளவான சுற்றுலாப் பயணிகளினால் நிரம்பிக் காணப்பட்டது. அதேவேளை இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் காத்தான்குடியை நோக்கி சுற்றுலாப் பயணிகள் தற்போது வந்து செல்கின்றனர்.

காத்தான்குடி அல் அக்ஸா ஜும்ஆ பள்ளிவாயல், காத்தான்குடியிலுள்ள பூர்வீக நூதனசாலை, காத்தான்குடி முதலாம் குறிச்சியிலுள்ள மீரா பெரிய ஜும்ஆ பள்ளிவாயல் உட்பட மேலும் பல பள்ளிவாயல்கள், காத்தான்குடி கடற்கரை என காத்தான்குடியிலுள்ள பல இடங்களையும் சுற்றுலாப் பயணிகள் பார்வையிடுகின்றனர்.



இது இவ்விதமிருக்க காத்தான்குடி உட்பட மட்டக்களப்பு மாவட்டத்தின் பல இடங்களிலும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் தற்போது பெருமளவில் வருகை தருகின்றனர். சுற்றுலாப் பயணிகள் அதிகளவாக வருகை தரும் காலங்களில் வாகன நெரிசல் அதிகரித்துக் காணப்படுவதுடன் அதிகளவான வாகனங்களும் மட்டக்களப்பு பிரதேசத்துக்கு வருகின்றன. பெருநாள் காலங்கள், விஷேட தினங்கள், வெள்ளிக்கிழமை, சனி, ஞாயிறு போன்ற தினங்களிலும் சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகமாகக் காணப்படுகிறது. பல்லின பல் சமயங்களைக் கொண்ட மக்களும் இங்கு வந்து செல்வதால் இனநல்லுறவும் சகோதரத்துவமும் ஐக்கியமும் அதிகரிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுமென்று மக்கள் கருதுகின்றனர்.

**எம்.எஸ்.எம். நூர்தீன்...**
*(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)*

# திறப்பனையில் மூன்று கிராமங்களை இரவில் துவம்சம் செய்த யானைகள்!

அநுராதபுரம் மாவட்டத்தின் திறப்பனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 539 வெள்ளமுதாவ கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள இங்கினியாகம, வெல்லமுதாவ, புஞ்சிக்குளம், குடாகம ஆகிய கிராமங்களுக்கு கடந்த சில தினங்களுக்கு முன்னர் படையெடுத்து வந்த காட்டுயானைகள் கூட்டம், அங்குள்ள வீடுகளை நாசம் செய்ததோடு மக்களின் உடைமைகளையும் சேதப் படுத்தியுள்ளது. பயிர்களையும் யானைகள் நாசம் செய்துள்ளதாக கிராமவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இரவு வேளையில் திடீரென வந்த காட்டுயானைக் கூட்டம், வீட்டிற்குள் புகுந்து இரவு உணவுக்கு ரொட்டி சுட்டுக் கொண்டிருந்த தாய் மற்றும் அப்பெண்ணின் மகள் இருந்த இடத்துக்கு அருகில் வந்து நின்று கொண்டது. பின்னர் கிராம மக்கள் ஒன்றிணைந்து உழவு இயந்திரத்தின் உதவியுடன் காட்டு யானைகளை விரட்டி யானைகளால் முற்றுகையிடப்பட்ட வீட்டைக் காப்பாற்றியுள்ளனர்.





எஸ். சந்திராவதி என்ற பெண் இதுகுறித்துக் கூறியதாவது:

"காட்டு யானைகள் கூட்டம் வந்ததால் சுமார் 15 நாட்களாக நாங்கள் ஒழுங்காக உறங்கவில்லை. எனது கணவர் உடல் நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். நானும் எனது மகளும் இந்த வீட்டில் இருந்த போது ஒருநாள் மாலை 6 மணியளவில் யானைக் கூட்டம் வந்தது. நாங்கள் செய்கை பண்ணிய வாழை மற்றும் மரவள்ளி மரங்களை அழித்தது, பின்னர் எமது வீட்டின் சமையலறையை உடைத்தது. இரவு நேரம் என்பதால் இரவு உணவுக்காக ரொட்டி சுட்டுக் கொண்டிருந்தோம். யானைகள் உள்ளே வந்து அடுப்பை உடைத்தன.

சமுர்த்தியில் 03 இலட்சம் ரூபா கடனாகப் பெற்று யானை வேலிகளை அமைத்தோம். அப்பணத்தில் இன்னும் ஒன்றரை இலட்சம் ரூபா மீதியாகக் கட்ட வேண்டி உள்ளது. இப்போது எங்களின் பயிர்கள் அழிந்து விட்டன.

காட்டுயானைகள் எங்கள் வீட்டை சேதப்படுத்திய போது, கிராம மக்கள் இணைந்து வனசீவராசிகள் திணைக்கள அதிகாரிகளை அழைத்தனர். அவர்களோ தமக்கு வருவதற்கு வாகனம் இல்லை எ னத் தெரிவித்திருந்த நிலையில், கிராம மக்கள் உழவு இயந்திரம் கொண்டு வந்து யானை களைப் பயமுறுத்தி, சத்தம் எழுப்பி அவற்றை விரட்டி எம்மைக் காப்பாற்றினர்".

லலித் கருணாரத்ன என்ற பெண் தெரிவித்ததாவது: "திறப்பனை பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட வெள்ளமுதாவ, புஞ்சிக்குளம், இகினியாகம, குடாகம ஆகிய கிராமங்கள் காட்டுயானைகளால் அடிக்கடி தொல்லைக்கு உள்ளாகின்றன. இக்கினியாகம கிராமத்தில் 35 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்களின் பிரதான வருமானம் மீன்பிடி மற்றும் விவசாயம். இந்த நாட்களில் யானைகள் வந்து வாழை, தேங்காய், மரவள்ளிக் கிழங்கு ஆகியவற்றை உண்டு விட்டுச் செல்கின்றன".

இதுபற்றி வனசீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் பின்வருமாறு தெரிவித்துள்ளனர்.

"காட்டு யானைகளை வேறு பிரதேசங்களுக்கு விரட்டியுள்ளோம். இரவு நேரங்களில் பல்வேறு பகுதிகளில் பணிபுரிந்து வருவதால் சில அழைப்புகளுக்கு உடனடியாக வருகை தர முடியாதுள்ளது. குறிப்பிட்ட பகுதிகளுக்கு யானைவேலி அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.பணி விரைவில் தொடங்கும்.

**ஏ.ஆர்.எம்.ரபியுதீன்...**
*(திறப்பனை தினகரன் நிருபர்)*

# காரைதீவு பொறியியலாளர் அருள்நாதனின் மறைவுக்கு அவுஸ்திரேலியாவில் இரங்கல்

சிங்கப்பூரில் பொறியியலாளராக பணியாற்றிய காரைதீவைச் சேர்ந்த இளம் சமூக செயற்பாட்டாளர் அமரர் சண்முகநாதன் அருள்நாதனின் மறைவையொட்டிய இரங்கல் நிகழ்வு அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெற்றது.

அவுஸ்திரேலியாவில் வாழும் காரைதீவு நண்பர்கள் சார்பில் ஒஸ்கார் முன்னாள் தலைவரும், பிரபல சமூக சேவையாளருமான வீரக்குட்டி விவேகானந்தமூர்த்தி இந்நிகழ்வை ஏற்பாடு செய்து தனது இல்லத்தில் நடத்தினார்.

காரைதீவை பிறப்பிடமாகவும், சிங்கப்பூரை வசிப்பிடமாகவும் கொண்ட அருள்நாதன் (வயது 40) கடந்த 29 ஆம் திகதியன்று காரைதீவில் வைத்து மாரடைப்பால் திடீரென காலமானார். அவர் மரணமடைந்து இரு தினங்களில் அவரது ஞாபகார்த்த இரங்கல் நிகழ்வு, அவுஸ்திரேலியா சிட்னியில் நடைபெற்றது. அங்குள்ள அவரது காரைதீவு நண்பர்கள் பலரும் கலந்து கொண்டு அன்னாரின் உருவப் படத்திற்கு மலர்



மாலை அஞ்சலி செலுத்தினர். அந்நிகழ்வில் கலந்து கொண்ட நண்பர்கள் இரங்கல் உரை நிகழ்த்துகையில், "இளம் சமூக செயற்பாட்டாளரான பொறியியலாளர் அருள்நாதன் தமிழ் சமுதாயத்தில் ஒரு புரட்சிகர மாற்றத்தினை ஏற்படுத்த கடுமையாக உழைத்தவர். பல்வேறு அமைப்புக்களை உருவாக்கியும் அமைப்புகளில் இணைந்தும் சமுகநலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தினார்.

தான்பிறந்த மண்ணையும் மக்களையும் நேசித்து, அவர்களது வாழ்வில் எவ்வழியிலேனும் ஒளியேற்ற உழைத்தார். தனது பிறந்தஊரை முழுமையான அபிவிருத்தியை நோக்கி இட்டுச்செல்வதற்காக அல்லும் பகலும் உழைத்தவர். அருளின் அறவழி வாழ்வு போற்றுதற்குரியது. அருளின் தூரநோக்குள்ள சிந்தனையையும் அவரின் சிறந்த செயல்திறனும் தனித்துவமானவை. இந்த வெற்றிடம் மீள்நிரப்ப இயலாதது.

இளைய தலைமுறையின் ஒரு பண்பாளனாகவும் பலருக்கு முன்னோடியாகவும் திகழ்ந்தவர் அமரர் அருள். அவரது மறைவினால்துயருறும் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்" என்று குறிப்பிட்டிருந்தனர்.

**வி.ரி.சகாதேவராஜா...**
*(காரைதீவு குறூப் நிருபர்)*

# இலங்கையில் மெதடிஸ்த மிஷனரிகள் கால்பதித்து 209 வருடங்கள் நிறைவு




'கோதுமை மணியானது மண்ணில் விழுந்து மாளா விட்டால் அது தனித்திருக்கும். செத்ததேயாகில் அதிக பலன் கொடுக்கும்' (யோவான் 12:24).எனும் திருவிவிலிய வாக்கினை அர்த்தம் நிறைந்ததாக்கும் வகையில் இன்று வரையிலும் இலங்கை, இந்தியா போன்ற கிழக்கு நாடுகளில் கிறிஸ்தவ இறைபணிக்கும் அதனோடொட்டிய கல்வி மற்றும் சமூகப்பணிக்கும் அடையாளங்களாய் திருச்சபைகள், பாடசாலைகள,கிறிஸ்தவ சமூகப்பணி நிறுவனங்கள் என்பவை விளங்குகின்றன. அவை மேலைத்தேய நாடுகளில் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளிலிருந்து வருகை தந்த கிறிஸ்தவ மிஷனரிகளின் அர்ப்பணிப்பினதும் கடின உழைப்பினதும், தியாகத்தினதும் விளைவுகளாகும்.

எமது நாட்டில் இயங்கும் இலங்கை மெதடிஸ்த திருச்சபையானது இவ்விதமாக இங்கிலாந்து தேசத்திலிருந்து கிறிஸ்துவின் அன்பினை பறைசாற்ற வருகை தந்த வெஸ்லியன் மிஷனரிகளின் தியாகத்தினதும், இறைபணியினதும் அடையாளமேயாகும்.

இலங்கை மெதடிஸ்த திருச்சபையானது தனது திருப்பணி வாழ்வில்2023 ஜூன் 29 உடன் 209 வருடங்களைக் கடந்து வந்துள்ள நிலையில், திருச்சபை உருவாக்கத்திற்கான வரலாற்றுப் பின்னணியினையும், அதற்காக தங்களை அர்ப்பணித்திருந்த மிஷனரிமார்களின் தியாகத்தினையும் ஒரு தடவை திரும்பிப் பார்ப்பது அவசியம்.

போதகர் ஜோன் வெஸ்லியின் மனமாற்றம்: கி.பி 1700 களில் இங்கிலாந்தின் அங்கிலிக்கன் திருச்சபையின் குருவானவர் ஜோண் வெஸ்லி அவர்களிடத்தே ஏற்பட்ட உள்ளார்ந்த மனமாற்றமானது அக்கினியாய் பற்றியெரிந்து இங்கிலாந்து தேசம் முழுவதையும் அசைத்ததுமன்றி, திருச்சபை வரலாற்றிலேயே ஒரு புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தியிருந்தது.அதுவே மெதடிஸ்த திருச்சபையின் உருவாக்கத்திற்கு அடித்தளமாய் அமைந்திருந்தது.

துன்பங்கள், இழிவான செயல்கள் மத்தியில் வாழ்ந்த இங்கிலாந்து மக்கள் கிறிஸ்துவிற்குள்ளாய் மனமாற்றமடைந்து ஆவிக்குரிய எழுப்புதல் பெற வேண்டுமென அவர் ஜெபித்து வந்தார். தான் சார்ந்திருந்த அங்கிலிக்கன் திருச்சபையின் எதிப்புகளையும் தாண்டி இன்னலுற்ற மக்களின் மீட்சிக்காகவும், அறியாமை பாவக்கட்டுக்களில் வாழ்ந்தோருக்காகவும் பல்லாயிரக்கணக்கான ஆவிக்குரிய பிரசங்கங்களைச் செய்ததுடன், மக்களின் ஆத்மீக மீட்சிக்காக நூற்றுக்கணக்கான ஆவிக்குரிய புத்தகங்களையும் வெளியிட்டார்.

கிறிஸ்துவின் உந்துதலினாலும் ஆவியானவரின் பலத்தினாலும் திருச்சபையினரது எதிர்ப்புகளையும் தாண்டி இறைபணியுடன் ஆதரவற்றோர் நிலையங்கள், பாடசாலைகள் என சமுதாயப் பணியிலும் ஈடுபட்ட போது 'சமுதாய சிற்பி' என ஜேண் வெஸ்லி அழைக்கப்பட்டிருந்தார்.

இவ்வாறு இடையறாது தனது 88வது வயதுவரை இறைபணியிலும் சமுதாயப் பணியிலும் அயராது ஈடுபட்டு தமது திருப்பணி மூலம் பல்லாயிரக்கணக்கான மக்கள் இரட்சிப்படைய வழிவகுத்தார். இங்கிலாந்து தேசத்தில் வெஸ்லியன் மெதடிஸ் எனும் புதியதொரு திருச்சபை உருவாகி அத்திருச்சபை உலகெங்கும் பரவி இன்றுவரை கிறிஸ்துவின் பணியிலும் ஈடுபடக் காரணமாயிருந்த ஜோன் வெஸ்லி கி.பி 1791 மார்ச் மாதம் 2 ஆம் நாள் தனது உலக வாழ்வை முடித்து கத்தருக்குள் நித்திரையடைந்தார்.

## இலங்கையில் வெஸ்லியன் மிஷனரிகள்:

இங்கிலாந்தின் வேல்ஸ்ஸின் பெரோகன் கிராமத்தினைச் சேர்ந்தவர் சட்டநிபுணரும், போதகருமான டொக்டர் தோமஸ் குக் மேற்கிந்தியத் தீவுகளிலும், மேற்கு அமெரிக்காவிலும் கிறிஸ்தவத்தைப் பரப்ப ஏற்கனவே தனது செல்வத்தின் பெரும் பகுதியைச் செலவிட்டிருந்தார்.

1813 இல் லிவர்பூல் என்னுமிடத்தில நடைபெற்ற மெதடிஸ்த மகாநாட்டில் தோமஸ் குக் அவர்களின் ஆசியாவிற்கான மிஷனரிப் பயணத்திற்கு இவரைத் தலைவராகக் கொண்டு ஆறு மிஷனரிகளையும் இணைத்து மறைபரப்பு பணிக்குச் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

கி.பி 1813 டிசம்பர் 31 இல் கபல்வா, லேடி மெல்விலே ஆகிய இரு கப்பல்களில் டொக்டர் தோமஸ் குக் தலைமையில் பெஞ்சமின் குளோவ், வில்லியம் கவார்ட், அவரது மனைவி, ஜேர்ஜ் எஸ்கின்,தோமஸ் கால், ஜேம்ஸ் லின்ஞ், வில்லியம் ஓல்ட், ஓல்ட்டின் மனைவி என மிஷனரிகள் அறுவரும் புறப்பட்டனர்.



பெட்றிக் எஸ்.டி. சில்வா

கப்பல் பயணத்தின் கடுமையான நிலைமைகளிலே வில்லியம் ஓல்ட்டின் மனைவி நோயுற்று மரித்துப் போனார். கவார்ட் பயணத்திலே வியாதியுற்றார். கப்பல் இந்தியாவை அடைய 03 வாரம் இருந்தபோது 1814 மே 03 ஆம் திகதி தோமஸ் குக் மரித்துப் போனார். மரித்தவர்களைக் கடலிலேயே அடக்கம் செய்துவிட்டு கர்த்தரின் பணிக்காய் தொடர்ந்தனர்.

மெதடிஸ்த மிஷனரிகள் இலங்கையில் கால்பதித்தல்:

திருச்சபை வரலாற்றிலும், இலங்கையின் சரித்திரத்திலும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாளாக கி.பி 1814 ஜூன் 29ஆம் திகதி அமைந்தது. இங்கிலாந்திலிருந்து கிறிஸ்து இயேசுவின் ஒளியைப் பிகாசிக்கும் சுடர்களான வெஸ்லியன் மெதடிஸ்த மிஷனரிகள் இலங்கை காலி பிரதேசத்தில் கால்பதித்த நாள் அதுவாகும்.



ஜோன் வெஸ்லி



தோமஸ் குக்

இலங்கையை அடைந்த மிஷனரிகள் கி.பி 1814 ஜூலை 03 ஆம் திகதி காலி ஒல்லாந்து சபையில் தமது முதலாவது ஆராதனையை நடத்தியிருந்தனர்.

1814 ஜூலை 11 இல் இடம்பெற்ற திருப்பணி மகாநாட்டில் மிஷனரிகளின் பிரதேச மிஷனரிப் பணி தொடர்பாக முடிவு செய்யப்பட்டு பிரதேச ரீதியாக மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், காலி, மாத்தறை, கொழும்பு என அறுவரும் மிஷனரிப் பணிக்கென பிரிந்து சென்றனர். பிரவேசித்த பிரதேசங்களில் இன்னல்களை எதிர்கொணடு கிறிஸ்துவின் அன்பினை எடுத்துக்காட்டி இருளில் வாழ்ந்த மக்கள் வாழ்விலே ஒளியேற்ற இறைபணியினையும் சமூக, கல்விப் பணியினையும் ஆற்ற தங்களை அர்ப்பணித்திருந்தனர்.

தேவாலயங்கள், ஆதரவற்றோர் நிலையங்கள், மிஷனரிப் பாடசாலைகள், முதியோர் இல்லங்கள், சிறுமியர் இல்லங்கள் என்பன ஆரம்பிக்கப்பட்டு மக்கள் மனோநிலையிலும், வாழ்வியலிலும், சமூக, கலாசார,கல்வி,பண்பாட்டு ரீதியான முன்னேற்றகரமான மாற்றங்களுக்கு இவர்களது திருப்பணி காரணமாய் அமைந்திருந்தது.

இலங்கை மெதடிஸ்த திருச்சபை மிஷனரிகளின் திருப்பணியின் விளைவாக இலங்கை மக்கள் கிறிஸ்துவைக் கண்டு கொண்டதுமன்றி, தேவாலயங்களும் அமைக்கப்பட்டு கிறிஸ்துவை வழிபடுவோர் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே சென்றது. இருப்பினும் இலங்கையில் மெதடிஸ்த திருச்சபைகள் லண்டனைத் தலைமையாகக் கொண்ட நிருவாகத்தின் கீழேயே 1963 வரை இயங்கி வந்தன.

1964 இல் இடம்பெற்ற திருச்சபை மகாநாட்டில் இலங்கையிலுள்ள மெதடிஸ்த திருச்சபைகள் தனியான நிருவாகக் கட்டமைப்பினைக் கொண்டு செயற்படுவதெனத் தீர்மானிக்கப்பட்டதனடிப்படையில் இலங்கை மெதடிஸ்த திருச்சபை ஆரம்பிக்கப்பட்டு முதலாவது இலங்கை மெதடிஸ்த திரு அவையின் திருப்பேரவைத் தலைவராக அருட்பணி, முதுமாணி பெட்ரிக்.எஸ். டீ.சில்வா 1964 ஓகஸ்ட் மாதம் திருநிலைப்படுத்தப்பட்டிருந்தார்.

அது முதல் இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் திருப்பேரவையின் கீழ் திருமாவட்டங்களெனவும், சேகரங்களெனவும் நிருவாக ஒழுங்கமைப்பில் இயங்கி வருகின்றன. குருமார்கள், திருப்பணியாளர்கள், நற்செய்திப் பணியாளர்கள் மூலமாவும் சமய, சமுதாயப் பணிகளையாற்றி வருகின்றது.

இலங்கையில் மெதடிஸ்த மிஷனரிகள் கால்பதித்த நாளாகிய கி.பி 1814 ஜூன் 29 ஐ அடிப்படையாகக் கொண்டு இலங்கை மெதடிஸ்த திருச்சபையானது தனது 209 ஆவது ஆண்டினை கடந்த ஜூன் 29 இல் நினைவு கூர்ந்துள்ளது.

209 வருடங்களாக இலங்கை வரலாற்றில் பல்வேறு பணிகளையாற்றிவரும் இலங்கை மெதடிஸ்த திருச்சபை உருவாகக் காரணமாயிருந்த இங்கிலாந்தின் வெஸ்லியன் மிஷனரிமார்களை இலங்கைத் தேசம் பெருமையுடன் நினைவு கூர்ந்து மரியாதை செய்து இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றது.



**குழந்தைவேலு சற்குணானந்தன்...**
*(அதிபர்) அக்கரைப்பற்று*

# பல்கலைக்கழக பகிடிவதை கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுவது அவசியம்!

## ராகிங் கொடுமையில் ஈடுபடுவது உளப்பாதிப்பின் வெளிப்பாடு!



எமது நாட்டில் பல்கலைக்கழகக் கல்வியானது ஏராளமான மாணவர்களுக்கு எட்டாக்கனியாக உள்ளது. கல்வியில் உச்சபட்ச திறமைகளை வெளிக்காட்டி, க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளை பெறும் மாணவர்களே எமது நாட்டில் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகும் நிலைமை காணப்படுகின்றது.

இவ்வாறு பாடசாலைக் கல்வியிலிருந்து க.பொ.த. உயர்தரம்வரை கல்வியில் தமது திறமைகளை வெளிக்கொண்டு வந்து பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகும் மாணவர்கள், தொழில் மற்றும் பொருளாதார ரீதியாக பல்வேறு முன்னேற்றங்களைக் கண்டு, சமூகத்தில் நற்பிரஜையாக வாழ வேண்டுமெனும் எண்ணத்துடன் பல்கலைக்கழகத்தினுள் காலடி எடுத்து வைக்கின்றனர்.

ஆயினும், எமது நாட்டு பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதையால் சில மாணவர்களின் எதிர்காலம் கருகிப்போகும் நிலைமை காணப்படுவதுடன், ஏற்கெனவே சில மாணவர்கள் பகிடிவதை காரணமாக மரணத்தினால் காவு கொள்ளப்பட்டுள்ளனர்.

எமது நாட்டு பல்கலைக்கழகங்களில் பகிடிவதை முக்கிய பிரச்சினையாகக் கருதப்படுகின்றது. பகிடிவதைக்கு ஆளாகும் மாணவர்கள் மாத்திரமன்றி பகிடிவதையை அவதானிக்கும் மாணவர்களும் பாதிக்கப்படுகின்றனர். எமது நாட்டில், பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள 17 பல்கலைக்கழகங்கள் உள்ளன. இவற்றில் திறந்த பல்கலைக்கழகத்தில் மாத்திரம் பகிடிவதை எனும் பேச்சுக்கு இடமில்லை. ஏனைய அரசு சார் பல்கலைக்கழகங்களில் அவ்வப்போது பகிடிவதை சம்பவங்கள் பதிவாகின்றன. அண்மையில் கூட பேராதனை பல்கலைக்கழகத்தில் பகிடிவதை இடம்பெற்று, 11 மாணவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டு வகுப்புத்தடை விதிக்கப்பட்டமை தொடர்பாக பத்திரிகை செய்தியில் காணக் கிடைத்தது.

மேலைத்தேய நாட்டு பல்கலைக்கழகங்களிலும் பகிடிவதை எனும் பேச்சுக்கே இடமில்லை. மேலைத்தேய நாடுகளில் பல்கலைக்கழகங்களுக்கு புதுமுக மாணவர்களை மகிழ்ச்சிகரமாக வரவேற்கும் கலாசாரமே உள்ளது. மேலைத்தேய பல்கலைக்கழகங்களில் புதுமுக மாணவர்களுக்கு முதலாண்டு தொடங்கும் முதல் வாரத்தில் Carnival போன்றதொரு நிகழ்வை பல்கலைக்கழக நிர்வாகத்தினரும் பேராசிரியர்களும் சிரேஷ்ட மாணவர்களும் சேர்ந்து நடத்தி, புதுமுக மாணவர்களை பல்கலைக்கழகத்துக்கு மகிழ்ச்சிகரமாக வரவேற்கின்றனர்.

இதனால் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் சிரேஷ்ட மாணவர்கள், புதுமுக மாணவர்கள் எனும் எண்ணமோ, ஏற்றத்தாழ்வோ, வகைப்படுத்தலோ காணப்படுவதில்லை. இதன்போது புதுமுக மாணவர்கள், பல்கலைக்கழக சூழலினுள் சிரேஷ்ட மாணவர்களுடன் சகஜமாக பழகி, தமது உன்னதமான நட்பை வளர்க்கின்றனர்.



இந்த நடைமுறை ஏற்கெனவே எமது நாட்டு பல்கலைக்கழகங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டிருந்தால், எத்தனையோ மாணவச் செல்வங்களை, அவர்களின் வளமான எதிர்காலத்தை காப்பாற்றியிருக்கலாம்.

பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதை சம்பவங்கள் தொடர்பாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பிரதம நூலகர் கலாநிதி இராசையா மகேஸ்வரன் கருத்துத் தெரிவித்த போது, "எமது நாட்டு பல்கலைக்கழகங்களில் பகிடிவதை இடம்பெறுவதற்கு பெரும்பாலும் பிரதான காரணங்களாக சமூக, பொருளாதார இடைவெளிகள் அமைகின்றன. பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதையை இல்லாதொழிப்பதற்கு பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் எவ்வளவோ நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

பகிடிவதையை ஒழிப்பதற்காக பல்கலைக்கழக மட்டத்தில் ஒழுக்காற்று விசாரணைக்குழு, ஒழுக்கக்குழு உள்ளிட்ட பல குழுக்கள் உள்ளன. ஆயினும், அவ்வப்போது பல்கலைக்கழகங்களில் பகிடிவதைச் சம்பவங்கள் பதிவாகின்றன" என்றார்.

'பல்கலைக்கழகங்களில் பகிடிவதையை ஒழிப்பதற்கு ஒவ்வொரு ஒவ்வொரு புதிய நடைமுறைகளை தாங்கள் கையாள்வதாகவும் முன்னருடன் ஒப்பிடுகையில் தற்போது நூற்றுக்கு தொண்ணூறு சதவீதம்வரை பகிடிவதை குறைந்துள்ளது' என்றும் பல்கலைக்கழக நிர்வாகங்கள் கூறுகின்றன.

தற்போது பகிடிவதை குறைந்துள்ளமைக்கு பிரதான காரணங்களாக இரண்டு காரணங்கள் உள்ளன. முதலாவதாக, பகிடிவதை செய்யும் மாணவர்களுக்கான தண்டனை வழங்கல், குற்றவியல் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

இரண்டாவதாக, பல்கலைக்கழங்களுக்கு புதுமுக மாணவர்களை வரவேற்கும் வகையில் தற்போது 'வரவேற்பு நிகழ்வு' நடத்தப்படுகின்றது. இவ்வரவேற்பு நிகழ்வால் பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவர்களும் புதுமுக மாணவர்களும் சகஜமாக சேர்ந்து பழகும் சந்தர்ப்பங்கள் ஏற்படுவதுடன், பகிடிவதைக்கான சந்தர்ப்பங்கள் அருகிப் போகின்றன' என பேராதனை பல்கலைக்கழகத்தின் பிரதம நூலகர் இராசையாக மகேஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறிருக்க, இப்பகிடிவதை மனப்பாங்கு தொடர்பாக மட்டக்களப்பு பிராந்திய மனநல சுகாதார மருத்துவ அதிகாரியும் மட்டக்களப்பு மாவட்ட மனநல மருத்துவருமான டான் சௌந்தரராஜா தெரிவித்த போது, 'பகிடிவதை ஒரு தொற்றுநோய் போன்றது. பல்கலைக்கழகங்களிலும் அது தொற்றுநோய் போன்று பரவியுள்ளதென்றே கூற வேண்டும். ஏற்கனவே பகிடிவதையால் பாதிக்கப்பட்ட மாணவர்கள், தமக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் பட்சத்தில் புதுமுக மாணவர்களை பகிடிவதைக்கு ஆளாக்கின்றனர். ஆகையால், பகிடிவதை ஒரு சங்கிலித்தொடர் வடிவில் தொற்றுநோயாக பரவுவதாகவே கருத வேண்டும். தம்மை பலமிக்கவர்கள், அதிகாரமிக்கவர்கள் உள்ளிட்ட மன நிலைகளைக் கொண்டவர்களாக காட்டிக்கொள்ள விரும்பும் மாணவர்கள், பலவீனமான ஒருவரையோ அல்லது ஒரு குழுவினரையோ தெரிவுசெய்து பகிடிவதைக்கு ஆளாக்குகின்றனர். அதாவது, தமது பலவீனத்தை தெரிந்தும் அதற்கு இணங்கி நடக்கும் பலவீனமானவர்களே பகிடிவதைக்கு ஆளாகின்றனர்' என்றார்.

'பகிடிவதை செய்பவர்களின் மனநிலையை எடுத்து நோக்கும் போது சிறுவயதில் ஏனையோரின் அடக்குமுறைகளுக்கு, துன்புறுத்தல்களுக்கு ஆளாகி கடினமான சூழலில் வளர்ந்தவர்களே பெரும்பாலும் பகிடிவதை செய்பவர்களாக உள்ளனர். பகிடிவதை செய்பவர்கள் சமூகத்தில் அல்லது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டவர்களாக இருப்பதையும் அவதானிக்க முடியும். பகிடிவதை செய்பவர்களிடம், ஏனையோரின் மனநிலையை புரிந்து நடக்கும் பரிந்துணர்வு மனப்பான்மை

காணப்படாதென்பதுடன், குற்ற உணர்ச்சி அற்றவர்களாகவும் இருப்பர். சிலருக்கு புரிந்துணர்வு இல்லாத மனநிலை 2 வயதிலிருந்து ஆரம்பித்து விடுமென்பதுடன், இது இவர்கள் வளர்ந்த பின்னர் நிலையான மனநிலையாக மாறிவிடுமெனவும் மருத்துவ தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன. இவ்வாறானவர்களுக்கு ஏனையோரின் கஷ்டம் விளங்காதென்பதுடன், ஏனையோரை கஷ்டப்படுத்தி அதில் தாம் வெற்றியடைய வேண்டுமென்ற மனநிலையே இவர்களிடம் மேலோங்கிக் காணப்படும்.

ஆக மொத்தத்தில் தம்மை விட எவரும் மிஞ்சக்கூடாது, அச்ச உணர்வு காரணமாக தம்மை பாதுகாப்பதற்கு பகிடிவதையை சிலர் ஓர் ஆயுதமாக தமது கையில் எடுக்கின்றனர்' என, அவர் தெரிவித்தார்.

'இதேவேளை, பகிடிவதையால் பாதிக்கப்படுபவர்கள் மனதளவிலும் மூளையிலும் பாதிப்புகளை எதிர்நோக்குகின்றனர்.

மன ரீதியாக எனும் போது அச்சம், கவலை, கஷ்டமான சூழலிலிருக்கும் மனநிலை, பகிடிவதை சம்பவங்கள் திரும்பத் திரும்ப மனதில் வருதல், போதைப்பொருள் மற்றும் மதுபானம், புகைத்தல் உள்ளிட்ட தீய பழக்கவழக்கங்களுக்கு அடிமையாதல், இதன் தொடர்ச்சியாக குடும்ப, சமூக வன்முறைகளில் ஈடுபடல், விபத்துகளை எதிர்கொள்ளல், நீண்டகால மனப்பாதிப்பால் தற்கொலை ஆகியவற்றை குறிப்பிடலாம்.

மூளை ரீதியான பாதிப்பு எனும் போது ஞாபசக்தி குறைதல், கல்வியில் ஆர்வமின்மை, கல்வியை கைவிடல் ஆகியவற்றை குறிப்பிடலாம்.

சிலருக்கு பகிடிவதையால் ஏற்படும் பாதிப்பு தாமதமாகியே தெரியவரும். ஆகையால், பகிடிவதைக்கு ஆளாகும் மாணவர்களை குறைந்தபட்சம் 6 மாதங்களுக்காவது நல்ல அணுகுமுறைகளுடன் கண்காணிக்க வேண்டும்.

பகிடிவதையால் பாதிக்கப்படும் மாணவர்களுக்கு மன ஆற்றுப்படுத்துகை செய்தல், பாதுகாப்பளித்தல், நலன் விசாரித்தல் உள்ளிட்ட அணுகுமுறைகளை பல்கலைக்கழக நிர்வாகத்தினர் கடைப்பிடிக்க வேண்டும். இம்மாணவர்களை மனநல, உடல்நல பயிற்சிகளில் ஈடுபடுத்தல் வேண்டும். இசை, நடனம், யோகா, தியானம், உடற்பயிற்சி, விளையாட்டு, புத்தகங்கள் வாசித்தல், கைவேலை, நீச்சல் உள்ளிட்ட அவர்கள் விரும்பிய பொழுதுபோக்குகளில் ஈடுபடுத்தி அவர்களை சீராக்கலாம்.

பகிடிவதையால் உச்சபட்சமாக பாதிக்கப்படும் மாணவர்களுக்கு முதலில் பாதுகாப்பளித்து, தேவையேற்படின் அதற்குரிய சிகிச்சைகளை படிப்படியாக ஆரம்பிக்கும் நடைமுறையே மருத்துவத்தில் காணப்படுகின்றது' எனவும், அவர் தெரிவித்தார்.

பகிடிவதையை ஒழிப்பதற்கு தீர்வாக சில விடயங்களை நுட்பமாக கையாண்டு மாணவர்கள் மீதான கரிசனையை செலுத்த வேண்டிய கடமையை பல்கலைக்கழக நிர்வாகத்தினருடன் இணைந்து முன்னெடுப்பதற்கு பெற்றோர், சமூகத்தினர், பொலிஸார், நலன்விரும்பிகள் உள்ளிட்ட அனைவரும் முன்வர வேண்டும்.

இதற்காக தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்த இக்காலகட்டத்தில் பெற்றோர்பெற்றோர், பெற்றோர்பல்கலைக்கழக நிர்வாகத்தினர், பெற்றோர்பேராசிரியர்கள் உள்ளிட்ட இரகசிய பாதுகாப்பு வட்ஸ்அப் குறூப்களை உருவாக்கி மாணவர்கள் மீதான கரிசனையை பேணலாம். பல்கலைக்கழங்களில் மதம் சார்ந்த சிறந்த போதனைகளை வழங்கலாம்.

பல்கலைக்கழகங்களில் பகிடிவதை கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து, சிநேகபூர்வமான மாணவர் சமுதாயம் உருவாகும் பட்சத்தில் சிறந்த, நாகரிகம் மிக்க சமுதாயம் மிளிரும் என்பது கண்கூடாகும். ஆகையால், இதற்கு ஒத்துழைப்பு வழங்க அனைவரும் முன்வர வேண்டுமெனும் அதேவேளை, இதற்கு ஒத்துழைத்து நடக்க பல்கலைக்கழக மாணவர்களும் முன்வர வேண்டும்.



**ஆர்.சுகந்தினி...**

# தண்ணீருக்காக தினமும் நீண்ட தூரப் பயணம்



மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வரலாற்று பிரசித்தி பெற்ற முருகன் ஆலயத்திற்கு அருகாமையில் அமைந்திருக்கும் கல்லரிப்பு கிராமத்தைச் சேர்ந்த மக்கள் குடிநீருக்காகத் திண்டாடுகின்றனர்.

அக்கிராமத்தில் 41 குடும்பங்களைச் சேர்ந்த தமிழ் பழங்குடியின மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் கடந்த காலங்களிலே தமது குடிநீர் மற்றும் தேவைகளுக்காக ஆற்றிலும் ஓடையிலும் தண்ணீரைப் பெற்றுக் கொண்டனர்.

அந்த மக்களிடம் குடிநீர்ப் பிரச்சினை பற்றி கேட்ட போது அவர்கள் கூறியதாவது:

"சுத்தமான நீர் எடுக்க வேண்டுமாக இருந்தால் சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் நடந்து அதனைப் பெற வேண்டிய தேவையுள்ளது. முன்னர் பிரதேச சபையூடாக குடிநீர் வழங்கப்பட்டு வந்துள்ளது. அதுவும் சில நேரங்களில தாமதமாகித்தான் கிடைக்கும். அவ்வேளைகளில் ஆற்றில் இருந்து நீரைப் பெறுவோம்.

எமது ஊரில் பாடசாலை இல்லை. மாணவர்கள் சீருடைகளை இங்கு கழுவினால் அவை பழுப்பு நிறத்தில் காணப்படும். அருகிலுள்ள பாடசாலைக்குச் செல்லும் எமது மாணவர்களுக்கு அது சிரமம். ஆசிரியர்கள் சிலவேளைகளில் இந்த நிறம் பற்றி கேள்விகள் கேட்பதுண்டு.

இந்நிலையில் இங்கு குடிநீர்த் திட்டம் ஒன்றை மேற்கொள்ள வெளிநாட்டு உதவியோடு அரச சார்பற்ற நிறுவனமொன்று முன்வந்தது. Bright future international UK என்ற நிறுவனம்தான் இத்திட்டத்திற்கு நிதி உதவி வழங்கியது. இந்த குடிநீர்த் திட்டம் 31.03. 2023 இல் ஆரம்பிக்கப்பட்டது. ஆற்றில் இருந்து நீரைப் பெற்று சுத்திகரிப்புச் செய்து அதனை வழங்குவதற்கான மின்சார செலவுக்காக மாதம் 100 ரூபா வழங்குமாறு மக்களிடம் கோரப்பட்டது. மக்களும் மகிழ்ச்சியில் நூறு ரூபா வழங்கினார்கள். ஆனால் அந்த மகிழ்ச்சி ஒரேயொரு மாதம் வரைதான் நீடித்தது. ஒருமாதமே குடிநீர் கிடைத்தது. அதுவும் எதிர்பார்த்த சுத்தமான நீர் இல்லை.

ஏப்ரல் மாதம் மாத்திரமே அதனை வழங்கியிருந்தார்கள். அதன் பின்பு குடிநீர் வழங்கப்படவில்லை.

தற்போது இக்குடிநீர்த் திட்டமும் நிறுத்தப்பட்டு விட்டது. தற்போது நாங்கள் குடிநீருக்காக வெகு தூரம் செல்ல வேண்டிய அவசியம் உள்ளது.

இந்நிலையில் மக்கள் வெகுண்டெழுந்து அந்த குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவிய ஒப்பந்தக்காரரிடம் கேட்ட பொழுது அதற்குரிய இரசாயன திரவம் ஒன்று வரும். அது வருகின்ற பொழுது குடிநீர் தருவோம் என்று கையை விரித்து விட்டார். அதனால் குடிநீருக்காக திண்டாட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது". இவ்வாறு அம்மக்கள் கூறினர்.

தற்பொழுது அந்த மக்கள் குடிநீருக்காக மீண்டும் தொலைதூரம் பயணிக்க வேண்டி இருக்கின்றது. இதனை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் கவனிக்க வேண்டும் என்று அந்த மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றார்கள்.



**வி.ரி.சகாதேவராஜா...**
*(காரைதீவு குறூப் நிருபர்)*

## மத ஒற்றுமைக்கு குந்தகம்...

இல்லை. இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க புதிய சட்டமொன்றை கொண்டுவர எதிர்பார்க்கிறோம். எந்த மதத்தையும் இழிவுபடுத்தாத வகையில் அதற்கான சட்ட வரைபை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவிடம் கேட்ட கேள்விகளுக்கும் அவர் பதிலளித்தார்.

கேள்வி: தேசிய மரபுரிமைகள் உள்ள இடங்கள் மற்றும் அதற்கு அண்மையில் வாழும் மக்களின் காணி உரிமை தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் புத்தசாசன அமைச்சினால் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும்?

பதில்: தொல்பொருட்கள் விவகாரத்தில் தொல்பொருட்கள் ஆணையை மீறி யாரும் செயல்பட முடியாது. எனவே, தொல்லியல் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் சட்டத்தை அமுல்படுத்த எதிர்பார்க்கிறோம். தொல்பொருள் கட்டளைச் சட்டத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பின் அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து திருத்தம் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. அதுவரை, தற்பொழுதுள்ள தொல்பொருட்கள் கட்டளைச் சட்டம் அமுலில் இருக்கும்.

கேள்வி: சில பிக்குமாரின் செயற்பாடுகள் தொடர்பில் அண்மைக்காலமாக சமூக வலைதளங்களில் வெளியாகும் செய்திகளை நோக்கினால், புத்தசாசனத்தை அவமதிப்பதாக தெரிகிறது. சாசனத்தை அவமதிக்கும் பிக்குகளுக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

பதில்: ஒழுக்கக் கேடான செயல்களில் ஈடுபடும் அல்லது சாசனத்தை அவமதிக்கும் வகையில் செயல்படும் பிக்குமார்கள் தொடர்பில் மகாசங்கத்தினர் செயற்பட வேண்டும்.

கேள்வி:

விகாரைகளில் வளர்க்கும் யானைகள் பற்றி தற்போது அதிகம் பேசப்படுகிறது. அந்த யானைகள் சித்திரவதை செய்யப்பட்டமை தொடர்பில் அமைச்சினால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

பதில்:

வீட்டில் வளர்க்கும் பிராணிகளிடம் கருணை காட்ட வேண்டும். ஆனால் இவ்வாறான பிரச்சினை முதல் முறையாகவே எழுந்துள்ளது. முத்துராஜா யானை தொடர்பான பிரச்சினையைத் தொடர்ந்து விகாரைகளில் யானைகள் கணக்கெடுக்கும் பணியை தொடங்கியுள்ளோம். அதன்பின், யானைகளின் உடல்நிலை குறித்தும் ஆய்வு செய்யப்படும்.

கேள்வி: கடலுக்கடியில் உள்ள தொல்பொருள் மதிப்புள்ள இடங்களை பாதுகாக்க அமைச்சு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

பதில்: கடற்படைத் தளபதியுடன் நடத்திய ஆலோசனையில், கடலுக்கு அடியிலுள்ள தொல்பொருள் இடங்களை அப்படியே பேணவும் அந்த இடங்களை சுற்றுலா தளமாக மேம்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன், எமது நாட்டிலிருந்து நெதர்லாந்து, இங்கிலாந்து, ஜேர்மனி போன்ற நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ள பெறுமதிமிக்க தொல்லியல் பொருட்களை மீளப் பெறுவதற்கு அமைச்சு கலந்துரையாடல்களை நடத்தி வருகிறது. இலங்கையில் மரபுரிமையான பொருட்களை மீள வழங்க நெதர்லாந்து அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது. மேலும், இங்கிலாந்தும் தங்களிடமுள்ள ஓலைச்சுவடிகளை வழங்க உடன்பட்டுள்ளது. ஆனால் இங்கிலாந்து மற்றும் நெதர்லாந்தில் சில காலமாக பாதுகாக்கப்பட்டு வரும் இந்த பொருட்களை இலங்கைக்கு கொண்டு வந்து அந்த நாடுகளில் இருந்த அதே நிலையில் பாதுகாக்க முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. அதனால்தான் இங்கிலாந்திலிருந்து ஓலைச்சுவடிகளின் டிஜிட்டல் பிரதிகளைப் பெற திட்டமிடப்பட்டுள்ளதென்றும் அவர் தெரிவித்தார்.

## எட்டு வருடங்களின் பின் மூன்று...

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும், அடுத்த நாள் கர்ப்பிணியான இப்பெண் உயிரிழந்தார். கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டதாரியான 36 வயதான லவந்தி சதுரி ஜயசூரிய என்ற கர்ப்பிணித் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வைத்தியசாலையின் அலட்சியத்தால் இந்த துயர சம்பவம் இடம்பெற்றதாக உயிரிழந்த பெண்ணின் கணவரான அமில சமரவீர தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கருவிலிருந்த குழந்தைகளும் தாயும் உயிரிழந்தமை வைத்தியசாலையின் தவறினால் ஏற்பட்டதல்ல தென, ராகம போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ரணவீர தெரிவித்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணுக்கு பல வருடங்களாக குழந்தை இல்லாமல் இருந்தது.

இதனால், சோதனைக் குழாய் மூலம் பிரசவத்துக்காக கருப்பையில் கருமுட்டை பொருத்தி தனியார் வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சிகிச்சைகள் அரச வைத்தியசாலைகளில் செய்யப்படுவதில்லை. இவற்றை தனியார் வைத்தியசாலைகள் பல இலட்சம் ரூபாவைப் பெற்றுச் செய்கின்றன. இதன்போது பல கருமுட்டைகளை பொருத்துகிறார்கள்.

குறைந்தபட்சம் ஒரு கரு முட்டையாவது நன்றாக வளரும் என்ற நம்பிக்கையில் இவ்வாறு செய்யப்படுகிறது. எனினும், இந்த தாய்க்கு மூன்று கருமுட்டைகளும் கருவுற்றிருந்தது. எவ்வாறாயினும், சுமார் இருபது வாரங்களில், அவர் கடுமையாக நோய்வாய்ப்பட்டு ராகம மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த தாயையும் அவரது இரண்டு குழந்தைகளையும் காப்பாற்ற வைத்தியசாலையின் ஊழியர்கள் கடுமையாக போராடியதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஜல்லிக்கட்டுப் போட்டியை...

மாகாண ஆளுநரும், தமிழ்நாடு ஜல்லிக்கட்டு பாதுகாப்பு நலச் சங்க மாநிலத் தலைவருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு ஜல்லிக்கட்டு பாதுகாப்பு சங்க மாநில கௌரவ தலைவராகவுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் ஆளுநர் செந்தில் தொண்டமான், திருச்சிக்கு சென்றவேளை

அவருக்கு அச்சங்கத்தின் திருச்சி மாவட்டம் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. சங்கத்தின் தலைவா் ஒண்டிராஜ், மாநில செயலா் சூரியூா் ராஜா உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனா்.

பின்னர் திருச்சியிலுள்ள சின்ன மிளகுப்பாறையில் ஞாயிற்றுக்கிழமை இரவு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கூறியதாவது:

தமிழக மீனவா்கள் வேண்டுமென்றே எல்லை தாண்டி மீன் பிடிக்கச் செல்வதில்லை. கடல் அலையின் சீற்றம் காரணமாக சில நேரங்களில் எல்லை தாண்ட நேரிடுகிறது. அப்போது இலங்கை அரசால் கைது செய்யப்படும் தமிழக மீனவா்களையும், அவா்களது படகுகளையும், இலங்கை அரசிடம் பேசி, மீட்டுக் கொடுக்கும் பணியை கடந்த 25 ஆண்டுகளாகச் செய்து வருகிறோம். எங்களது பணி தொடரும்.

தமிழர்களின் பாரம்பரியம், கலாசாரம் மற்றும் வரலாற்றுடன் தொடா்புடையது வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு. இலங்கையில் ஜல்லிக்கட்டு போட்டியை நடத்த நடவடிக்கை எடுப்போம் என்றும் இவ்வாறு அவர் கூறினார்.

## தேசிய அடையாள அட்டைகள்...

பிரிவு அதிகாரிகள் நேற்று புதன்கிழமை (05) இவரை கைது செய்தனர். ஹற்றன் உள்ளிட்ட நாட்டின் பல பாகங்களில் வசிக்கும் தோட்டத்தொழிலாளர்கள் மற்றும் பிரதேசவாசிகளின் தேசிய அடையாள அட்டைகளையே இவர், தம்வசம் வைத்திருந்துள்ளார்.

ஹற்றன் வில்பிரட்புர பிரதேசத்தை வசிப்பிடமாகக்கொண்ட இரண்டு பிள்ளைகளின் தந்தையான 58 வயதான நபரே, இது தொடர்பில் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர், தேசிய அடையாள அட்டை, பிறப்புச்சான்றிதழ், வங்கி அட்டைகளை ஆகியவற்றை பிணையாக வைத்துக்கொண்டு அதிக வட்டிக்கு பணம் கொடுக்கும் வர்த்தகத்தில் ஈடுபடுபவரென விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், பணம் பெற்றுக்கொண்டவர்களின் பெருவிரல் அடையாளம் வைக்கப்பட்டுள்ள வெற்றுக்கடதாசிகள் சிலவும் மற்றும் கையொப்பம் இடப்பட்டுள்ள கடதாசிகள் உள்ளிட்ட ஆவணங்கள் சிலவும் இவரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

தேசிய அடையாள அட்டை காணாமல் போவது தொடர்பில் ஹற்றன் பொலிஸ் நிலையத்துக்கு நாளாந்தம் கிடைக்கும் முறைப்பாடுகள் அதிகரித்துள்ளது.இதையடுத்து, பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணைகளிலே, இந்த வர்த்தகம் அம்பலமானது. இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் சந்தேக நபரின் வீடு சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதன்போதே, ஒரு தொகை தேசிய அடையாள அட்டைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.




# 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' நூல் வெளியீட்டு விழா

*தினகரன் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் கலாசூரி இ. சிவகுருநாதனின் இருபதாம் ஆண்டு நினைவாக 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' எனும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 16.07.2023 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கம் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர் தலைமையில் நடைபெறவுள்ளது.*

*இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலை வகிக்க லேக்ஹவுஸ் நிறுவன ஆசிரியர் பீடப் பணிப்பாளர் சிசிர பரணதந்திரி பிரதம அதிதியாக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.*

*இந்நிகழ்வில் தமிழ் வாழ்த்தைத் தொடர்ந்து வாழ்த்துரைகளை கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் நடராஜா காண்டீபனும், 'ஞானம்' பிரதம ஆசிரியர் 'சாகித்யரத்னா' தி. ஞானசேகரனும் நிகழ்த்துவர். தொடர்ந்து கவி வாழ்த்து' நிகழ்வை சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்ளும் தகவல் அறியும் ஜனாதிபதி ஆணைக்குழு உறுப்பினர் ஏ.எம். நகியா, எழுத்தாளர் லெ. முருகபூபதி (அவுஸ்திரேலியா) வழங்குவர். நூல் அறிமுகவுரையை தில்லை நடராஜா (மேனாள் மேலதிக செயலாளர் கல்வியமைச்சு) வழங்குவார். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெறும்.*

*இறுதியில் கே. பொன்னுத்துரையின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுறும். இந்நிகழ்வுகளை மேமன் கவி தொகுத்து வழங்குவார்.*

*இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கலாசூரி இ. சிவகுருநாதன் ஞாபகார்த்தக்குழு அழைப்புவிடுத்துள்ளது.*

## நீர் வழங்கல் துறையின்...

காணிப்புக் கட்டமைப்பு மற்றும் அது தொடர்பாக இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள எதிர்கால நடவடிக்கைகள் குறித்து இங்கு விரிவாக ஆராயப்பட்டது. இந்த செயற்பாடுகளின் முன்னேற்றம் குறித்து மாதாந்தம் மீளாய்வு செய்யுமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கிய சாகல ரத்நாயக்க, நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்குகின்ற ஆதரவுக்கு நன்றி தெரிவித்தார். நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச். எஸ். சமரதுங்க மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களைச் சேர்ந்த அரச அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## பதிவு செய்யப்படாத மருந்துகளை...

செய்யப்படாத மருந்துகளை பயன்படுத்துவதில்லை என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நிலையியற் கட்டளை 27இன் 02கீழ் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சஜித் பிரேமதாச இது தொடர்பான கேள்வியில்,

நாட்டில் விற்பனையில் உள்ள மருந்துப் பொருட்களின் உற்பத்தி, பாதுகாப்பு,தரம் மற்றும் செயல்திறனுக்கான தொடர்புடைய தரநிலைகளை பூர்த்தி செய்வது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகார சபையின் அந்த பொறுப்புகளை சரிவர முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்

இதற்கு அமைச்சர் தொடர்ந்தும் பதிலளி்க்கையில்,

கண்டி வைத்தியசாலையில் இடம்பெற்ற கண் சொட்டு மருந்து தொடர்பிலேயே எதிர்க்கட்சித்தலைவர் குற்றம் சாட்டியிருந்தார்.

ஆனால், அந்த மருந்து 07 வருடங்கள் பயன்படுதப்பட்டு ள்ளது. அது பதிவு செய்யப்பட்ட மருந்தாகும். அவ்வாறி ல்லாமல் பதிவு செய்யப்படாத தரம் குறைந்த மருந்துமல்ல. குறித்த மருந்து 07வருடங்களாக பயன்படுத்தப்படுவதுடன் 53 நாடுகளுக்கு அது அனுப்பப்படுவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## நயினாதீவு நாகதீப விகாரையில்...

கௌரவத்தை வழங்கினர்.இந்நிகழ்வு யாழ். நயினாதீவு மணிமேகலை அரங்கில் புதன்கிழமை காலை 09 மணியளவில் நடைபெற்றது.

விகாரையில் நடைபெற்ற வழிபாட்டு நிகழ்வுகளுடன் விழா நாயகனான விஹாராதிபதி நவதகல பதுமகீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரருக்கு, நாதஸ்வர, மேள தாளங்களுடனும், கண்டிய நடனத்துடனும் மண்டபத்துக்கு செங்கம்பள வரவேற்பளிக்கப்பட்டது.

இதன்போது வீதியில் இரு மருங்கிலும் மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் கூடி, விஹாரதிபதிக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

நிகழ்வில் நூற்றுக்கணக்கான பௌத்த பிக்குகள் கலந்து கொண்டிருந்தனர். நிகழ்வில் இந்து மற்றும் முஸ்லிம் மதகுருமார் மற்றும் பொது மக்களும் பங்கேற்றனர்.

## அத்தியாவசிய மருந்துகள்...

ஹொரண பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கருத்து வெளியிட்ட அவர், 350 அத்தியவசிய ஔடதங்கள் கைவசம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

சுமார் நூறு ஔடதங்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. எவ்வாறிருப்பினும், ஔடதங்கள் தங்களுக்கு தொடர்ச்சியாக கிடைத்து வருவதாகவும் சுகாதார அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

## அஸ்வெசும நிவாரணக் கொடுப்பனவு....

ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் இதற்கான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் (10) வரை மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இதனிடையே, அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு திட்டத்தினால் சமுர்த்தி கொடுப்பனவை இழந்த பல்வேறு தரப்பினர் நாட்டின் பல பகுதிகளில் (04) எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

## நாட்டில் விசேட வைத்திய...

விசேட வைத்தியர்களின் பற்றாக்குறை நிலவுவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர், வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளரிடம் வினவிய போது, இம்மாதம் 30 ஆம் திகதிக்குள் சுமார் 30 விசேட வைத்திய நிபுணர்கள் ஓய்வு பெறவுள்ளதாக கூறினார்.

தற்போது நிலவும் வைத்தியர் பற்றாக்குறைக்கு தீர்வாக தற்போது ஓய்வு பெற்றுள்ள விசேட வைத்தியர்களை மீண்டும் பணிக்கு அமர்த்த முடியுமா? என்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

இதனிடையே, விசேட வைத்தியர்களின் ஓய்வு பெறும் வயதெல்லையை 63 ஆக அதிகரிப்பதற்கான அமைச்சரவை பத்திரம் இவ்வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## திருமலை, KKS, பொத்துவில்,...

மன்னார், புத்தளம், கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை வழியாக பொத்துவில் வரையிலான கடற்பரப்பில் காற்றின் வேகம் அதிகரித்துள்ளது. இதுகுறித்து கடற்றொழிலாளர்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேற்குறிப்பிட்ட கடற்பரப்பு பகுதிகளில் மணிக்கு 60 முதல் 70 கிலோமீற்றர் வரையில் காற்றின் வேகம் அதிகரித்துள்ளதாகவும் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, மத்திய மாகாணத்தில் தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் மகாவலி நீர்த்தேக்கத்தின் இரு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இதனால் வினாடிக்கு 2,500 கனஅடி நீர் விக்டோரியா நீர்த்தேக்கத்துக்கு வெளியேற்றப்படுவதாகவும் மகாவலி நீர்த்தேக்கத்தின் பொறியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அப்பகுதியை அண்மித்து வசிக்கும் மக்களை அவதானத்துடன் செயற்படுமாறும் பொறியியலாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## நடாஷா எதிரிசூரியவுக்கு...

வைக்குமாறு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று (05) உத்தரவிட்டிருந்த நிலையிலேயே, உயர்நீதிமன்றம் அவரை பிணையில் விடுவிக்க உத்தரவிட்டுள்ளது.

ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து அந்த நிகழ்ச்சியின்போது பௌத்த மதத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டமைக்கு எதிராக, குற்றப்புலனாய்வு திணைக்களம் கோட்டை நீதிவான் நீதிமன்றில் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தது.

## மண்டைதீவு காணிகள்...

எதிர்ப்புத் தெரிவிக்க சகலரையும் ஒன்றிணையுமாறு ஶ்ரீதரன் எம்,பி,அழைப்பு விடுத்துள்ளார்.

வெலுசுமனவில் கடற்படை முகாம் ஒன்றை அமைப்பதற்காக இக்காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளன. எதிர்வரும் (12) புதன்கிழமை இதற்கான அளவீட்டுப் பணிகளை ஆரம்பிக்கப்போவதாக நில அளவைத் திணைக்களம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இதையடுத்தே,ஶ்ரீதரன் எம்பி இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

அளவீட்டுப் பணிகளை தடுத்து நிறுத்துவதற்காக, மக்கள் பிரதிநிதிகள், காணி உரிமையாளர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் அன்றைய தினம் (12) காலை.7.30 மணியளவில் மண்டைதீவு கிழக்கில் நடைபெறவுள்ள எதிர்ப்புப் போராட்டத்தில் இணைந்து கொள்ளுமாறும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

## இராகலை கீழ்பிரிவிலுள்ள...

வீடுகள் முற்றாக எரிந்து தீக்கிரையாகின.

இந்த வீடுகளில் குடியிருந்த 20 குடும்பங்களைச் சேர்ந்த 75 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தோட்டத்தில் ஆறாம் இலக்க தொடர்குடியிருப்பிலேயே இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து பொலிஸாருக்கும், தீயணைப்பு பிரிவினருக்கும் தகவல் வழங்கப்பட்டது. எனினும், அப்பகுதி மக்கள் மாத்திரம் ஒன்றிணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சியில் இறங்கினர்.

இத்தீவிபத்தால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படாதபோதிலும், பெருமளவில் பொருட்சேதங்கள் ஏற்பட்டுள்ளன. வீட்டு உபகரணங்கள், முக்கிய ஆவணங்கள், தங்க நகைகள், பாடசாலை மாணவர்களின் சீருடைகள் மற்றும் பாடப் புத்தகங்கள் தீக்கிரையாகியுள்ளதாக மக்கள் தெரிவித்தனர்.

## இலகு ரயில் போக்குவரத்து...

ஜப்பானிய இராஜதந்திர தூதரகத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தைகள் முன்னெடுப்படவுள்ளன.இதற்கான யோசனையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையில் முன்வைத்தார்.

## தேசிய கடன் மறுசீரமைப்பு...

தெருக்கள் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன ஆகியோர் பங்குபற்றும் ஹிரு தொலைக்காட்சியின் 'பலய' விவாதநிகழ்ச்சிஇன்று இரவு 10.30 மணிக்கு ஒளிபரப்பாகவுள்ளது.

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பாக பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட யோசனைக்குரிய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார விடயங்கள் இங்கு கலந்துரையாடப்படவுள்ளன.

## தொழில் பற்றிய... (03 ஆம் பக்கத் தொடர்)

*இதனைத் தொடர்ந்து, இந்த வரைவு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவையின் அனுமதி பெறப்படும்.இதன் பின்னர், சட்டத் திருத்த திணைக்களத்தினால் அடிப்படை திருத்த சட்ட மூலம் தயாரிக்கப்பட்டு தொழில் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்படும். இதுதொடர்பில் அமைச்சு கவனம் செலுத்தி, இறுதித் திருத்த சட்ட மூலம் சட்ட திருத்த திணைக்களத்தால் தயாரிக்கப்படும். இதனைத் தொடர்ந்துமும்மொழிகளிலும்திருத்த சட்ட மூலம் மொழிபெயர்க்கப்படவுள்ளது. இது, அரசியல் யாப்புக்கு உட்பட்டதா? என்பதை கண்டறிவதற்காக சட்ட மாஅதிபர் திணைக்களத்திடமும் சமர்பிக்கப்படும். சட்ட மா அதிபரின் அவதானிப்புகளைப் பெற்ற பின்னர், இச்சட்டமூலம் அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படும்.*

*திருத்த சட்ட மூலத்துக்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்ததும் அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் பிரதானியிடம் கையளித்து, அதனை அச்சிட்ட பின்னர் பாராளுமன்ற ஒழுங்கு பத்திரத்தில் சேர்ப்பதற்கு பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கையளிக்கப்படும்.*

## உள்ளூராட்சி... (03 ஆம் பக்கத் தொடர்)

*கோரப்பட்ட போதிலும் இதுவரை தேர்தல் நடைபெறவில்லை. எனவேதான் உள்ளூராட்சி பிரதேச செயலாளர்களுடன் இணைந்து சபையின் அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. அதற்கிணங்க கலந்துரையாடி தீர்மானங்களை எடுத்து முன்னேற எதிர்பார்க்கின்றோம்.*

*இப்போது எமது பொருளாதாரம் முறைப்படுத்தப்பட்டுள்ளது. நாம் மீண்டும் தலை நிமிர்ந்து நிற்க முடியும் என்பதை உலகின் ஏனைய நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன. அதற்காக அவர்கள் எங்களுக்கு உதவுகிறார்கள் என்றும் பிரதமர் தெரிவித்தார்.*

# தினகரன் Business

## செலான் வங்கியின் சிறந்த பாங்கசூரன்ஸ் செயற்பாட்டாளர்களுக்கு யூனியன் அசூரன்ஸ் வெகுமதிகள்

இலங்கையில் முதல்தர பாங்கசூரன்ஸ் சேவைகளை வழங்கும் யூனியன் அசூரன்ஸ், செலான் வங்கியின் பாங்கசூரன்ஸ் நாளிகைக்கான 2022 ஆம் ஆண்டுக்குரிய வருடாந்த விருதுகள் வழங்கும் இரவு நிகழ்வை அண்மையில் முன்னெடுத்திருந்தது. 'Galactic Excellence' எனும் தொனிப்பொருளில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில், சிறப்பாக செயலாற்றியிருந்த பிராந்தியங்கள், கிளைகள் மற்றும் ஊழிய அங்கத்தவர்களுக்கு வெகுமதிகள் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் யூனியன் அசூரன்ஸ் பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரி செனத் ஜயதிலக, செலான் வங்கியின் மனித வளங்கள் பிரிவின் பிரதி பொது முகாமையாளர் ஜயந்த அமரசிங்க, செலான் வங்கியின் நுகர்வோர் வங்கியியல் பிரிவின் பிரதி பொது முகாமையாளர் இயுஜின் செனெவிரட்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.










வைபவத்தின் போது, வங்கி கிளைகள் பிரிவுக்கான பாங்கசூரன்ஸ் சம்பியன் கேடயத்தை அனுராதபுர கிளை வெற்றியீட்டியிருந்ததுடன், வங்கி பிராந்தியங்களில் பாங்கசூரன்ஸ் சம்பியன் கேடயத்தின் வெற்றியாளராக மெட்ரோ II தெரிவாகியிருந்தது. அனுராதபுரக் கிளை, முகத்துவாரக் கிளை மற்றும் கொழும்பு கோல்ட் சென்ரர் கிளை ஆகியன கிளைப் பிரிவில் பிரதம நிறைவேற்று அதிகாரியின் விருதை சுவீகரித்ததுடன், பிராந்திய பிரிவில் மெட்ரோ II வெற்றியீட்டியிருந்தது.

கொழும்புப் பங்குப்பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட இலங்கையின் மாபெரும் நிறுவனமான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்சின் அங்கத்துவ நிறுவனமாக யூனியன் அசூரன்ஸ் திகழ்கின்றது. துறையில் மூன்று தசாப்த கால வெற்றிகரமான சேவையை யூனியன் அசூரன்ஸ் பூர்த்தி செய்துள்ளதுடன் சந்தை மூலதனவாக்கமாக ரூ. 19.4 பில்லியனைக் கொண்டுள்ளது. ஆயுள் நிதியமாக ரூ. 57.7 பில்லியனையும், 2023 மார்ச் மாதமளவில் கொண்டிருந்தது.

## புதிய தங்கக் கடன் மத்திய நிலையத்தை நுரைச்சோலையில் திறந்த HNB FINANCE



இலங்கையின் முன்னணி நிதி நிறுவனமான HNB FINANCE PLC இன் 58ஆவது தங்கக் கடன் மத்திய நிலையம் கற்பிட்டி நுரைச்சோலையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் HNB FINANCE இன் முகாமைத்துவப் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சமிந்த பிரபாத் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதுடன், நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ உறுப்பினர்கள் உட்பட பெருமளவானோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

கற்பிட்டி மற்றும் அருகிலுள்ள பகுதிகளில் தங்கக் கடன் சேவைகளுக்கான தற்போதைய தேவைக்கு ஒரு தீர்வாக, நிறுவனம் இந்த புதிய HNB FINANCE தங்கக் கடன் மத்திய நிலையத்தை அமைத்துள்ளது. வாடிக்கையாளர் தேவைகளை துல்லியமாக கண்டறிந்து நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட Gold Loan, Gold Plan மற்றும் VIP Gold Loan சேவைகள், நிதி நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட சிறந்த தங்கக் கடன் தீர்வுகள் என்று சந்தேகத்திற்கு இடமின்றி கூறலாம். HNB FINANCE Gold Loan சேவையானது மூன்று நிமிடங்களில் மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் ஒரு பவுண் தங்கத்திற்கான அதிக முன்பணத் தொகையைப் பெறுவதற்கான வாய்ப்பை வழங்குகிறது.

## Coca-Cola - Uber Eats இணைந்த "Ride for Recycling" திட்டம்



Coca Cola Beverages Sri Lanka Limited (CCBSL) மற்றும் Uber Eats ஆகியன பிளாஸ்டிக் கழிவுகளை பொறுப்புடன் அகற்றுவதற்காக 'Ride for Recycling' என்ற தனித்துவமான வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த திட்டத்தின் மூலம் பொதி விநியோகச் சேவை (Courier Partners) பங்காளிகள் கொழும்பில் உள்ள வீடுகள் மற்றும் உணவகங்களில் இருந்து நேரடியாக PET பிளாஸ்டிக்கை சேகரிக்க முடியும்.

இந்த முன்முயற்சியின் ஒரு பகுதியாக, CCBSL மற்றும் Uber Eats ஆகியவை பிளாஸ்டிக் மாசுபாட்டை கட்டுப்படுத்துவதற்கு எதிராக போராடுவதற்கும் சுற்றுச்சூழலுக்கு சாதகமான மாற்றத்தை உருவாக்குவதற்கும் பொதுமக்கள் மற்றும் உணவக பங்குதாரர்களை ஊக்குவிப்பதன் மூலம் சுற்றுச்சூழல் மீதுள்ள பொறுப்பை ஊக்குவிக்கும். பொதுமக்கள் தங்கள் வீடுகளில் அடிக்கடி பயன்படுத்தப்படும் PET பிளாஸ்டிக் பொருட்களை சேகரிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அதாவது குளிர்பான போத்தல்கள், தண்ணீர் போத்தல்கள், ஜூஸ் டின்கள், கை மற்றும் பாத்திரங்களைக் கழுவும் திரவ போத்தல்கள் மற்றும் பிளாஸ்டிக் அடையாளக் குறியீடு '1' என பெயரிடப்பட்ட மற்ற பிளாஸ்டிக் போத்தல்கள். Uber Eats Courier Partners ஆர்டரை விநியோகிக்க அவர்களின் வீட்டு வாசலுக்கு வந்ததும் இந்த பொருட்களை வழங்கலாம். ஆர்டர்களை எடுக்கும்போது PET போத்தல்களை சேகரித்து Uber Eats Courier Partners களுக்கு வழங்கவும் உணவக பங்குதாரர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

## நிலைபேறான அபிவிருத்தி மற்றும் சிறுவர் உரிமைகள்; வர்த்தக சபையை ஆரம்பித்துள்ள யுனிசெப் ஸ்ரீலங்கா



நாட்டில் சிறுவர் உரிமை மற்றும் நிலைபேறான அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்கில் யுனிசெப் அமைப்புக்கும், முன்னணி வணிகத் தலைவர்கள் மற்றும் தீர்மானம் எடுப்பவர்களுக்கு இடையில் மூலோபாயக் கூட்டாண்மையை ஏற்படுத்தி வர்த்தக சபையொன்றை யுனிசெப் ஆரம்பித்தது.

இந்த வர்த்தக சபையானது சிறுவர்களின் உரிமைகளுக்காகப் போராடுவதற்கும், இலங்கையில் உள்ள சிறுவர்கள் மற்றும் இளையோரின் நலன்களுக்காகவும் செயற்பட அர்ப்பணிப்புடன் செல்வாக்குச் செலுத்தக்கூடிய தனியார் துறையிலுள்ள பிரமுகர்கள் அடங்கிய குழுவை ஒன்றிணைத்துள்ளது.

தெரிவு செய்யப்பட்ட வணிகத் தலைவர்கள் வர்த்தக சபையில் தமது நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதை விடவும் தனிநபர்களாகப் பிரதிநிதித்துவம் வழங்குகின்றனர்.சிறுவர் மற்றும் இளையோர் தொடர்பான நிலைமைகளை மேம்படுத்துவதற்கான உத்திகள், முயற்சிகள் மற்றும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டிய விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கு வர்த்தக சபையின் உறுப்பினர்கள் அவ்வப்போது ஒன்றுகூடுவார்கள்.

"வணிகத் தலைவர்கள் மற்றும் தீர்மானம் எடுப்பவர்களுக்கு உடனுழைப்புடன் கூடிய தளத்தை உருவாக்கும் நோக்கில் யுனிசெப் ஸ்ரீலங்கா வர்த்தக சபையை ஆரம்பிப்பதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்" என யுனிசெப் ஸ்ரீலங்காவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கிறிஸ்டியன் ஸ்கூக் தெரிவித்தார். "இந்தச் சபையின் ஊடாக, இலங்கையிலுள்ள சிறுவர்களின் வாழ்க்கையில் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் நிலையான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கும் தனியார் துறையின் சக்தியைப் பயன்படுத்துவது இதன் நோக்கமாக அமைந்துள்ளது" என்றார்.

## சுவ அரண: குழந்தைநல நோய் அறிகுறி சிகிச்சை நிலையம் மஹரகமவில் திறப்பு



இலங்கையின் முதலாவது குழந்தைநல நோய் அறிகுறி சிகிச்சை நிலையமான சுவ அரண புற்றுநோயுடன் கூடிய குழந்தை நோயாளிகளுக்காக கதவுகளை அகலத் திறக்கிறது. இந்த முன்னோடித் திட்டம் சுகமளிப்பதற்கான ஸ்தலமாக இருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்டதாகும். இது இலங்கையில் புற்றுநோயுடன் கூடிய குழந்தை நோயாளிகளுக்கு பிள்ளைகளுக்கு உடல் ரீதியான, உணர்வுரீதியான, உளவியல்ரீதியான சிகிச்சைகளை ஊக்குவிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு, உதவியுடனான பராமரிப்புச் சூழலை முழுமையாகக் கொண்டு வருவதற்குரிய குழந்தைநல நோய் அறிகுறி சிகிச்சை இடப்பரப்பிற்குரிய தேவையை பூர்த்தி செய்கிறது.

சுவ அரணவில் வலி மற்றும் நோய் அறிகுறி முகாமைத்துவம், சமூகஉளவியல் உதவிகள், கலைகள் மற்றும் இசை மூலமான சிகிச்சைகள், வாழ்க்கையின் இறுதிக்கட்ட மற்றும் ஆறுதல் உதவிகள் உள்ளடங்கிய நவீன தொழில்நுட்பமும், சமகாலத்திற்கேற்ற பராமரிப்பு சேவைகளும் உள்ளதுடன், இது பிள்ளைகளுக்கும், குடும்பத்தவர்களுக்கும் சிறந்த புகலிடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆறு மாடிக் கட்டடத்தில் நோயாளிகளுக்கு நான்கு மாடிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இவற்றில் குடும்பங்களுக்கான 32 அறைகள் உண்டு. இது தவிர, மேல் மாடி பூங்கா, கீழ்மாடி உணவு அறை, பிரத்தியேக சமையலறை, பொழுதுபோக்கு அம்சங்கள் போன்றவையும் இருக்கின்றன. தமது 40 வயதில் புற்றுநோயால் இறந்த இந்திரா ஜயசூரியவின் மறைவையடுத்து உருவாக்கப்பட்ட இந்திரா புற்றுநோய் நிதியமானது, வட அமெரிக்க மேற்குப் பிராந்திய இலங்கை மருத்துவ சங்கமும் (SLMANA WR), ஸ்தாபனங்கள், சேவை நிறுவனங்கள், குடும்ப நிதியங்கள் போன்றவற்றின் கூட்டமைப்பும் இணைந்த கூட்டு பங்காளித்துவமாகும். இந்த நோய் குணப்படுத்தல் நிலையத்திற்கு ரொஷான் மஹாநாம நிதியம், லயன்ஸ் கழக சர்வதேச ஸ்தாபனம் (Lions District 306B2) MJF நற்பணி மன்றம், விஜேராம குடும்ப மன்றம், அவுஸ்திரேலியாவின் ப்ரின்ஸ் குழுமம் ஆகியவை நன்கொடை செய்திருக்கின்றன.

## பொருளாதார சரிவில் இருந்து சீனாவை மீட்க புதிய பொருளாதார கொள்கை வகுக்க வேண்டுகோள்

கோவிட் முழு அடைப்பின் பின்னர் திறந்துவிடப்பட்ட சீனா, தான் எதிர்கொண்ட பொருளாதார சரிவில் இருந்து மீளமுடியாமல் பின்னடைவுகளை அடுத்தடுத்து எதிர்நோக்கி வருவதால், சீனாவின் உயர் அரச ஆலோசகர்கள், அந்நாடு புதிய பொருளாதார தூண்டல்களை கொள்கைகளாக முன்நிறுத்த பொருளாதார கொள்கை வகுப்பாளர்கள் முன்வர வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனினும் அந்நாட்டின் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் விவகார சபை இம்மாதம் கூடித் தீர்மானங்களை எடுக்கும்போதுதான் பொருளாதார மறுமலர்ச்சிக்கான புதிய அறிவிப்புகள் வெளியாகும் என சீன அவதானிகள் கருதுகின்றனர்.

இதேசமயம், ஆண்டின் முதல் காலாண்டில் நேரடி அந்நிய முதலீடு 34 சதவீதத்தால் வீழ்ச்சி அடைந்துள்ளதாகவும், வீடமைப்பு துறை நெருக்கடிக்கு ஆளாகியிருப்பதாகவும், ஆதன விற்பனை, புதிய வீடுகளை அமைத்தல் என்பன குறிப்பிடத்தக்க வீழ்ச்சியை சந்தித்துள்ளதாகவும் தெரிகிறது. சீன உள்ளூராட்சி மன்றங்கள் வருமான இழப்பு காரணமாக தமது முதிர்ச்சி அடைந்த கடன்களை திருப்பிச் செலுத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

சீனாவில் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்குக் காரணமாக விளங்கும் சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர்கள், உற்பத்தித் தேக்கம் காரணமாக கடன்களை திருப்பி செலுத்த முடியாமல் பணியாளர்களை வேலை நீக்கம் செயது வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## செய்மதிகளை பறக்கவிட்ட பூட்டான் கல்லூரி மாணவர்கள்



செய்மதி ஒன்றை விண்ணில் பறக்கவிட்ட ஐந்தாம் ஆண்டு நிறைவை ஒட்டி பூட்டானில் இரண்டு கல்லூரிகள், பத்து செய்மதிகளை பறக்கவிடும் போட்டியை நடத்தின.

விஞ்ஞான, தொழில்நுட்ப கல்லூரி மாணவர் அணிகளும், ஜிக்மே பொறியியல் கல்லூரி அணிகளும் நாம்செலிங் நதிக்கரையோரமாக ஒன்றுகூடி தமது சொந்த தயாரிப்புகளான செய்மதிகளை ட்ரோன்களின் உதவியுடன் விண்ணில் பறக்கவிட்டதோடு அவை எடுத்த புகைப்படங்கள் மற்றும் தகவல்களை பதிவு செய்தனர். இச்செய்மதிகள் மாதிரி செய்மதி என அழைக்கப்படக்கூடியவை. இம் மாதிரிகள் ஒவ்வொன்றும் ஒரு கிலோ எடையும் 50 ஆயிரம் பூட்டான் காசுகளுக்கு உட்பட்ட உற்பத்தி செலவுடன் வடிவமைக்கப்பட்டு பறக்க விடப்பட்டன. செய்மதிகளை உருவாக்க விஞ்ஞானிகளாக இருக்க வேண்டிய அவசியம் கிடையாது. கல்லூரி மாணவர்களாலும் சாத்தியமாகும் என்பதை நிரூபித்துள்ளோம் என பிரதான ஏற்பாட்டாளர்களின் ஒருவர் தெரிவித்தார். இரண்டு நாள் செய்மதி பறக்கவிடும் போட்டியின் பின் தெரிவு செய்யப்படும் வெற்றி அணிக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

செவ்வாய்க்கிழமை 2023.07.04
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 5165
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 15,329,838.00
ஆங்கில எழுத்து: K
வெற்றி இலக்கங்கள்: 2 8 3 5 6 5

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம்: 3407
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 67,826,922.00
ஆங்கில எழுத்து: E
வெற்றி இலக்கங்கள்: 31 33 56 71

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 1620
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 13,251,889.52
வெற்றி இலக்கினம்: துலாம்
வெற்றி இலக்கங்கள்: 8 6 5 0 3 0

**ராசி சுப பலன்** Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 474
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 2,591,754.40
வெற்றி இலக்கினம்: மகரம்
வெற்றி இலக்கங்கள்: 01 13 31 49
விசேட இலக்கினம்: மகரம்

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம்: 1195
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 97,935,017.20
ஆங்கில எழுத்து: G
வெற்றி இலக்கங்கள்: 40 74 77 78

**Mega POWER**
சீட்டிழுப்பு இலக்கம்: 1513
அடுத்த மெகா சுப்பர் பரிசு: ரூ. 334,141,442.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து: I
சுப்பர் இலக்கம்: 24
வெற்றி இலக்கங்கள்: 07 18 52 58

# கிழக்கின் குரல்



# மாளிகைக்காடு பிரதேசத்தில் தீவிரமடையும் கடலரிப்பு

## கட்டுப்படுத்த பைசால் காசிம் எம்.பி. நடவடிக்கை





(கல்முனை விசேட, காரைதீவு குறூப் நிருபர்கள்)

மீண்டும் மாளிகைக்காடு பிரதேசத்தில் தீவிரமடைந்து வரும் கடலரிப்பை கட்டுப்படுத்துவதற்கு,பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் அவசர நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக மாளிகைக்காடு கிழக்கு வட்டார முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் எம்.எச்.நாஸர் தெரிவித்தார்.

கடலரிப்பை கட்டுப்படுத்துவதற்கான முதற்கட்ட தற்காலிக ஏற்பாடாக உடனடியாக லியோ பேக்கில் மண் நிரப்பி கரையோரத்தை அரிப்பிலிருந்து பாதுகாப்பதற்கான வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு, கரையோரம் பேணல் திணைக்களம் முன்வந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இப் பிரதேசத்தில் தீவிரமடைந்துள்ள கடலரிப்பு காரணமாக கலாசார மண்டபம் உள்ளிட்ட கட்டிடங்களும் வாடிகளும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மீனவர் அமைப்புகளும் தானும் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமின் கவனத்திற்கு இப்பிரச்சினையை கொண்டு சென்றதையடுத்து, செவ்வாய்க்கிழமை (04), அதிகாரிகள் சகிதம் அவர் இப் பகுதிக்கு விஜயம் செய்து நிலைமைகளை ஆராய்ந்தார்.

அம்பாறை மாவட்ட கரையோரம் பேணல் திணைக்களப் பொறியியலாளர் எம். துளசிதாஸன், காரைதீவு பிரதேச செயலாளர் ஜே.ஜெகராஜன், கல்முனை மாவட்ட கடற்றொழில் உதவி ஆணையாளர் எஸ்.ஸ்ரீரஞ்சன் மற்றும் உத்தியோகத்தர்கள் சிலரும் இதில் பங்கேற்றிருந்தனர்.

இவ்வுயர்மட்டக் குழுவினர் சேதமடைந்த இடங்களைப் பார்வையிட்டதுடன், மாளிகைக்காடு அந்நூர் ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகம், ஜனாஸா நலன்புரி அமைப்பு, மொத்த மீன் வியாபார வர்த்தக சங்கம், ஆழ்கடல் மீன்பிடிச் சங்கம், சிறு படகு உரிமையாளர் சங்கம் உள்ளிட்ட பிரதிநிகளுடன் கலந்துரையாடியிருந்தனர். இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமின் வேண்டுகோளுக்கு அமைவாக முதற்கட்ட ஏற்பாடாக லியோ பேக்கில் மண் நிரப்பி கரையோரத்தை அரிப்பிலிருந்து பாதுகாப்பதற்கும் இவ்வேலைத் திட்டத்தை வியாழக்கிழமை (06) ஆரம்பிப்பதற்கும் அதனைத் தொடர்ந்து நிரந்தத் தீர்வொன்றை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக கரையோரம் பேணல் திணைக்களப் பொறியியலாளர் எம்.துளசிதாஸன் உறுதியளித்ததாக அமைப்பாளர் எம்.எச்.நாஸர் மேலும் தெரிவித்தார்.



"அஸ்வெசும" நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுகள் தொடர்பான மேன்முறையீடுகளை ஏற்றுக்கொள்ளும் பணி அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அகமட் ஷாபீர் தலைமையில் நடைபெற்றுவருகின்றது. இதில் மேன்முறையீட்டுக்குழு அங்கத்தினர்களான நிருவாக கிராம உத்தியோகத்தர் ஜஃபர் மற்றும் தலைமைபீட சமுர்த்தி முகாமையாளர் ஏ.எம்.ஹமித் ஆகியோரும் கலந்து கொண்டனர்.
(படம்: திராய்க்கேணி தினகரன் நிருபர்)

# கூட்டுறவு தினத்தை முன்னிட்டு துவிச்சக்கர வண்டி பயணம்

## ஏறாவூரில் மகத்தான வரவேற்பு

(ஏறாவூர் சுழற்சி நிருபர்)



'நிலையான அபிவிருத்திக்கான கூட்டுறவு' எனும் தொனிப்பொருளில் 101ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தினை முன்னிட்டு, முன்னாள் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தரும், துவிச்சக்கர வண்டி ஓட்ட வீரருமான வை. கைலாயநாதன் (வயது68) துவிச்சக்கர வண்டிப் பயணம் ஒன்றினை ஆரம்பித்துள்ளார்.

தனது சொந்த ஊரான யாழ்ப்பாணத்திலிருந்து 01ஆம் திகதி கூட்டுறவு விழிப்புணர்வுக்காக ஆரம்பித்துள்ள இந்த துவிச்சக்கர வண்டி சுற்றுப்பயணத்தின் மூன்றாம் நாள் திங்கட்கிழமை (03) அவர் ஏறாவூரை வந்தடைந்தார்.

ஏறாவூரை வந்தடைந்த அவரை ஏறாவூர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எம்.எல்.ஏ. லத்தீப் தலைமையிலான குழுவினர், ஏறாவூர் கூட்டுறவு வைத்தியசாலை முன்றலில் அவருக்கு மாலை அணிவித்து வரவேற்பு நிகழ்வொன்றினை நடாத்தி அவரை உற்சாகப்படுத்தி வழியனுப்பி வைத்தனர்.

இந் நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே. தங்கவேல், கூட்டுறவு பிரதம அலுவலக பரிசோதகர் எம்.ஐ. ஜிப்ரி, சங்க பொது முகாமையாளர் யூ.எல். சபீர், கூட்டுறவு வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் ஏ.எம். அமீனுதீன், கூட்டுறவு வைத்தியசாலை முகாமையாளர் ஏ.எம். உவைஸ் அல் ஹபீல் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## பீடாதிபதியாக எம்.எச்.ஏ.முனாஸ் தெரிவு

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எச்.ஏ. முனாஸ், அப் பல்கலைக்கழகத்தின் அரபு மற்றும் இஸ்லாமிய கற்கைகள் பீடத்தின் பீடாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். அக்கரைப்பற்றைச் சேர்ந்த இவர், அண்மையில் தனது புதிய கடமையை பல்கலைக்கழகத்தில் வைத்து பொறுப்பேற்றுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பலத்த காற்றினால் குடியிருப்பு பகுதிகள் சேதம்

தோப்பூர் குறூப் நிருபர்

தோப்பூர் பிரதேசத்தில் செவ்வாய்க்கிழமை (4) திடீரென வீசிய பலத்த காற்றுடன் கூடிய மினி சூறாவளி காரணமாக, பாடசாலை மற்றும் குடியிருப்பு பகுதிகள் சேதமடைந்துள்ளன.

தோப்பூர் அல்ஹம்றா மத்திய கல்லூரியின் இரண்டு மாடிக் கட்டடத்தின் மேல் கூரையின் சீட் பறந்து கீழே விழுந்துள்ளதோடு, சில வீடுகளின் கூரைச் சீட்கள் பறந்துள்ளதையும் காண முடிகின்றது.

பலத்த காற்று காரணமாக பயிர்ச் செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## மூதூர் சண்பகவள்ளியில் விசேட பூஜையும் ஒன்றுகூடலும்

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் சண்பகவள்ளி வித்தியாலயத்தில் இருந்து, இவ்வருடம் 05 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதை முன்னிட்டு, பெற்றோர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட பூஜை வழிபாடும், மாணவர்களின் மேலதிக பரீட்சை வழிகாட்டல் தொடர்பான பெற்றோர் ஒன்றுகூடலும் செவ்வாய்க்கிழமை (04) பாடசாலை மண்டபத்தில் இடம் பெற்றது.

இப்பாடசாலையில் நடைபெறும் சகல நிகழ்வுகளிலும் பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் மற்றும் ஆசிரியர்கள் என ஒருமித்து பல்வேறு நிகழ்வுகளையும் நடாத்திவரும் நிலையில், மாணவர்களின் கல்விநலன் சார்ந்த விடயங்களில் விசேட பூஜை வழிபாடுகளையும் நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், என பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

## கோபுரம் வீழ்ந்து ஐவருக்கு காயம்

(ரொட்டவெவ குறூப் நிருபர்)

கந்தளாய் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த தொலைத் தொடர்பு கோபுரம் வீழ்ந்ததில் ஐவர் காயமடைந்துள்ளதாக தெரிய வருகின்றது.

இச் சம்பவம் செவ்வாய்க்கிழமை (04) பிற்பகல் இடம் பெற்றுள்ளது.

வேகமாக வீசிய காற்றினால் கந்தளாயில் நிர்மாணிக்கப்பட்டிருந்த எஸ் எல் டி மொபிடல் நிறுவனத்துக்கு சொந்தமான தொலைதொடர்பு கோபுரமே தபால் கந்தோர் அலுவலகத்தில் விழுந்துள்ளதாகவும், அங்கு கடமையாற்றிய ஐவர் காயமடைந்துள்ளதாக தெரிய வருகின்றது.

காயமடைந்த ஐந்து பேரும் கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக, வைத்தியசாலை பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இதனால் தொடர்பு சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

## அதிபர் வெற்றிடங்களை நிரப்ப விண்ணப்பங்கள் கோரல்

(பெரியநீலாவணை தினகரன் நிருபர்)

கல்முனை கல்வி வலயத்தில் வெற்றிடமாகவுள்ள எட்டு பாடசாலைகளுக்கான அதிபர் வெற்றிடத்தினை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள், கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளரால் கோரப்பட்டுள்ளன.

மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி, மருதமுனை ஸம்ஸ் மத்திய கல்லூரி, காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி, பாண்டிருப்பு மகா வித்தியாலயம், பெரியநீலாவணை விஷ்ணு மகா வித்தியாலயம், நற்பிட்டிமுனை சிவசக்தி மகா வித்தியாலயம், சாய்ந்தமருது மல்ஹறுல் ஸம்ஸ் மகா வித்தியாலயம், நிந்தவூர் அல்மதீனா மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கான அதிபர் விண்ணப்பங்களே கோரப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்திலுள்ள அதிபர் சேவையிலுள்ள மிகை ஊழியர் சேவை தவிர்ந்த, உத்தியோகத்தர்கள் வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசுடன் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக விண்ணப்பத்தினை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

# முன்னைய காலத்தில் கூட்டுறவு ஒரு பலமான சக்தியாக இருந்தது

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)



101ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு, கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில், தேசிய ரீதியில் கூட்டுறவு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் சைக்கிள் ஓட்ட வீரர் ஓய்வு பெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் வை.கைலாயநாதனால் சைக்கிள் ஓட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மட்டு.மாவட்ட பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாண கூட்டுறவு திணைக்கள பணிப்பாளர் நடராஜா சிவலிங்கம் தலைமையில் இவ் வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து கடந்த சனிக்கிழமை இந் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டு, திருமலை ஊடாக திங்கட்கிழமை (03) மட்டக்களப்பை இவர் வந்தடைந்தார்.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக இராஜாங்க அமைச்சர் ச.வியாழேந்திரன் கலந்து கொண்டு அவரை கௌரவித்தார்.

இதன்போது இராஜாங்க அமைச்சர் இங்கு உரையாற்றுகையில், கடந்த காலங்களில் கூட்டுறவு தனியான அமைச்சாக இருந்தது, தற்போது அவ்வாறு இல்லை. அது வர்த்தக வாணிப அமைச்சுக்குள் உள்ளது. முன்னைய காலத்தில் கூட்டுறவு என்பது ஒரு பலமான சக்தியாக இருந்தது. சில நாடுகளில் அது பலமாக உள்ளது என்றார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து ஆரம்பமான இப்பயணம் இவர் அம்பாறை நோக்கி செல்ல உள்ளதுடன், அங்கிருந்து மலையகம் சென்று, மீண்டும் யாழ்ப்பாணத்தை சென்று தனது சாதனையை நிறைவு செய்ய உள்ளார் .

இந்த வயதான காலத்திலும் சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக தனது சாதனையை செய்ய உள்ளார்.

இந் நிகழ்வில் கூட்டுறவு திணைக்கள உயர் அதிகாரிகள், மட்டக்களப்பு மாவட்ட கோட்டை முனை விளையாட்டு கழகத்தின் பிரதிநிதிகள், அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# ஒரு இலட்சம் தொழில் வாய்ப்பில் 32 பேருக்கு நிரந்தர நியமனம்

## மட்டு. மாவட்ட அரசாங்க அதிபரால் வழங்கிவைப்பு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



ஒரு இலட்சம் வேலை வழங்கும் திட்டத்தின் கீழ் பல்நோக்கு அபிவிருத்தி அலுவலக உதவியாளர்களாக நியமிக்கப்பட்டு, அரச அலுவலங்களில் பயிலுநர்களாக பணியாற்றிவந்தவர்களுக்கு மட்டக்களப்பில் நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் 11 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கடமையாற்றிவந்த பயிலுனர்கள் 32 பேருக்கும், அலுவலக உதவியாளர் சேவையின் தரம் (3) இன் பதவிக்கான நியமனக் கடிதங்கள், மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பத்மராஜாவினால் செவ்வாய்க்கிழமை (04) மாவட்ட செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

கடந்த 3 வருட கால பல்நோக்கு அபிவிருத்தி அலுவலக உதவியாளர்களாக கடமையாற்றியவர்களுக்கே இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதன் போது அரசாங்க அதிபர் உரையாற்றுகையில், புதிதாக நியமனம் பெற்ற உத்தியோகத்தர்கள் நேர்மையாகவும் நீதியாகவும் கடமைகளை செய்வதுடன், அரச விஸ்வாசியாக செயற்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். இந் நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந், மாவட்டச் செயலக நிர்வாக உத்தியோகத்தர் கே. மதிவண்ணன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# மதுபான சாலை திறப்பதற்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம்

(காரைதீவு குறூப் நிருபர்)




அம்பாறை மல்வத்தை கிராமத்தில் புதிதாக மதுபான சாலை திறப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அப் பகுதி மக்கள் ஒன்றிணைந்து (5) புதன் கிழமை எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் பெரியோர், இளைஞர்கள், யுவதிகள், மாணவர்கள் என சுமார் இருநூறுக்கும் மேற்பட்டவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். "மல்வத்தை பூர்வீக தமிழ் கிராமத்தை அழிக்க திட்டமிட்ட சதி", மதுபான சாலையை அமைக்க நாம் இடம் தர மாட்டோம், உட்பட பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாகைகளை சுமந்தவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டம் இடம் பெறும் செய்தியை அறிந்த அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்து மக்களின் மகஜரையும் பெற்று கொண்டார்.

அம் மகஜரை அம்பாறை அரசாங்க அதிபர், சம்மாந்துறை பிரதேச செயலாளர் பொலிஸ் பொறுப்பதிகாரி, மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் போன்றோருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

# மலைச்சாரல்





# தொடரும் சீரற்ற காலநிலை

- ஹற்றன் கல்வி வலய பாடசாலைகளுக்கு விசேட விடுமுறை
- 13 குடும்பங்கள் பாதிப்பு

**(ஹற்றன் விசேட,ஊவா சுழற்சி,ஹற்றன் சுழற்சி, தலவாக்கலை விசேட, கம்பளை, நோட்டன் பிரிட்ஜ் நிருபர்கள்)**

மலையகத்தில் தொடர்ச்சியாக நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மக்களின் இயல்புவாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட தமிழ் மற்றும் சிங்கள மொழி மூல பாடசாலைகளுக்கு நேற்று முதல் விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக ஹற்றன் வலயக்கல்விப்பணிப்பாளர் பி.ஸ்ரீதரன் அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் இதுவரை 13 குடும்பங்களைச் சேர்ந்த 49 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலைய பணிப்பாளர் நிஹால் பண்டார தெரிவித்தார்.

அம்பகமுவ பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஹற்றன் மேற்கு, ஹற்றன் வடக்கு, ரொசல்ல, செனன் ஆகிய கிராமசேவகர் பிரிவுகளில் கடும் காற்று, சரிவுகள் போன்ற அனர்த்தங்களினால் 09 குடும்பங்களைச் சேர்ந்த 30 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நுவரெலியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட கொட்டகலை டிரேட்டன், யுனிபீல்ட், குடா ஓயா,மிஹிந்துபுர ருவான் எலிய ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் மண்சரிவு மற்றும் வீட்டு சுவர் இடிபாடு காரணமாக 04 குடும்பங்களைச் சேர்ந்த 19 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மொத்தமாக 13 குடும்பங்களைச் சேர்ந்த 49 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மஸ்கெலியா மரே தோட்டத்தில் மக்கள் குடியிருப்பு பகுதியில் பாரிய கல்லொன்று சரிந்து விழும் அபாயம் நிலவுகின்றது. இதனால் பாதுகாப்பு கருதி 10 குடும்பங்களைச் சேர்ந்த 49 பேர் இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலைய பணிப்பாளர் நிஹால் பண்டார தெரிவித்தார்.

திம்புள்ள பத்தனை கிறேக்கிலி தோட்டப்பகுதியில் நேற்று மண்மேட்டுடன் கூடிய கொங்கிறிட் கட்டடம், வீட்டின் மீது சரிந்து வீழ்ந்தமையால் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

இதன்போது வீட்டில் யாரும் இல்லாமையால் உயிர் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை. எனினும் உபகரணங்கள், சமையலறை, படுக்கையறை முற்றாக சேதமடைந்துள்ளதாகவும் பிரதேச மக்கள் மேலும் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பான இடங்களில் தங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை தோட்ட நிர்வாகம் மேற்கொண்டுள்ளது. அவர்களுக்கான நிவாரண உதவிகளை பெற்றுக் கொடுக்கவும் திம்புள்ள பத்தனை கிராம அதிகாரியூடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கம்பளையில் வீட்டின் கூரை மீது மரம் முறிந்து விழுந்ததில் இருவர் காயங்களுடன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இதில் சிறுவர்கள் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

மேலும் சில இடங்களில் போக்குவரத்து நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்திருந்தன. நேற்றுமுன்தினம் இரவு கொழும்பிலிருந்து பதுளை நோக்கி வந்த தபால் ரயில் வட்டவளப் பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவு அனர்த்தம் காரணமாக மரம் சரிந்து ரயிலின் மீது விழுந்தமையால் தடம் புரண்டுள்ளது. இதன் காரணமாக கொழும்பு பதுளை ரயில் போக்குவரத்து பலமணி நேரம் பாதிக்கப்பட்டிருந்தது.

கடும் மழை காரணமாக ஹற்றன் கொழும்பு, ஹற்றன் நுவரெலியா, மஸ்கெலியா, நல்லதண்ணி, தியகல, நோட்டன் உள்ளிட்ட பிரதான வீதிகளில் பல இடங்களில் மண்திட்டுக்கள் சரிந்து வீழ்ந்துள்ளதுடன் பல இடங்களில் மண்சரிவு அபாயமும் ஏற்பட்டுள்ளன. இதனால் இவ்வீதிகளில் பயணிக்கும் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக பயணிக்குமாறு போக்குவரத்து பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் கலுகல, பிட்டவல, கினிகத்தேனை, கடவலை, தியகல,வட்டவளை போன்ற பிரதேசங்களிலும் ஹற்றன் நுவரெலியா பிரதான வீதியில் குடாகம, கொட்டகலை, தலவாக்கலை, சென்கிளையார், நானுஓயா, ரதல்ல உள்ளிட்ட பகுதிகளிலும் அடிக்கடி பனிமூட்டம் காணப்படுவதனால் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக வாகனங்களை செலுத்துமாறு பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

நேற்று (05) அதிகாலை நுவரெலியா நகரில் அமைந்துள்ள ரீகல் சினிமா அரங்கிற்கு அருகில் பாரிய மரம் ஒன்றின் கிளை மின் கம்பம் மீது உடைந்து வீழ்ந்தமையால் அப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டதுடன் நகரத்துக்கான மின்சாரமும் தடைப்பட்டது.

## புதிய கல்விப் பணிப்பாளர்கள் நியமனம்!

**(காவத்தை தினகரன் விசேட நிருபர்)**



சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களத்துக்கு புதிதாக ஒரு மேலதிக கல்விப் பணிப்பாளர் மற்றும் நான்கு வலயக் கல்விப்பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதம் நேற்றுமுன்தினம் (4) சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திஸாநாயக்கவினால் வழங்கி வைக்கப்பட்டது.

சப்ரகமுவ மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளராக டி.ஏ.எஸ். எஸ்.விஜேசிங்க, தெஹியோவிட்ட வலயக் கல்விப் பணிப்பாளராக எச்.சீ.ஹரிச்சந்திர, பலாங்கொடை வலயக் கல்விப் பணிப்பாளராக ஏ.எல்.பீ.அமரசூரிய, இரத்தினபுரி வலயக் கல்விப் பணிப்பாளராக டபிள்யூ.எச்.என்.எம்.தயானந்த, நிவித்திகலை வலயக் கல்விப் பணிப்பாளராக டீ.டீ.ரூபசிங்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். நியமனம் பெற்ற கல்வி பணிப்பாளர்கள் மற்றும் இலங்கை நிர்வாக சேவையில் முதலாவது தரத்தை சேர்ந்தவர்களும் ஆவார். இவர்கள் நேர்முக பரீட்சையில் கூடுதலான புள்ளிகளையும் பெற்றவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### சென்னையில் 11ஆவது தமிழாராய்ச்சி மாநாடு

## பேராதனைப் பல்கலை பிரதம நூலகர் கலாநிதி ஆர்.மகேஸ்வரன் பங்கேற்பு

**(மாவத்தகம நிருபர்)**

பதினோராவது தமிழாராய்ச்சி மாநாடு சென்னையிலும் மலேசியாவிலும் நடைபெறவுள்ளது.

பதினோராவது தமிழாராய்ச்சி மாநாடு ஏற்பாட்டுக்குழுவினர் இம்முறை இரண்டாக பிரிந்து ஒரு சாரார் மாநாட்டை சென்னையிலும் மற்றைய பிரிவினர் மலேசியாவிலும் நடத்த திட்டமிட்டுள்ளனர்.

அதில் சென்னை மாநாடு நாளை 7ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை சென்னை ஆசிய வியல் நிறுவன வளாகத்தில் நடைபெறவுள்ளது. இம்மாநாட்டில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பிரதம நூலகர் கலாநிதி ஆர். மகேஸ்வரன் தனது ஆய்வு கட்டுரையான 'தற்கால தமிழ் இலக்கியத்தில் அறிவியல் தமிழ், கணனித் தமிழ் வளர்ச்சியில் இலங்



கைப் பல்கலைக்கழக நூலகங்களின் வகிபாகம்' எனும் தலைப்பில் தமது ஆய்வு கட்டுரையை சமர்ப்பிக்கவுள்ளார்.

இதற்காக அவர் இந்தியா பயணமாகின்றார். இவர் ஆய்வாளராக பங்குக் கொள்ளும் மூன்றாவது உலக தமிழாராய்ச்சி மாநாடு இதுவாகும்.

## ஹோட்டல் அறையில் யுவதி மர்ம மரணம்

### தற்கொலையென சந்தேகம், மூவர் கைது

இறக்குவானை பகுதியில் ஹோட்டல் அறையொன்றிலிருந்து யுவதியொருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் ஆரம்பகட்ட விசாரணைகள் மேற்கொண்டுள்ளதுடன்மூவர்கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இறக்குவானை பகுதியைச் சேர்ந்த 22 வயதான யுவதி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் இறக்குவானையைச் சேர்ந்த 23 வயதான இளைஞன் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட விசாரணைகளில் யுவதி தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

சடலம் மீதான பிரேத பரிசோதனைகள் இதுவரை முன்னெடுக்கப்படவில்லையென ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவருகின்றது.

எனினும், முழுமையான விசாரணைகள் நிறைவடைந்ததன் பின்னரே உயிரிழப்புக்கான காரணத்தை வெளிப்படுத்த முடியுமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை இறக்குவானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் உயிரிழந்த யுவதியின் சடலம் கஹவத்தை வைத்தியசாலையில் தற்சமயம் வைக்கப்பட்டுள்ளது. கடந்த (04) மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாதம்பை பகுதியிலுள்ள ஹோட்டல் அறையொன்றுக்கு யுவதியும் இளைஞனொருவனும் சென்றுள்ளனர்.

சிறிதுநேரத்தில் இளைஞன் அறையை விட்டு வெளியே சென்று திரும்பி அறைக்கு வந்த போது யுவதி அறையில் தூக்கில் தொங்கிய நிலையில் கிடந்துள்ளார்.

இதனையடுத்து இளைஞன் ஹோட்டல் ஊழியரின் உதவியுடன் யுவதியை மீட்டு வைத்தியசாலை அனுமதித்த போதும் யுவதி உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் அறிவித்துள்ளனர்.

**இறக்குவாணை இந்திக்க குமார**

## இராகலை தோட்டத்தில் திடீர் தீ விபத்து





இராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராகலை கீழ் பிரிவு தோட்டத்தில் திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இத்தோட்டத்தின் 20 குடியிருப்புகள் அடங்கிய இரண்டு பகுதிகளை கொண்ட இலக்கம் (06) தொடர் வீட்டு லயத்திலேயே தீ விபத்து சம்பவம் நேற்று காலை 10.30 மணியளவில் இடம்பெற்றதாக இராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை. அதேநேரத்தில் இராகலை பிரதேசத்தில் கடும் காற்றுடன் மழையும் பெய்து வருகிறது. தீ விபத்து சம்பவத்தில் 20 குடியிருப்புகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தோட்ட மக்கள் பெரும் போராட்டத்துக்கு மத்தியில் தீயை கட்டுப்படுத்தினர். பாதிக்கப்பட்டவர்களை தோட்ட வைத்தியசாலையில் தங்கவைப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இவர்களுக்கான நிவாரண உதவிகளை தோட்ட நிர்வாகமும், அனர்த்த முகாமைத்துவ நிலையம், நுவரெலியா பிரதேச சபை ஆகியன ஊடாகவும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரையும் கண்டறியப்படவில்லை என இராகலை பொலிஸார் தெரிவித்தனர். நுவரெலியா பொலிஸ் கைரேகை அடையாளப்பிரிவுடன் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

## மத்திய மாகாண வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கூட்டம்



**(அக்குறணை குறூப் நிருபர்)**

மத்திய மாகாண கல்வி வலயங்களைச் சேர்ந்த வலயக் கல்விப்பணிப்பாளர்களின் கூட்டமொன்று அண்மையில் மத்திய மாகாண ஆளுநர் காரியாலயத்தில் நடைபெற்றது. மத்திய மாகாணத்தில் கல்வித்தரத்தை மேம்படுத்துவது தொடர்பாக இதன் போது கலந்துரையாடப்பட்டது. இதில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூகமகே கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில், சிறந்த கல்வியை வழங்குவதன் ஊடாக மாணவர்களை நல்வழிப்படுத்த முடியும். வலயக்கல்விப்பணிப்பாளர்கள் இப்பணியை சிறப்புடன் செய்வார்களாயின் எதிர்காலம் சிறப்பாக அமையுமென அவர் தெரிவித்தார்.

# முஸ்லிம் சமூகத்தின் தேசிய நலனுக்காக பாடுபட்ட அப்ஸல் அஹமட் மரைக்கார்



**இவர் சமூகச் செயற்பாட்டாளர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர், பாகிஸ்தான் நாட்டின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி, கண்டி முஸ்லிம் லீக், கண்டி முஸ்லிம் வர்த்தகச் சங்கம் ஆகியவற்றின் ஆலோசகர், கண்டி கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசல், கண்டி லைன் ஜும்ஆப் பள்ளிவாசல் ஆகிய இரு பள்ளிவாசல்களின் பிரதான நிர்வாக சபைகளின் தலைவர்.**



சோனகர், போராஸ், மேமன், மலாய் முஸ்லிம் சமூக அங்கத்தவர்களின் ஒன்றிணைந்த ஆதரவுடன் இலங்கை தேசிய முஸ்லிம் பேரவை அமைப்பின் ஏற்பாட்டில் கொரோனாவினால் உயிரிழந்த முஸ்லிம்களது உடல்களை கௌரவமான முறையில் நல்லடக்கம் செய்ய பணிபுரிந்த அப்ஸல் அஹமட் மரைக்கார் அவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்றது.

இலங்கை தேசிய முஸ்லிம் பேரவையின் தலைவர் அமான் அஷ்ரப் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வைத்திய கலாநிதி பேராசிரியர் கமால்டீன் கலந்து கொண்டார்.

போராஸ் சங்கத்தின் தலைவர் ஹுஸைமான் ஜபர்ஜீ, மேமன் சங்கத்தின் தலைவர் ஏ. ஜி. எம். யாசின், மலாய் சங்கத்தின் தலைவர் தஸ்லீம் ரஹ்மான் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரஃப், அப்ஸல் அஹமட் மரைக்கார் அவர்களின் பாரியார் ரிஸ்வியா மரைக்கார், சுகாதார அமைச்சின் கொரோனா தொற்றுப் பிரிவின் பொறுப்பாளர் வைத்தியர் அன்வர் ஹம்தானி, அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் தலைவர் ரிஸ்வி முப்தி, அகில இலங்கை பள்ளிவாசல்கள் சம்மேளத்தின் தலைவர் அஸ்லம் உத்மான், கண்டி மாவட்டப் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் கே. ஆர். ஏ. சித்தீக் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.



தொழிலதிபர் சமூகச் செயற்பாட்டாளர் அப்ஸல் அஹமட் மரைக்கார் அவர்களுக்கு நன்றி பாராட்டும் விழா ஒரு வரலாற்றுப் புகழ்மிக்க விழா. ஒரு சமூகப் பணியாளரை ஒரே சமூகத்தைச் சேர்ந்த பல அங்கத்தவர்கள் சேர்ந்து பாராட்டுவது சிறப்பானது.

அவர் பொதுவாக தம் சமூகத்திற்கு பாரிய பங்களிப்பை நல்கியவர். கொரோனா கால கட்டத்தில் அவர் ஒவ்வொரு ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்கின்ற விடயங்களில் ஆற்றிய பங்களிப்பு இலங்கை முஸ்லிம்களுடைய வரலாற்றில் யாராலும் மறைக்கவோ மறுக்கவோ முடியாததொன்றாகத் திகழ்கிறது. அவ்வகையில் அப்ஸல் அஹமட் மரைக்கார் எல்லா முஸ்லிம் சமூக அங்கத்தவர்களது மனதிலும் பெயர் குறிப்பிட்டு பிரார்த்தனை செய்யக் கூடிய ஒருவராக திகழ்கிறார்.



நன்றி பாராட்டுவது மனித குலத்தின் மனசாட்சி. முஸ்லிம் சமூகத்தின் தேசிய நலனுக்காக பாடுபட்ட தலைவர்களை நாம் எப்பொழுதும் நன்றி மறவாமல் பாராட்டுவதைப் போல அப்ஸல் அஹமட் மரைக்காருக்கும் நாம் நன்றி பாராட்டும் விழா நடத்துவதில் நாம் பெருமிதம் அடைகின்றோம்.

நாடு முற்றாக முடக்கப்பட்ட காலம். ஒவ்வொருவரும் தத்தம் உயிர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக போராடிக் கொண்டிருந்த கொரோனா கால கட்டத்தில் சுகாதார அமைச்சுடனும். அதனுடன் சம்பந்தப்பட்ட அனைத்து உயர் அதிகாரிகளுடனும் தொடர்புகளைப் பேணி நாடளாவிய ரீதியில் கொரோனாவினால் உயிரிழந்த உடல்களை நல்லடக்கம் செய்வதற்கு மஜ்மா நகர் மையவாடிக்கு எடுத்துச் செல்வதற்கான ஒரு குழுவினை உருவாக்கி அதனை முகாமைத்துவம் செய்தவர் அப்ஸல் அஹமட் மரைக்கார்.



இவர் சமூகச் செயற்பாட்டாளர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர், பாகிஸ்தான் நாட்டின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி, கண்டி முஸ்லிம் லீக், கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கம் ஆகியவற்றின் ஆலோசகர், கண்டி கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவசால், கண்டி லைன் ஜும்ஆப் பள்ளிவாசல் ஆகிய இரு பள்ளிவாசல்களின் பிரதான நிர்வாக சபைகளின் தலைவர். சிங்கள, முஸ்லிம், தமிழ், கிறிஸ்
வத சமூகங்களுக்கிடையிலான நட்புறவுக்குப் பாலமாகத் திகழ்ந்து வருபவர் என்ற பல்வேறு முகங்களை கொண்டு விளங்குகிறார்.

கொழும்பு மாவட்டம் உள்ளிட்ட மேல் மாகாணம், தென் மாகாணம் ஆகிய இரு மாகாணங்களிலும் கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் அஸ்லம் உத்மான் ஹாஜியார், மத்திய மாகாணம், வட மத்திய, வடமேல், சப்ரகமுவ, வடக்கு ஆகிய மாகாணங்களை உள்ளடக்கியதாக அவர் உப தலைவராக இயங்குகின்ற கண்டி பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் கே. ஆர். ஏ. சித்தீக் தலைமையிலான குழுவினர்கள் இக்கால கட்டத்தில் நேரம் காலம் பாராது மிகுந்த தியாக அர்ப்பணிப்போடு சேவையாற்றினர். கிழக்கு மாகாணத்தில் நேரடியாக தங்களுடைய உடல்களை மஜ்மா நகரில் அடக்கம் செய்தனர். இவருடைய செயற்பாடுகளுக்கு துணையாக அமைச்சர் அலி சப்ரி, அமைச்சர் ஹாபிஸ் நஸீர் ஆகியவர்களுடன் சுகாதார அமைச்சின் கொரோனா பிரிவின் பொறுப்பாளர் வைத்தியர் அன்வர் ஹம்தானி ஆகியோர் முக்கியத்துவம் பெறுகின்றனர்.

இவ்வாறு கொரோனா கால கட்டத்தில் சமூக இயங்கு தளத்தில் ஒரு புதிய பரம்பரையை உருவாக்கியவராக அப்ஸல் அஹ்மட் மரைக்கார் விளங்குகிறார். கொரோனாவினால் உயிர் இழந்த உடல்களை தகனம் செய்யும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக யாருக்கும் வெளியே தெரியாமல் ஒரு தனித்துவமான பாணியில் அமைதிப் போராட்ட முயற்சி நடத்தினார். ஒட்டமா



வடி மஜ்மா நகர் மையவாடி உருவாவதற்கு அமைச்சர் ஹாபிஸ் நஸீருக்குப் பின்புலமாக இருந்து செயற்பட்டார். அந்த மையவாடியின் அபிவிருத்திக்கு தேவையான சகல உதவிகளை வழங்கினார். அந்த வகையில் அப்ஸல் அஹமட் மரைக்கார் இலங்கை முஸ்லிம் சமூகம் ஒரு



போதும் மறந்து விட முடியாத ஒரு சமூக நேயப் போராளியாகப் பார்க்கப்படுகிறார். . நல்லதொரு எதிர்காலம் என்ற ஒன்றுக்காக விடியலை நோக்கி முன்னேறுவோம் என்ற கொள்கையுடன் செயற்படும் அப்ஸல் அஹமட் மரைக்கார் அல்லாஹ்வின் அருளால் நல்ல உடல் ஆரோக்கியத்துடனும் நீடூழி காலம் வாழ வேண்டும் என இலங்கை தேசிய முஸ்லிம் பேரவை வாழ் வாங்கு வாழ்த்துகிறது.

அத்துடன் இந்நிகழ்வில் ஒவ்வொரு முஸ்லிம் சமூகத்தின் சங்கங்களினது தலைவர்களும் தனித்தனியாக கொவிட் 19 வைரஸ் தொற்றினால் உயிரிழந்த முஸ்லிம்களது உடல்களை கௌரவமான முறையில் நல்லடக்கம் செய்வதற்காக முன்னின்று உழைத்த அப்ஸல் அஹ்மட் மரைக்காருக்கு நன்றி பாராட்டி விருது வழங்கி கௌரவித்தனர்.

**இந்நிகழ்வில் அமான் அஷ்ரஃப் தலைமையுரை நிகழ்த்திய போது..**

உலக மக்களைப் பயங்காட்டி மிரட்டி பல இலட்சக்கணக்கான உயிர்களை காவுகொண்ட கொரோனா தொற்று நோய் சொல்லிக் கொள்ளாமலே இலங்கை முழுவதும் பரவி நாடு முற்றாக முடக்கப்பட்டது. நோய்களின் தொற்று அதிகரித்து நாளுக்கு நாள் உயிரிழப்பு அதிகரித்து கொண்டே இருந்தது.

இப்படியானதொரு ஆபத்தான கால கட்டத்தில் தங்களுடைய குடும்பம் உறவு, பிள்ளை குட்டிகள் எனப் பாராமல் தியாகத்தின் அடிப்படையில் துடிப்புடனும் தீவிரமாகவும் செயற்பட்டவர்கள் நமது மத்தியில் பலர் உள்ளனர் . எனினும் இவை எல்லாவற்றுக்கும் மேலாக நாடளாவிய ரீதியில் தேசிய மட்டத்தில் கொரோனாவினால் உயிர் இழந்தவர்களை நல்லடக்கம் செய்யும் விவகாரத்தில் இயங்கு தளத்தில் நின்று ஒரு முகாமையாளராக செயற்பட்டவர்களுள் பிரதான நபராக அப்ஸல் அஹமட் மரைக்கார் அவர்களைப் குறிப்பிடலாம்.

அப்ஸல் அஹ்மட் மரைக்கார் அவர்களுடன் சேர்ந்து உப தலைவராகச் செயற்பட்டவர் கண்டி பள்ளிவாசல்கள் சம்மேளத்தின் தலைவர் கே. ஆர். ஏ. சித்தீக். அவர் சமூகச் செயற்பாட்டில் மிகுந்த ஆர்வம் மிக்கவர். கொரோனா தொற்றுக் காலத்தில் கொரோனாவினால் உயிரிழந்த உடல்களை நல்லடக்கம் செய்யும் விடயத்தில் அப்ஸல் அஹமட் மரைக்கார் அவர்களின் வழிகாட்டலுடன் அவருக்கு பக்கதுணையாக கே. ஆர். ஏ. சித்தீக் மற்றும் அவரோடு சேர்ந்த குழுவினர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து செயற்பட்டார்கள். அதேபோல் மேல் மாகணத்திற்குப் பொறுப்பினை வகித்த அஸ்லம் உத்மான் அவர்களோடு இணைந்து செயலாற்றிய குழுவினர்களும் முக்கியமாக இந்த இடத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளார்கள்.

கொரோனா தொற்றினால் ஒருவர் உயிரிழந்தால் அவரை வைத்தியசாலையில் இருந்து வெளியே எடுப்பது என்பது ஏனைய காலங்களைப் போலல்ல அது. தந்தை ஒருவர் வைத்தியசாலையில் மரணம் எய்தினால் அந்த இடத்திற்கு குடும்பத்திலுள்ள மகனுக்கோ பிள்




ளைகளுக்கோ வர இயலாது. அதேபோல் மகன் மரணம் எய்தினால் அந்தக் குடும்பத்தில் இருந்து எவரும் பார்க்க முடியாது. அவ்வாறு அந்த உயிரிழந்த உடலைப் பார்க்க வேண்டும் எனில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியைப் பெற்று பாதுகாப்புக் கவசம் அணிந்து சென்றுதான் பார்க்க வேண்டும். அவர்கள் பார்ப்பதற்கு ஒரு பத்து நிமிடம் வழங்கப்படும். மனிதரை மனிதர் நெருங்கிப் பழகிட அச்சப்பட்ட காலத்தில் இந்த உயிரிழந்த உடல்களை வைத்தியசாலையில் இருந்து வெளியே எடுத்து ஓட்டமாவடியில் உள்ள மஜ்மா நகர் மையவாடியில் நல்லடக்கம் செய்வதற்காக அயராது உழைத்தவர்கள் இவர்களே.

இவர்கள் ஒவ்வொரு நாளும் தினசரி வீடு திரும்புவது நள்ளிரவு 12.00 அல்லது ஒரு மணி அல்லது அதிகாலை நேரங்களாக இருக்கும். இவர்கள் வீடுகளில் சிறிய குழந்தைகள் முதியவர்கள் இருந்தார்கள். அது ஆபத்தான விடயமாக இருந்தது.

அவை மட்டுமல்ல கொரோனா காலத்தில் முடக்கப்பட்ட பகுதிகளில் அன்றாடம் உணவு வசதிகளின்றி கஷ்டப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கி வந்தனர். அவர்கள் சிங்கள, தமிழ் முஸ்லிம், கிறிஸ்தவ என்று வேறுபாடுகளின்றி பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் இந்த உலருணவுப் பொதிகளை வழங்கி வந்தார்கள்.

பொதுவாக எங்கு உயிரிழந்தாலும் அவர்களுடைய



உடல்கள் எல்லாம் குருநாகல் வைத்தியசாலைக்கு எடுத்து வந்துதான் ஓட்டமாவடி மஜ்மா நகர் மையவாடிக்கு எடுத்துச் செல்லப்படும். இதில் ஊவா, கிழக்கு மாகாண பிரதேசத்தில் உயிரிழந்த உடல்கள் நேரடியாக மையவாடிக்கு எடுத்துச் செல்லப்படும். சிலவேளை தாமதமாயின் படை வீரர்களுடன் கதைத்து அவற்றை சரி செய்து கொள்வார்கள். இந்த உடல்களை மிகவும் பத்திரமாகவும் பாதுகாப்பாகவும் எடுத்து செல்வதற்கு படைவீரர்களும் பொலிஸாரும் தினசரி பாதுகாப்பு வழங்கினார்கள். கண்டி ஜனாஸா நலன்புரிச் சங்கத்தின் அம்பியூலன்ஸ் வண்டி, நாவலப்பிட்டி ஜனாஸா நலன்புரிச் சங்கத்தின் அம்பியூலன்ஸ் வண்டி ஆகிய இரு வண்



டிகளையும் கூலிக்காக அமர்த்தி சேவை செய்தார்கள். கம்பளையிலிருந்து வழங்கிய அம்பியூலன்ஸ் வண்டியினையும் இலவசமாகப் பயன்படுத்தினார்கள். இப்படி குருநாகலில் இருந்து ஒரே நாளில் 70 மையங்கள் ஓட்டமாவடி மஜ்மா நகர் மையவாடிக்கு அனுப்பப்படும். கண்டியில் தினசரி நான்கு அம்பியூலன்ஸ் வண்டிகள் இயங்கின. அதேவேளையில் அநுராதபுர மாவட்டத்தில் உயிரிழந்த உடல்களை தம்புள்ள வைத்தியசாலையில் வைத்து சேகரித்துக் கொள்வார்கள். கொழும்பு மாவட்டத்திலும் உள்ள ஜனாஸா நலன்புரிச் சங்கங்களிலும் அம்பியூலன்ஸ் வண்டிகள் இருந்தன. அவற்றை அவர்கள் பயன்படுத்தினார்கள்.

சுகாதார அமைச்சின் கொரோனாப் பிரிவின் பொறுப்



பாளர் வைத்தியர் அன்வர் ஹம்தானியுடன் காலையில் தினசரி தொலைபேசியில் கலந்துரைடயால் நடத்தப்படும். அதன் பின் மாலையில் எத்தனை பேர் உயிரிழந்துள்ளார்கள் என்ற தகவல்கள் அறிவிக்கப்படும். பொதுவாக எல்லா பிரதேசங்களிலுமுள்ள பொதுச் சுகாதார பரிசோதகர்களுடன் தொடர்பினை மேற்கொண்டிருந்தார்கள். அவர்களிடமிருந்து எங்கெங்கு உயிரிழந்துள்ளார்கள் என்ற முழுத் தகவலும் கிடைத்து விடும். எல்லா இடங்களிலும் இணைப்பதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டிருந்தார்கள். அவர்கள் குறித்த மேலதிகாரியுடன் தொடர்பினை மேற்கொள்வார். இதற்காக வாட்செப்பில் மூன்று குரூப் பிரிவினை ஏற்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். பொலிஸ் மாஅதிபர் இவை தொடர்பில் எந்தப் பொலிஸ் அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டு கதைப்பதற்கு உத்தியோகபூவாமான அனுமதி வழங்கியிருந்தார். அதேநேரம் படைவீரர்களுடனும் எந்த நேரமும்



கதைக்க முடியும்.

இத்தகைய நடவடிக்கைகள் அனைத்தும் முழுமையாக அப்ஸல் அஹமட் மரைக்கார் அவர்களுடைய தலைமைத்துவ வழிகாட்டலின் கீழ்தான் நடைபெற்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவர் ஒரு தனி நபராக இருந்தாலும் அரசாங்கத்துடன் மிக நெருக்கமான உறவைப் பேணி சுகாதார அமைச்சு, அதனுடன் தொடர்புபட்ட சகல அரச அதிகாரிகளின் ஆதரவைப் பெற்று துணிந்து நின்று பயனுள்ள பங்களிப்பை சமூகத்திற்கு வழங்கியுள்ளார். இவருடைய இத்தகைய முயற்சிகள் விதந்து பாராட்டத்தக்கது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**அப்ஸல் அஹமட் மரைக்கார் உரையாற்றும் போது..**

முஸ்லிம்கள் எனும் போது சோனகர் முஸ்லிம் சமூக அங்கத்தினர் மாத்திரம் தான் பொதுவாக சமூக நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள். ஆனால் இங்கு சோனகர், போராஸ், மேமன் மற்றும் மலே முஸ்லிம் சமூக அங்கத்தினர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து செயற்படுவது என்பது முஸ்லிம்களது ஒற்றுமையைப் பெருமைப்படுத்துவதும், இஸ்லாமிய மார்க்க ஊற்றுக்களை வெளிக்கொணர்வதற்கும் இது ஒரு பயனுள்ள முயற்சியாக இருக்கும் எனக் கருதுகின்றேன்.

எனினும் இங்கு வரும் வரையிலும் எனக்கு உரித்தான பாராட்டு விழாவாக இருக்கும் என்று நான் கருதவில்லை. இந்த நிகழ்வு என்னை தர்மசங்கடமான நிலைக்கு உள்ளாக்கி விட்டது. இருப்பினும் எமது பல்வேறு சமூக அங்கத்தவர்கள் சேர்ந்து இந்த நிகழ்வினை நடத்துவதையிட்டு நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

இவை ஒரு தனி மனிதனுடைய முயற்சி அல்ல ஒரு கூட்டு முயற்சியாகும். எனவே இந்தப் பணிகளுக்குப் பின்னால் பலர் இருக்கின்றனர். அமைச்சர்களான அலி சப்ரி, அமைச்சர் ஹாபிஸ் நஸீர், வைத்தியர் அன்வர் ஹம்தானி, கொழும்பில் அஸ்லம் உத்மான், கண்டியில் என்னுடைய உப தலைவர் சித்தீக் ஹாஜியார் மற்றும் நாடளாவிய ரீதியில் எங்களோடு இணைந்து செயற்பட்ட பலர் இருக்கின்றார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் அனைவருக்கும் நன்றி கூறிக் கொள்ள நான் கடமைப்பட்டுள்ளேன்.

எல்லாவற்றிக்கும் மேலாக விசேடமாக சுகாதார அமைச்சின் கொரோனாப் பிரிவின் பொறுப்பாளர் வைத்தியர் அன்வர் ஹம்தானி நாடளாவிய ரீதியில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துகின்ற முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் முஸ்லிம்களது ஜனாஸா நல்லடக்க விடயத்திலும் எங்கள் தோளோடு தோள் நின்று அரும்பணியாற்றினார். நல்ல வழிகாட்டல்கள் வழங்கிய ஒருவர். இவர் இங்கு நன்றியுடன் நினைவு கூறப்படக் கூடிய ஒருவர்.

இக்பால் அலி.....

மன்னார், கிளிநொச்சி, முல்லை. மாவட்டங்கள்

# நிலக்கடலை, உளுந்து விவசாயிகளுக்கு விரைவில் இலவச காப்புறுதி திட்டம்

## அரசு கவனம் செலுத்துவதாக தெரிவிப்பு -அமைச்சர் மஹிந்த அமரவீர

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாடு எதிர்கொண்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிக்குள்ளும் விவசாயிகளுக்கான காப்புறுதித்திட்டம் மூலம் அரசாங்கம் பில்லியன் கணக்கான ரூபாய்களை விவசாயிகளுக்கு தொடர்ச்சியாக வழங்கி வருவதாக, விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இதேவேளை உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம்,சோயா உள்ளிட்ட சில பயிர்ச்செய்கைகளுக்கு காப்புறுதி வழங்கப்படுவதுடன், மேலதிகமாக உளுந்து மற்றும் நிலக்கடலைக்கும் அக்காப்புறுதி மூலமாக நட்டஈடு வழங்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமென்பதுடன், அது தொடர்பான யோசனையை எதிர்வரும் வரவு செலவுத்திட்டத்தில் முன்வைக்க முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் த.தே.கூ. பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. தனது கேள்வியின் போது,

வடக்கில் முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் உளுந்து மற்றும் நிலக்கடலை அதிகமாக செய்யப்படுகிறது. இவற்றுக்கு ஏனைய பயிர்களுக்கு போன்று, விவசாயிகளுக்கு இலவச காப்புறுதி பெற்றுக்கொடுக்கப்படுவதில்லை. அதனால், தற்போது விவசாயிகள் அப்பயிர்ச்செய்கைகளை மேற்கொள்வதை விரும்புவதில்லை. ஆகையால், ஏனைய பயிர்களுக்கு வழங்கப்படும் இலவச காப்புறுதிக்குள் இதனையும் உள்ளடக்குமாறு விவசாய அமைச்சரை கேட்டுக்கொள்வதாக தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர்,

"2018 இல் நான் விவசாய அமைச்சராக பதவி வகித்த போது உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், சோயா உள்ளிட்ட சேனைப்பயிர்களுக்கு இலவச காப்புறுதியை அறிமுகப்படுத்தினேன். அதற்கு விவசாயிகளிடமிருந்து எப்பங்களிப்பையும் பெற்றுக்கொள்ளவில்லை. அந்த வகையில், ஒரு ஹெக்டேயருக்கு ஒரு இலட்சம் ரூபா எனும் ரீதியில் நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அறுவடைகளை அதிகரிப்பதன் நோக்கிலேயே அதனை நடைமுறைப்படுத்தினோம். அதன் பிரதிபலன்கள் எமக்கு கிடைத்தன. இப்போதும் வருடாந்தம் ஒரு பில்லியனுக்கு அதிகமான நிதியை அதற்காக பெற்றுக்கொடுத்து வருகின்றோம்.

மேலும், உளுந்து மற்றும் நிலக்கடலையையும் இத்திட்டத்துக்குள் உள்ளீர்க்க சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக வரவு செலவுத்திட்ட யோசனையில் முன்வைத்துள்ளோம். அதே போன்று 2024ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலும் நாம் இந்த யோசனையை முன்வைப்போம். அனுமதி கிடைக்குமானால் அதனை விவசாயிகளுக்கு பெற்றுக்கொடுக்க நாம் பின் வாங்கப் போவதில்லை" என்றார்.


## நெஸ்லே லங்கா பிஎல்சி (PQ 20)

## பொதுமக்களுக்கான அறிவித்தல்

2021 டிசம்பர் 18 ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 1215/2 இல் பிரசுரிக்கப்பட்டவாறு, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு விதிமுறைகளின் விதி 5(2)(a) இன் அடிப்படையில், 2023 ஜுன் 30 ஆம் திகதியன்று இடம்பெற்ற அதிவிசேட பொதுக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறுவனத்தின் பங்குதாரர்களால் முறையாக அங்கீகரிக்கப்பட்டதையும், நிறைவேற்றப்பட்டதையும் பொதுமக்களுக்கு தெரிவிக்கும் வகையில் இந்த அறிவித்தல் வெளியிடப்படுகின்றது:

1. நெஸ்லே லங்கா பிஎல்சியின் சாதாரண வாக்குரிமைப் பங்குகள் கொழும்பு பங்குச் சந்தையின் உத்தியோகபூர்வ பட்டியலிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்றும், அத்தகைய நீக்குதலைக் கருத்தில் கொண்டு தங்கள் பங்குகளை விற்க விரும்பும் பங்குதாரர்களின் சாதாரண வாக்குரிமைப் பங்குகளை பங்கொன்று ரூபா 1,500/- என்ற விலை வீதம் Nestlé S.A வாங்கலாம் என்றும் இத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2. நெஸ்லே லங்கா பிஎல்சியின் பணிப்பாளர் சபையும் நிர்வாகமும், 2021 டிசம்பர் 18ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 1215/2 இல் பிரசுரிக்கப்பட்டுள்ள விதி 5 க்கு அமைவாக, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவிடம் நிறுவனத்தின் வாக்குரிமைப் பங்குகளை பங்குச்சந்தைப் பட்டியலிலிருந்து நீக்குவதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்க இத்தால் அதிகாரம் பெற்றுள்ளது. மேலும், நிறுவனத்தின் நலன்களுக்கு அமைவாக, கூறப்பட்ட நீக்கம் மற்றும் இந்தத் தீர்மானத்தை அவர்கள் கருதும் மாற்றங்களுடன் (இருக்கும் பட்சத்தில்) செயல்படுத்துவதற்குத் தேவையான அல்லது பொருத்தமானதாகக் கருதும் பிற செயல்கள் மற்றும் விடயங்களைச் செய்ய அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

**கீர்த்தி பதிராஜா**
**உதவிப் பணிப்பாளர் - சட்டம் / கம்பனி காரியதரிசி**


உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில்

# யாழ்., மன்னார் மறை மாவட்ட அருட்பணியாளர்கள் பங்கேற்பு

**தலைமன்னார் விசேட, மன்னார் குறூப் நிருபர்கள்**



சென்னை, செம்மஞ்சேரியிலுள்ள ஆசியவியல் நிறுவனத்தில் நாளை (07) முதல் 9ஆம் திகதிவரை நடைபெறவுள்ள 11ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் மன்னார் மறைமாவட்ட அருட்திரு தமிழ் நேசன் அடிகளாரும் யாழ். மறை மாவட்ட அருட்பணி கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன்போது, அவர்கள் தமது ஆய்வுக்கட்டுரைகளை மாநாட்டில் சமர்ப்பிக்கவுள்ளனர். இரு பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த இரண்டு ஐரோப்பிய தமிழ் அறிஞர்களின் தமிழியல் ஆய்வுகள் தொடர்பான இரண்டு ஆய்வுக் கட்டுரைகளை அருட்திரு தமிழ் நேசன் அடிகளார் சமர்ப்பிக்கவுள்ளார்.

இதேவேளை, 'தனிநாயகம் அடிகளும் சுவாமி விபுலானந்தரும்' எனும் தலைப்பிலான ஆய்வுக்கட்டுரையை கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் சமர்ப்பிக்கவுள்ளார்.

# யாழ்ப்பாணம், வவுனியாவில் இருவேறு விபத்துகள்; இரு இளைஞர்கள் பலி

**யாழ். விசேட, ஓமந்தை விசேட, சாவகச்சேரி விசேட நிருபர்கள்**

யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் நேற்று (05) அதிகாலை இடம்பெற்ற இருவேறு விபத்துகளில் இளைஞர்கள் இருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள்களை செலுத்திச் சென்றவர்களான வடமராட்சி தேவரையாளியைச் சேர்ந்த 30 வயதுடைய புஸ்பராசா ராஜ்குமார், வவுனியா, குருமண்காட்டைச் சேர்ந்த 24 வயதுடைய சிவகுமார் ருபீன்ஸ்ராஜ் ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

சாவகச்சேரியில் நண்பரை அவரது வீட்டில் இறக்கிவிட்டு, வடமராட்சியிலுள்ள தனது வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் திரும்பிய போது கொடிகாமம், வரணி சுட்டிபுரம் பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து, வீதியோரத்திலிருந்த மரமொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதாக, கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, வவுனியா நகரிலிருந்து யாழ். நோக்கிப் பயணித்த கனரக வாகனத்தை ஏ09 வீதியில் மோட்டார் சைக்கிளொன்று முந்திச் செல்ல முற்பட்டபோது, எதிர்த்திசையில் பயணித்த வானொன்றுடன் அம்மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதாக, வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தை தொடர்ந்து 3 வாகனங்களையும் வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு பொலிஸார் கொண்டுசென்றனர்.

பிரேத பரிசோதனைக்காக சடலங்கள், வவுனியா மற்றும் வைத்தியசாலைகளில் வைக்கப்பட்டுள்ளன.

இவ்விபத்துகள் தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தீக்குளிக்க முயன்ற தாயொருவர் வவுனியா பொலிஸாரால் மீட்பு!

**ஓமந்தை விசேட நிருபர்**

வவுனியா ஏ09 வீதியிலுள்ள வன்னி இராணுவத் தலைமை அலுவலகத்துக்கு முன்னால் நேற்றுக் (05) காலை 34 வயதுடைய 2 பிள்ளைகளின் தாயொருவர் தீக்குளிக்க முயன்ற போது, இவரை வவுனியா பொலிஸார் பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

குருநாகல், வரக்காபொல பிரதேசத்தில் வசித்துவரும் பெண்ணொருவரே இந்த அசம்பாவிதத்தில் ஈடுபட்டார். குடும்ப முரண்பாட்டால், 2 பிள்ளைகளையும் இப்பெண்ணின் கணவர் தன்னுடன் அழைத்துச் சென்றதுடன், கணவனும் மனைவியும் சில மாதங்களாக பிரிந்து வாழ்கின்றனர். இந்நிலையில், இப்பெண்ணுக்கும் இராணுவ வீரரொருவருக்கும் இடையில் தொடர்பு ஏற்பட்டு, சில வாரங்களில் இராணுவ வீரரின் தொடர்பு துண்டிக்கப்பட்டதாகவும் இதனால், விரக்தியடைந்து, இப்பெண் தீக்குளிக்க முயன்றதாகவும் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதன் பின்னர், வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட இப்பெண்ணுக்கு புத்திமதி கூறியதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.


துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சு

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்

## விலைமனுக்கோரல் (IFB)

**புத்தளம், லக்விஜய அனல்மின் நிலையத்திற்கு நிலக்கரி போக்குவரத்து செய்யும், நங்கூரமிடப்பட்டுள்ள கப்பலுக்கு சென்று வருவதற்கு படகு சேவை வழங்குவதற்கான விலைமனுக்கோரல் - 2022/2024 காலத்திற்கான**

**தேசிய விலைமனுக்கோரல் போட்டி (NCB)**

**ஒப்பந்த இலக்கம் : CSC/BT/2023/24**

இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் வழங்கற் சபை தலைவரினால் (DPC) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் புத்தளம், லக்விஜய அனல்மின் நிலையத்திற்கு நிலக்கரி போக்குவரத்து செய்யும், நங்கூரமிடப்பட்டுள்ள கப்பலுக்கு சென்று வருவதற்கு படகு சேவை வழங்குவதற்கான முன் அனுபவம் மிக்க மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

**விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் :**

1. இந்த சேவையை பெற்றக்கொள்வது **2023 செப்டெம்பர் நடுப்பகுதி முதல் 2024 மே** நடுப்பகுதி வரை மாத்திரமே.
2. பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்றாக இருத்தல் வேண்டும்.
3. படகில் ஒரே தடவையில் (குறைந்தது) 10 பேர் வரை பாதுகாப்பாக பயணிக்கக்கூடியவாறு வசதிகளை கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஒரே நேரத்தில் பயணிகள் தவிர்த்து 500-1000 கி.கி வரை பொருட்கள் ஏற்றிச் செல்லக்கூடியதாய் இருத்தல் வேண்டும் (ஏற்றிச் செல்லக்கூடிய நிறைக்கான சான்றிதழை முன்வைக்க வேண்டும்.)
5. அனைத்து பயணிகளுக்கும் பாதுகாப்பு ஆடை (Life Jacket) மற்றும் நீர்புகா மேற்சட்டை (Rain Coat) வழங்க வேண்டும்.
6. படகில் தங்குமிட பகுதியின் மேற்புறம் வெயில் / கடல் நீரிலிருந்து (Sea Spray) பாதுகாப்பு வேலியை கொண்டிருத்தல் வேண்டும்.
7. தெரிவு செய்யப்படும் படகு மற்றும் படகு ஓட்டுனருக்கு இலங்கை கடற்படையில் அனுமதி பெறக்கூடியதாக இருத்தல்.
8. படகு ஓட்டுனர் செல்லுபடியான அனுமதிப்பத்திரத்தை கொண்டிருத்தல் வேண்டும்.
9. பயணிகள் மற்றும் ஊழியர் குழாம் மற்றும் பொருட்களுக்கு செல்லுபடியாகும் பயணிகள் காப்புறுதி சான்றிதழை கொண்டிருத்தல்.
10. படகு ஓட்டுனர் மற்றும் உதவியாளர் ஆகிய இருவரும் பொலிஸ் நன்னடத்தை சான்றிதழை கொண்டிருத்தல். வேண்டும்.
11. நிலக்கரி இறக்கப்படும் காலப்பகுதியில் எந்தவொரு நாளிலும் பகல், இரவு சேவையை வழங்கக்கூடியதாக இருத்தல் மற்றும் தேவைப்படும் போது கப்பலுக்கு அருகில் 4 படகுகளை நிறுத்தி வைக்கக்கூடியதாக இருத்தல்.
12. படகுகளுக்கு உரித்தான சர்வதேச தரப்படுத்தல் சங்க மாநாட்டில் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் கடற்பயணத்திற்கான சான்றிதழ் அல்லது தரப்படுத்தல் சங்கத்தின் சான்றிதழ் முன்வைக்கவேண்டும்.
13. சாதாரண கடல் தன்மையின் கீழ் மணித்தியாலத்திற்கு 12 மைல்கள் தூரத்திற்கு குறையாத வேகத்தில் பாதுகாப்பாக செலுத்தக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
14. VHF, Compass, Flash Light மற்றும் SOLAS இனால் பரிந்துரைக்கப்பட்ட முதலுதவி வசதிகளை கொண்டிருத்தல் வேண்டும்.
15. லக்விஜ அணல்மின் நிலையத்தின் பரப்பில் 4-5 மீட்டர் அளவிற்கு ஏற்ற படகாக இருத்தல் வேண்டும்.

வழங்கப்படும் படகுகளில் பயணிகள் மற்றும் பொருட்களை பாதுகாப்பாக ஏற்றக்கூடிய லக்விஜய அனுமின் நிலையம் அல்லது நுரைச்சோலையில் காணப்படும் கடற்படை முகாம்களுக்கு அருகில் செய்யக்கூடியதாக இருத்தல், அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வது முற்றுமுழுவதும் மனுதாரர்களையே சாரும்.

ஆர்வம் காட்டும் மனுதார்கள் மேலதிக விபரங்களை இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தில் கப்பல்கள் வாடகைக்கு பெற்றுக்கொள்ளல் மற்றும் குறித்த திணைக்களத்தில் **dantha@cscl.lk** அல்லது **071 0215702** எனும் இலக்கத்தை தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் மற்றும் மனு ஆவணங்களை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் தினமும் **மு.ப.9.00 முதல் பி.ப.03.00** மணிவரை வேலைநாட்களில் காரியாலய நேரத்தில் பரிசீலனை செய்ய முடியும்.

இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் தினமும் அலுவலக நேரத்தில் **மு.ப.09.00 மணியிலிருந்து பி.ப.03.00 மணி** வரையான காலப்பகுதியினுள் **ரூ.10,000/- (+15%) (வட்வரி உள்ளடங்களான) மீளச்செலுத்தப்படாத** கட்டணத்தை செலுத்தி இந்த கூட்டுத்தாபனத்தில் மனு ஆவணத்தினை பெற்றுக்கொள்ள முடியும்.

உரிய முறையில் முழுமையாக்கப்பட்ட விண்ணப்பங்கள் தபாலுறையில் இட்டு இடதுபக்க மேல் மூலையில் **“படகுச் சேவைகளுக்கான விலைமனுகோரல் 2023/24”** எனக்குறிப்பிட்டு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் (குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன் கிடைக்கப்பெறுமாறு) அல்லது அந்த விலாசத்தில் கூட்டுத்தாபன காரியாலயத்தில் அதற்காக இடப்பட்டுள்ள மனுக்களை சேகரிக்கும் பெட்டியில் **2023.08.03** திகதிக்கு முன் இட முடியும்.

**2023.08.03 ஆம் திகதி 1500 மணிக்கு (இலங்கை நேரப்படி)** மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். இந்த மனுக்களை எந்த ஒரு நேரத்திலும் நிராகரிக்கும் உரிமை மற்றும் நீட்டிக்கும் உரிமை வழங்கற்குழுவின் வசம் இருப்பதுடன் நிராகரிப்பதற்கான காரணத்தை வழங்கற்குழு முன்வைக்கத்தேவையில்லை. நேரம் தாழ்த்திக்கிடைக்கும் மனுக்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

இவ்விலைமனுக்கோரலின் அடிப்படையில் **2023 செப்டெம்பர் மாதம் நடுபகுதி முதல் 2024 மே மாதம் நடுபகுதி** வரை செல்லுபடியாகும் **(நிலக்கரி இறக்கும் காலம் + / - 02 கிழமை).** அதேபோல் மீண்டும் இரு முறை தெரிவு செய்யும் நிறுவனங்களுக்காக ஒப்பந்தகாலத்தை நீட்டிப்பது (ஒப்பந்தத்தின் அடிப்படையில்) வரையருக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் விருப்பத்தின் படியாகும்.

**தலைவர்**
**கூட்டுறவு வழங்கல் குழு**
**வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்,**
**இல - 27, MICH கட்டிடம், சேர் ராஸீக் பரீட் மாவத்தை,**
**கொழும்பு 00100.**
**தொடர்புகளுக்கு - (011) 2328772/3, (011) 2423214, (011) 2497800**


# கிளிநொச்சியில் 4,811 குடிநீர் விநியோக இணைப்பு வேலைத்திட்டம் பூர்த்தி

**பரந்தன் குறூப் நிருபர்**



கிளிநொச்சி மாவட்டத்தின் 95 கிராம அலுவலர் பிரிவுகளில் 29 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு 4,811 குடிநீர் விநியோக இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக, அம்மாவட்ட நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்தது.

இக்கிராம அலுவலர் பிரிவுகளில் முழுமையாகவும் பகுதியளவிலும் குடிநீர் விநியோக இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

இன்னும் 32 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு குடிநீர் விநியோக இணைப்புகள் வழங்கப்பட வேண்டியுள்ளதாகவும் இப்பிரிவுகளுக்கும் குடிநீர் விநியோக இணைப்புகளை வழங்குவதற்கான வேலைத்திட்டம் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், அத்திணைக்களம் தெரிவித்தது.

கிளிநொச்சியில் 46 ஆயிரத்து 741 குடும்பங்களுக்கான குடிநீர் விநியோகத் திட்டத்தில், 14 சதவீதமானவர்களுக்கே இதுவரையில் குடிநீர் விநியோக இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் 2025ஆம் ஆண்டில் இவ்வேலைத்திட்டம் முழுமையாகுமெனவும், கிளிநொச்சி மாவட்ட தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்தது.

இதேவேளை, கிளிநொச்சியின் காக்காகடைச் சந்தியில் அமைக்கப்பட்டு வரும் நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் 95 சதவீதமான பணிகள் பூர்த்தியாகியுள்ளதாகவும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இந்நிலையம் இயங்குமெனவும், கிளிநொச்சி மாவட்ட தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மேலும் தெரிவித்தது.

## காணி எடுத்தற் சட்டத்தின் (அத். 460) 33ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது இலக்கம்:** KDS/UDB/4/1/1/65 (உது/2/2/10/98)
**சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் இலக்கம்:** 13/97/FR/323

கண்டி மாவட்டத்தில் உடதும்பர பிரதேச செயலாளர் நிலுஷா மனோரத்ன ஆகிய நான் காணி எடுத்தற் சட்டத்தின் (அத். 460) 33வது பிரிவின் கீழே குறிப்பிட்டுள்ள உப அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட நஷ்டஈட்டு தொகையாக ரூபாய் ஒன்பது இலட்சத்து ஐம்பத்தாறாயிரம் (956,000.00) உரிமையாளர்களுக்கு வழங்குவதற்காக தெல்தெனிய மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு எண் LAD 169/23 இன் கீழ் வரவு வைக்கப்பட்டுள்ளதை இதன் மூலம் உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

**பிரதேச செயலாளர்,**
**உடதும்பர.**

திகதி: 2023.06.08

**உப அட்டவணை**

காணியின் பெயர் : மாடின் தோட்டம்
ஆரம்ப வரைபட இல. : மஹ. 6628
துண்டு இல. : 1, 2
விஸ்தீரணம் : 3.8717 ஹெக்டயார்
அமைவிடம் : உடதும்பர பிரதேச செயலகப்பிரிவில் கங் தெக்க கோரளை சிறு பிரிவில் கரப கெடிய கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள மாடின் தோட்டம் எனும் காணி

# அறிவித்தல்

## 23வது பொது பட்டமளிப்பு விழா

### இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் மிஹிந்தலை

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் 23வது பொது பட்டமளிப்பு விழா இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மிஹிந்தலை வளாகத்தில் 2023 ஜூலை மாதம் 26 மற்றும் 27ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

தகுதி வாய்ந்த அனைத்து பட்டதாரிகளுக்கும் மின்னஞ்சல் மூலம் கூகுல் படிவம் (Google form) ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதுவரை கூகுல் படிவத்தை திருப்பியனுப்பாதவர்கள் 2023 ஜூலை 10ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் தங்களது கூகுல் படிவத்தை அனுப்பிவைக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

இதுவரையில் கூகுல் படிவம் கிடைக்கப்பெறாத யாராவது பட்டதாரிகள் இருந்தால் அவர்கள் 2023 ஜூலை 10ஆம் திகதி அல்லது அதற்கு முன் பிரதிப் பதிவாளர் (பரீட்சைகள் மற்றும் கல்வி) அவர்களைத் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

(தொலைபேசி: 025-2266780), drexam@rjt.ac.lk

ஏனைய விபரங்களுடனான அழைப்பிதழ் காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும்.

**பதிவாளர்,**
**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்,**
**மிஹிந்தலை.**
2023 ஜூலை 06ஆம் திகதி.

## கடற்றொழில் அமைச்சு
## வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்

### வாழைச்சேனை மற்றும் அம்பாந்தோட்டை மீன்பிடி துறைமுகங்களில் மணல் அகழ்ந்து விற்பனை செய்வதற்கான மீள் மனுக்கோரல்

**CFHC/PD/SAND/HAM/VAL/2023/40**

வாழைச்சேனை மற்றும் அம்பாந்தோட்டை மீன்பிடி துறைமுகங்களில் மணல் அகழ்ந்து விற்பனை செய்வதற்கான விலைமனுக்கோரல் 2023.07.20 ஆம் திகதி பி.ப. 2.00 வரை இடம்பெறும். மனு ஆவணங்கள் 2023.07.06 ஆம் திகதி முதல் 2023.07.19 ஆம் திகதி வரை மு.ப.9.00 மணிமுதல் பி.ப.3.00 குறித்த துறைமுகங்கள் மற்றும் தலைமை அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். இது தொடர்பான விவரங்களை அதிகாரப்பூர்வ இணையதளத்தில் **(www.cfhc.gov.lk)** பெற்றுக்கொள்ள முடியும்.

தலைவர்,
வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்,
இல- 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு 15.

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
## குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

### ஆர்வ வெளிப்பாட்டுக்கான விலைமனுக்கோரல் (EOI)

**குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்காக 5,000,000 இலத்திரனியல் கடவுச்சீட்டுகள் (e-Passports) மற்றும் 500,000 'N' தொடர் இயந்திரம் மூலம் படிக்கக்கூடிய வெற்று கடவுச்சீட்டுகள் 'N' series blank Machine Readable Passports (MRPs) 5,000,000 கொள்வனவு செய்வதற்கு ஆர்வமுள்ள, தகுதியான திறமையான தரப்பினரரினால் அந்தந்த அரசாங்கங்கள் ஊடாக ஆர்வத்தினை வெறிப்படுத்துதல்**

01. மேற்குறிப்பிடப்பட்ட கொள்முதல் தொடர்பான 2023.06.12 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருந்த ஆர்வ வெளிப்பாட்டு **2023 ஆகஸ்ட் 22 (செவ்வாய்கிழமை) (2023-08-22)** வரை நீட்டிக்கப்பட்டது. முந்தைய விளம்பரம் மற்றும் மேலதிக தகவல்களை எமது அதிகாரப்பூர்வ இணையதளத்திலிருந்து (www.pubsec.gov.lk) பெற்றுக்கொள்ளலாம்.

02. பூர்த்தி செய்யப்பட்ட ஆர்வ வெளிபாட்டினை **2023-08-22 ஆம் திகதி 14:00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

    **தலைவர்,**
    **அமைச்சினால் நியமிக்கப்பட்ட பெறுகை குழு (CAPC),**
    **பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு,**
    **14வது மாடி, "சுஹுருபாய",**
    **ஸ்ரீ சுபூதிபுர வீதி,**
    **பத்தரமுல்ல, இலங்கை.**

03. ஆர்வம் காட்டும் விண்ணப்பதாரர் **2023.08.21** ஆம் திகதி வரை திங்கள் முதல் வெள்ளிக்கிழமைக்கிடையில் அலுவலக நாட்களில் **09:00** மணி முதல் **15:00** மணி வரை சமர்ப்பித்து மீளச்செலுத்தப்படாத **இலங்கை ரூபாயில் ஐம்பதாயிரம் (ரூ. 50,000.00)** ஆவணக்கட்டணத்தை **பிரதான கணக்காளர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, 14வது மாடி, "சுஹுருபாய", ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்லயில்** செலுத்தி அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். கட்டணமுறை **பணவடிவத்தில்** செலுத்தப்பட வேண்டும்.

தலைவர்,
அமைச்சினால் நியமிக்கப்பட்ட பெறுகை குழு (CAPC),
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு,
14வது மாடி, "சுஹுருபாய",
ஸ்ரீ சுபூதிபுர வீதி,
பத்தரமுல்ல,
இலங்கை.

## கல்வி அமைச்சு

### தேசிய திட்ட முகாமையாளர்/ திட்ட தலைவரை நியமித்தல் - இடைநிலைக் கல்வித் துறை மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் (SESIP) பொதுக் கல்வித் துறை

கல்வி அமைச்சின் ஆதிக்க வரம்பின் கீழ் இடைநிலைக் கல்வித்துறை மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் (SESIP) பிரிவு கண்காணித்தல் மற்றும் தொழில்நுட்ப அனுசரணை அலகிற்காக தேசிய திட்ட முகாமையாளர்/ திட்ட தலைவர் பதவிக்காக தகைமை மற்றும் அனுபவமுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இடைநிலைக் கல்வித்துறை மேம்பாடு இலங்கையில் முழு இடைநிலைக் கல்வியையும் சீர்திருத்த அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கிறது. இது அறிவியல், தொழில்நுட்பம், கணிதம் மற்றும் வணிகவியல் துறைகளில் பாடத்திட்டம், கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டு முறைகளில் ஆழமான முறையான சீர்திருத்தங்களை உள்ளடக்கியது. இந்த திட்டம் டிஜிட்டல் மற்றும் தொழில்நுட்ப அடிப்படையிலான கற்பித்தல் மற்றும் கற்றல் பள்ளி தலைமை மேம்பாடு மற்றும் துறைசார் கண்காணிப்பை ஆதரிக்கின்றது. இது நெருக்கடிகளின் தாக்கங்களை நிவர்த்தி செய்வதற்கும் அதே போன்ற எதிர்கால அதிர்ச்சிகளை எதிர்கொள்ளவும் கல்வி அமைப்பின் பின்னடைவை மேம்படுத்தும்.

SESIP ஆனது அரசாங்கத்தின் கல்வித்துறை மேம்பாட்டுத் திட்டம் 2021-2025 ஐ அடிப்படையாகக் கொண்டதுடன் அதனை ஆதரிக்கின்றது. SESIP இன் தாக்கம் தேசிய கொள்கை கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. SESIP என்பது ஆசிய அபிவிருத்தி வங்கியால் ஆதரிக்கப்படும் முடிவுகளின் அடிப்படையிலான கடன் திட்டமாகும்.

திட்ட முகாமையாளர்/ திட்டத் தலைவர் அந்தந்த இராஜாங்க அமைச்சுக்கள், பல்வேறு கல்வித்துறை மற்றும் நிறுவனங்கள், 09 மாகாண கல்வி அதிகாரிகள், கண்காணித்து அரச மற்றும் ஆஅவ ஆகியவற்றுடன் சரியான நேரத்தில் மற்றும் பயனுள்ள நிகழ்ச்சித்திட்டமிடல், மேலாண்மை மற்றும் ஒருங்கிணைப்பை உறுதி செய்தல் வேண்டும்.

| பதவி | பதவிகளின் எண்ணிக்கை | Level as per MSD approval | தகைமைகள் மற்றும் அனுபவம் | வயது |
|---|---|---|---|---|
| திட்ட முகாமையாளர் / திட்டத் தலைவர் | 01 | பிஎஸ்-1 | பல்கலைக்கழக ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி, விஞ்ஞானம், பொருளாதாரம், முகாமைத்துவம், பொறியியல் ஆகிய ஒன்றில் சித்திகரமாக பூர்த்தி செய்யப்பட்ட பட்டதாரிப் பட்டமொன்று. **அல்லது** உரித்தான துறையில் பெற்ற பட்டத்திற்கு நிகரான தகைமையொன்றென பல்கலைக்கழக ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்று. **மற்றும்** கல்வி/ கல்வி முகாமைத்துவம் தொடர்பான துறையொன்றில் பெற்ற பட்டப்பின் படிப்பு. **அத்துடன்** உரித்தான துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெற்ற கூட்டுரு/ பட்டய அங்கத்துவம் அல்லது நிகரான தொழில்சார் தகைமையொன்று **அத்துடன்** நிருவாக மட்டத்தில் ஆகக் குறைந்தது 12 வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவத்தில் 6 வருடங்கள் சிரேஷ்ட நிருவாக மட்டத்திலிருத்தல் வேண்டும். (கல்வித்துறையில் விரும்பத்தக்கவாறு செயற்றிட்ட முகாமைத்துவத்திலுள்ள அனுபவம் சேர்க்கப்பட்ட தகைமையாக கருதப்படும்) | 45-60 இற்கு இடைப்பட்ட வயதாகவிருத்தல் வேண்டும். |

2019 மார்ச் 5 ஆம் திகதியிடப்பட்டதும் 01/2019 என்ற முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அடிப்படையில் தகைமைகள் மற்றும் வேதனங்கள் அமைந்திருக்கும் (www.treasury.gov.lk/web/management-services-department-circular/section/2019)

அரசாங்க பொது சேவைகளில் பணியாற்றும் அலுவலர்கள் பணிவிடுவிப்பு (முழு நேர விடுவிப்பு) அடிப்படையிலும் அரசாங்க சேவைகளுக்கு வெளியிலுள்ளவர்கள் ஒப்பந்த அடிப்படையிலும் ஆட்சேர்க்கப்படுவார்கள். நியமனமானது ஆரம்பத்தில் ஒரு-வருட கால எல்லைக்கு அமைந்திருக்கும் என்பதுடன் சித்திகரமான செயற்பாட்டின் அடிப்படையில் சேவை நீடிப்பு வழங்கப்படும்.

தகைமைகள் மற்றும் அனுபவ அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சையொன்றிற்கு அழைக்கப்படுவார்கள்.

சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் சுயதரவு மற்றும் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்கள் மற்றும் கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகளின் சான்றிதழ்கள் ஆகியன பதிவுத் தபாலில் பின்வரும் முகவரியை வந்தடையும் வகையில் அனுப்பப்படல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.அத்துடன், இவற்றின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதிகள் **ppb.moe.lk@gmail.com** என்ற மின்னஞ்சல் வழியாகவும் அனுப்பப்படலாம் அல்லது அதே முகவரியில் ஒப்படைக்கப்பட்டு ஒப்புகை பதிவுச்சீட்டொன்று பெறப்படல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்புவதற்கான இறுதித் திகதியானது 2023 ஜூலை 20 ஆம் திகதியாகும்.

**முகவரி** : **செயலாளர்,**
**கல்வி அமைச்சு,**
**கொள்கை, திட்டமிடல் மற்றும் செயற்பாட்டு மீள்நோக்கல் பிரிவு,**
**''இசுருபாய", பெலவத்த, பத்தரமுல்ல.**

விண்ணப்பத்தை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் திட்டப் பெயர் மற்றும் விண்ணப்பிக்கும் பதவி ஆகியன (அதாவது - Application for the Post of National Programme Manager of SESIP) குறிப்பிடப்படல் வேண்டும். இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்பும் அரசாங்க அல்லது மாகாண பொது சேவைகளிலுள்ள அலுவலர்கள் அவர்களின் விண்ணப்பங்களை உரித்தான நிறுவன தலைமைகளூடாக அத்துடன் விண்ணப்பதாரியானவரை முழுநேர அடிப்படையில் விடுவிக்கப்பட முடியுமா அல்லது இல்லையா என்பதையும் குறிப்பிடுதல் வேண்டும்.

**எம்.என். ரணசிங்ஹ,**
**செயலாளர்,**
**கல்வி அமைச்சு,**
**''இசுருபாய", பெலவத்த,**
**பத்தரமுல்ல.**

# அறிவித்தல்

**வ/ப நாத்தாண்டிய புதிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 2023-06-30ஆம் திகதியில் உள்ளவாறான வாக்குரிமை அங்கத்தவர்களின் பெயர் பட்டியல்**

## 2023-07-11ஆம் திகதி முதல் 2023-07-25ஆம் திகதி வரை

**பின்வரும் இடங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.**
**அதில் உங்களது பெயர் உள்ளடக்கப்பட்டிருக்காவிட்டால் அல்லது ஏதாவது திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தால் அது பற்றி**

**2023-07-25ஆம் திகதிக்கு முன் தலைமை அலுவலகத்திற்கு எழுத்து மூலம் தபாலில் அல்லது நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும். அன்றைய தினத்திற்குப் பின் எந்தவொரு முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

சங்கத்தின் முகவரி : செயலாளர், வரையறுக்கப்பட்ட நாத்தாண்டிய புதிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
www.membercoop.net / coopnaththandiya.php, **www.nattmpcs.com**
தொலைபேசி இல. : 032-2254236

| பிரதேச இலக்கம் | பிரதேசத்தின் பெயர் | காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள இடம் |
|---|---|---|
| 01 | நாத்தாண்டிய இல. 01 | உரக் களஞ்சியசாலையில் உள்ளது |
| 02 | நாத்தாண்டிய இல. 02 | உரக் களஞ்சியசாலையில் உள்ளது |
| 03 | நாத்தாண்டிய இல. 03 | உரக் களஞ்சியசாலையில் உள்ளது |
| 04 | பிலாகட்டு முல்ல | கிராம சேவையாளர் அலுவலகத்தில் மற்றும் தலைமை அலுவலகத்தில் செயலாளர் அறையில் உள்ளது |
| 05 | மானிங்கல | பிரதேசத்தில் உள்ளது |
| 06 | துன்கன்னாவ | மினி கோப்சிட்டியில் உள்ளது |
| 07 | நாரவில | கிராம சேவையாளர் அலுவலகத்தில் மற்றும் தலைமை அலுவலகத்தில் செயலாளர் அறையில் உள்ளது |
| 08 | யக்தெஸ்ஸாவ | கிராம சேவையாளர் அலுவலகத்தில் மற்றும் தலைமை அலுவலகத்தில் செயலாளர் அறையில் உள்ளது |
| 09 | மீகஹவெல | கிராம சேவையாளர் அலுவலகத்தில் மற்றும் தலைமை அலுவலகத்தில் செயலாளர் அறையில் உள்ளது |
| 10 | பஹல கொட்ராமுல்ல | மினி கோப்சிட்டியில் உள்ளது |
| 11 | தம்போவ | உரக் களஞ்சியசாலையில் உள்ளது |
| 12 | தம்மிககம | கிராம சேவையாளர் அலுவலகத்தில் மற்றும் தலைமை அலுவலகத்தில் செயலாளர் அறையில் உள்ளது |
| 13 | சோமவத்த | கிராம சேவையாளர் அலுவலகத்தில் மற்றும் தலைமை அலுவலகத்தில் செயலாளர் அறையில் உள்ளது |
| 14 | மாவில | கிராம சேவையாளர் அலுவலகத்தில் மற்றும் தலைமை அலுவலகத்தில் செயலாளர் அறையில் உள்ளது |
| 15 | லங்சிகம | கிராமிய வங்கியில் உள்ளது (லங்சிகம) |
| 16 | இஹல கொட்டாரமுல்ல | கிராமிய வங்கியில் உள்ளது (இஹல கொட்டாரமுல்ல) |
| 17 | இஹல கட்டுநேரிய | கட்டுநேரிய கிராமிய வங்கி மற்றும் தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 18 | கொஸ்வத்த | மினி கோப்சிட்டியில் உள்ளது |
| 19 | மொரகெலே | இஹல கொட்டாரமுல்ல கிராமிய வங்கியில் மற்றும் தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 20 | பலுவெல்கால | மினி கோப்சிட்டியில் உள்ளது |
| 21 | முதுகட்டுவ | கிராம சேவையாளர் அலுவலகத்தில் மற்றும் தலைமை அலுவலகத்தில் செயலாளர் அறையில் உள்ளது |
| 22 | மெத கட்டுநேரிய | கட்டுநேரிய கிராமிய வங்கியில் மற்றும் தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 23 | பஹல கட்டுநேரிய | கட்டுநேரிய கிராமிய வங்கியில் மற்றும் தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 24 | கச்சிராவ | துன்கன்னாவ பிரதேசத்தில் மற்றும் தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 29 | தெமட்டபிட்டிய | கிராமிய வங்கியின் உள்ளது (தெமட்டபிட்டிய) |
| 30 | ஹெவன வகுகஹமுல்ல | கிராம சேவையாளர் அலுவலகத்தில் மற்றும் தலைமை அலுவலகத்தில் செயலாளர் அறையில் உள்ளது |
| 31 | மெதகொட | கிராம சேவையாளர் அலுவலகத்தில் மற்றும் தலைமை அலுவலகத்தில் செயலாளர் அறையில் உள்ளது |
| 32 | மட்டா கொட்டுவ | மட்டகொட்டுவ கோப் சிட்டியில் உள்ளது |
| 33 | குடாம டுவெல்ல | பிரதேசத்தில் உள்ளது |
| 34 | தொடுவாவ | கிராமிய வங்கியில் உள்ளது (தொடுவாவ) |
| 35 | கொஸ்வாடிய | மஹவெவ கோப்சிட்டி மற்றும் தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 36 | முட்டி பெந்திவெல | கிராம சேவையாளர் அலுவலகத்தில் மற்றும் தலைமை அலுவலகத்தில் செயலாளர் அறையில் உள்ளது |
| 37 | மஹவெவ | கோப்சிட்டியில் உள்ளது |
| 38 | தல்வில | மினி கோப்சிட்டியில் உள்ளது |
| 39 | ஹாலபன்வில | தல்வில மினிகோப்சிட்டி மற்றும் தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 40 | பிரனாந்து வீதி 01 | மாரவில மினிகோப்சிட்டி மற்றும் தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 42 | குடாவெவ | மஹவெவ கோப்சிட்டி மற்றும் தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 43 | மாரவில தேவாலய வீதி | மாரவில மினிகோப்சிட்டி மற்றும் தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 44 | மாவிர நவீனமயப் படுத்துதல் | மினி கோப்சிட்டியில் உள்ளது |
| 45 | வலஹபிட்டிய | மினி கோப்சிட்டியில் உள்ளது |
| 46 | பரதெல்பொல | பிரதேசத்தில் உள்ளது (குடாமடுவெல்ல) |
| 47 | மரந்த | பஹல வலஹபிட்டிய கோப்சிட்டியில் மற்றும் தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 50 | கல் அமுன | மினி கோப்சிட்டியில் உள்ளது (வலஹபிட்டிய) |
| 51 | சாகரகம | மினி கோப்சிட்டியில் உள்ளது (வலஹபிட்டிய) |
| 52 | மோதரவெல்ல | கிராம சேவையாளர் அலுவலகத்தில் மற்றும் தலைமை அலுவலகத்தில் செயலாளர் அறையில் உள்ளது |
| 53 | இரணவில | மினி கோப்சிட்டியில் உள்ளது |
| 54 | கடோல்கொட வத்த | கிராம சேவையாளர் அலுவலகத்தில் மற்றும் தலைமை அலுவலகத்தில் செயலாளர் அறையில் உள்ளது |
| 55 | இத்தமல்கம | பஹல வலஹபிட்டிய கோப்சிட்டியில் மற்றும் தலைமை அலுவலகத்தில் செயலாளர் பொறுப்பில் உள்ளது |
| 56 | பனங்கொட | கிராம சேவையாளர் அலுவலகத்தில் மற்றும் தலைமை அலுவலகத்தில் செயலாளர் அறையில் உள்ளது |
| 57 | பஹல வலஹாபிட்டிய | கோப் சிட்டியில் உள்ளது |

**செயலாளர்,**
**வ/ப நாத்தாண்டிய புதிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to: classified@lakehouse.lk
SUNDAY OBSERVER Marriage Proposals
Piyumi- 0112 429 383 | 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342

# பெறுகை அறிவித்தல்

## அபேக்ஷா வைத்தியசாலை - மஹரகம

### இவ்வைத்தியசாலையின் பிரதான உணவகம் மற்றும் விற்பனை நிலையத்திற்கான ஒப்பந்தக்காரர்களை நியமித்தல் 2023/2024

மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் நிர்வாக கட்டிடத்தின் புதிய உணவகம் மற்றும் பிரதான வாயிற்கதவுக்கு அருகில் உள்ள விற்பனை நிலையத்திற்காக 2023/2024ஆம் ஆண்டிற்கு ஒப்பந்தக்காரர்களை நியமித்துக் கொள்வதற்கு விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

கேள்விப் படிவத்தை 2023.07.06 முதல் 2023.07.27 வரை வாரத்தின் வேலை நாட்களில் மாத்திரம் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை வைத்தியசாலை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| தொடர் இல. | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூ. |
|---|---|---|
| 01 | நிர்வாக கட்டிடத்தின் புதிய உணவகம் | 3000.00 |
| 02 | பிரதான நுழைவாயில் அருகில் உள்ள விற்பனை நிலையம் | 3000.00 |

கேள்விப்படிவம் மூலப் பிரதி உட்பட 02 பிரதிகளுடன் 2023.07.28 மு.ப. 10.00 இற்கு முன் பதிவுத் தபாலில் கிடைக்கச் செய்தல் வேண்டும். கையோடு கொண்டுவரும் பெறுகைப் படிவங்களை கணக்காளர் பணிமனையில் உள்ள கேள்விப் பெட்டியில் 2023.07.28ம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் உள்ளிடல் வேண்டும்.

விலைமனுக்கள் 2023.07.28ம் திகதி மு.ப. 10.00 இற்கு திறக்கப்படும். அதற்காக உங்களுக்கு அல்லது உங்களது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். இது பற்றிய மேலதிக விபரங்களை செயலாளர் அபேக்ஷா வைத்தியசாலை, மஹரகம. தொ. பே. இலக்கம் 011-2840233 மூலம் விசாரிக்கலாம்.

பிரதேச பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**அபேக்ஷா வைத்தியசாலை,**
**மஹரகம.**


சிறு விளம்பரம்

காணி/தோட்டம்

616

வீடு சொத்து

கொழும்பு மாவட்டம்

விற்பனைக்கு

பொரளை பேஸ்லைன் வீதிக்கு அருகாமையில் இருமாடி வீடொன்று விற்பனைக்குண்டு. வெஸ்லி பாடசாலைக்கு அருகில். தொலைபேசி 0776241011.
040285

Repeat Your ad For Better Offers


இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம்

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

சிறு ஏற்றுமதி பயிர்த் தோட்ட மேம்பாட்டு பிரிவு

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## 01 (Mw) மெகாவாட் பராமரிப்பு சூரிய சக்தி அமைப்பினை வழங்கல், நிறுவுதல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல்

விலைமனுக்கோரல் **– LSCPL/SEV/P&M/2023/042**

இலங்கை, செவனகல சீனி தொழிற்சாலைகளுக்கு **01 (Mw) மெகாவாட் பராமரிப்பு சூரிய சக்தி அமைப்பினை வழங்கல், நிறுவுதல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் வேவையினை வழங்குவதற்கு** ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்களிடமிருந்து வறையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் திணைக்கள பெறுகைக் குழு (DPC தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**வேலையின் நோக்கம்**

மின்சார பணிகள், சிவில் பணிகள் மற்றும் இயந்திர வேலைகள் உள்ளிட்ட சூரிய மின் நிலையத்திலிருந்து தேசிய இணைப்பிற்கு தொடர்புபடுத்தல் மற்றும் நிலையான பாதுகாப்பு நிபந்தனைகளுடன் இணைப்பு வரை நிறுவும் செயற்பாடு.

விற்பனையாளர் பின்வரும் நிபந்தனைகளுடன் விலைமனுக்களை சமர்ப்பிக்க வேண்டும்.

- பொறுப்பான தரப்பினரால் வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்துடன் நிர்வாக ஒப்பந்தமொன்றில் கையெழுத்திடப்பட வேண்டும். (விற்பனையாளர் அல்லது மின் சக்தி நிறுவும் நிறுவனம்)
- மின் சக்தி அமைப்பின் உத்தரவாதமானது சிறப்பாக 20 ஆண்டுகளுக்கும் மேலாக நல்ல செயல்திறனுடன் இருக்க வேண்டும்.
- சலுகையில் சூரிய மின்கலங்களின் விவரக்குறிப்புகள் மற்றும் வகை குறிப்பிடப்பட வேண்டும். திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை தளத்தைப் பார்வையிடுவதற்கு ஏற்பாடு செய்யலாம்.

மனு ஆவணத்தை **2023.07.26** ஆம் திகதி வரை வேலை நாட்கலில் (09.00 மணி முதல் 16.00 மணி வரை) மீள்ச்செலுத்தப்படாத கட்டணமாக **ரூ.25,000/-** செலுத்தி கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். அனைத்து மனுக்களுக்கும் **ரூ.2,250,000/- "மனுப் பாதுகாப்புடன்"** சமர்ப்பிக்கப்பட வேண்டும். **2023.07.20** ஆம் திகதி **மு.ப.09.30** மணிக்கு செவனகல கேட்போர் கூடத்தில் முன் மனுக் கூட்டம் நடைபெறும். **2023.07.27** ஆம் திகதி **பி.ப.02.00** மணி வரை முத்திரையிடப்பட்ட ஏற்றுக்கொள்ளப்படும். மற்றும் தாமதமான ஏலங்கள் நிராகரிக்கப்படும். கேள்விமனுக் குழுவின் முடிவு இறுதியானதாகும். மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைந்தவுடன் உடனடியாக மனுக்க் திறக்கப்படும்.

ஏதேனும் முறைபாடுகளுக்கு - தலைமை அதிகாரி (பெறுகை) இருந்து பெற்றுக்கொள்ளலாம் : **077 010 3359 ,** மின்னஞ்சல் **: sapumal@lscl.lk**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,**
**இல-27, மெல்போர்ன் ஒழுங்கை,**
**கொழும்பு 04.**

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)

### மினுவாங்கொட பஸ் நிலைய அபிவிருத்தி செயற்றிட்டத்திற்குத் தேவையான துணைப்பாகங்களைக் கொள்வனவு செய்தல்

**விலைமனு இல. PRDA/WP/PRO/2023/44**

இந்த அதிகார சபையினால் பின்வருவனவற்றைக் கொள்வனவு செய்வதற்காக இவ்வாறான வழங்கல்களை மேற்கொள்ளும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | விபரங்கள் | அலகு | எண்ணிக்கை | கேள்விப் பிணை முறி: ரொக்கப் பணமாக | கேள்விப் பிணை முறி: வங்கி அல்லது காப்பறுதி நிறுவனம் |
|---|---|---|---|---|---|
| 01 | 1/2" (20mm), single lever cold water tap, brass chromium plated, Basing Taps | Nr | 10.00 | | |
| 02 | Chromium Plated Bip tap of "Rocell" brand for approved eqproved equivalent (1/2") | Nr | 10.00 | | |
| 03 | Chromium Plated 1/2" dia, Angle valve of "Rocell" brand model or approved equivalent. | Nr | 30.00 | | |
| 04 | Low level Vitreous China floor standing close coupled, water closet suit (white), with wash down 3/6 litre dual flushing, complete with water and sewerage connection including 100mm diameter 'S" or 'P' trap. Rate includes all fixtures to complete work in order. (Rocell Brand) | Nr | 4.00 | | |
| 05 | Disanle close coupled Water Closet "American Standard" brand & Model No. "Model No. 6927 "with seat cover & water tank or approved equivalent complete to working order. | Nr | 2.00 | | |
| 06 | Ceramic squatting pans, white vitreous china, with ceramic P/S trap. (Rocell Brand) | | | | |
| | Squatting Pan | Nr | 4.00 | | |
| | Tank | Nr | 4.00 | | |
| 09 | Chromium plated Bidet Spray of "Rocell" brand or approved equivalent. (1/2") | Nr | 6.00 | | |
| 10 | Vitreous China (white) under counter vanity basin fixed to reinforced concrete vanity counter with waste outlet fitting and complete with water and waste connection including PVC bottle trap (vanity counter measured separately). (Rocell Brand) | Nr | 10.00 | | |
| 11 | Ceramic wall hung wash basin for disabled of "American Standard" brand & Model No. "WT-0947" with Plush Lock waste & over flow of Model No. "A-8016-A-N" & Bottle Trap Chrome plated of Model No. "A-8104-N" or approved equivalent. (Wash basin & Basin tap) | Nr | 2.00 | | |
| 12 | Urinal with sensor of "Rocell" brand or approve equivalent conplete to working order. | Nr | 4.00 | 18,500.00 | 37,000.00 |
| 13 | Urinal division, Vitreous China, Rate shall include for serewing to wall and fitting with non Corrosive fixing elements in male toilets at; (Rocell Brand) | Nr | 4.00 | | |
| 14 | Towel rail fixed to wall with brackets. | Nr | 2.00 | | |
| 15 | Chromim Plated soap dish complete with all necessary accessories. | Nr | 10.00 | | |
| 16 | Mirror above wash basins, (51-nm Thicl)overall size 800mm / 500mm approved quality framed plain glass mirror with chromium plated clips and plugs fixed to walls including necessary fixtures. | Nr | 10.00 | | |
| 17 | Supplv for stainless steel grab rail set of approved size and imported quality including 01 number of hinged arm grab bar with toilet paper holder, 01 number of "L" shape grab rail for water closet and 02 numbers of grab bars for wash hand basin. ("J" & "T") | | | | |
| | Hinged arm grab rail | Nr | 1.00 | | |
| | Grab bar for water closet | Nr | 1.00 | | |
| | Grab bar for wash basin | Nr | 1.00 | | |
| 18 | Approved quality floor gully in preformed pockets in bed slabs and floor slabs complete with 150mm x 150mm gully cover. | Nr | 10.00 | | |
| 19 | in position 2000L capacity water storage tank placed on toilet block (Anton / Arpico/ S - Lon) | Nr | 1.00 | | |
| 20 | 600mm x 600mm, timber effected porcelain floor tile in office area at first floor & Toilet block - (Rocell Brand) | Nr | 711.00 | | |
| 21 | 600mm x 600mm matt finished homogeneous porcelain floor tiles in Staircases and steps - (Rocell Brand) | Nr | 40.00 | | |
| 22 | 300mm x 600mm homogeneous ceramic wall tiles - (Lanka Wall Tile) | Nr | 456.00 | | |
| 23 | 300mm x 600mm semi rough homogeneous ceramic floor tiles in toilet floor. - (Rocell Brand) | Nr | 322.00 | | |

02. இதன் பொருட்டான கேள்வி ஆவணத் தொகுதியினை 2023.07.06ஆம் திகதியிலிருந்து 2023.07.20ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை இவ்வதிகார சபையின் பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை பணமாக அல்லது வங்கிப் பிணை முறி மூலம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு கேள்வி ஆவணத்தில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. இந்தக் கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறக்கப்படுதல் 2023-07-21ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு இந்த அலுவலகத்தில் இடம்பெறும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி. அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு, கொழும்பு-12.**
**தொ. இலக்கம் 011-4849825, 011-4849845**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## காணி, மாகாண நீர்ப்பாசனம், விவசாயம், கால்நடை உற்பத்தி மற்றும் கால்நடை சுகாதாரம் மற்றும் கடற்றொழில் விவகார அமைச்சு

## சபரகமுவ மாகாண சபை

### விலங்குணவுகளைக் கொள்வனவு செய்தல்

சபரகமுவ மாகாண சபையின் காணி, மாகாண நீர்ப்பாசனம், விவசாயம், கால்நடை உற்பத்தி மற்றும் கால்நடை சுகாதாரம் மற்றும் கடற்றொழில் விவகார அமைச்சின் பெறுகைக் குழுத் தலைவரினால் சபரகமுவ மாகாண விலங்கு உற்பத்தித் திணைக்களத்திற்குரித்தான உதுகொட விலங்கு பரிபாலன பயிற்சி நிலையத்திற்கு விலங்குணவுகளை வழங்குவதற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிலிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| உருப்படி இல. | உணவு வகைகள் | அளவு (kg) (3 மாதங்களுக்கு) | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூபா | கேள்விப் பிணை முறிக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 01 | Dairy Cattle Pellets | 14400 | | |
| 02 | Calf Starter | 250 | | |
| 03 | Chick Booster | 300 | | |
| 04 | Chick Starter | 400 | | |
| 05 | Layer Grower | 300 | | |
| 06 | Layer Feed | 6000 | 1000.00 | 100,000.00 |
| 07 | Sow Feed | 2700 | | |
| 08 | Sea Shells | 500 | | |
| 09 | Broiler Starter | 2400 | | |
| 10 | Broiler Finisher | 3200 | | |

02. இது தொடர்பில் ஆர்வம் கொள்வோர் சபரகமுவ மாகாண விவசாய அமைச்சிலிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் (தொலைபேசி இலக்கம் 045-2224425) 2023-07-07ஆம் திகதி முதல் 2023-07-26ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்த்து பின்வரும் முகவரிக்கு கோரிக்கையொன்றைச் செய்து மேற்குறிப்பிடப்பட்ட கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்தி கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

03. சகல கேள்விதாரர்களும் இந்தக் கேள்விக்கான மேற்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பெறுமதிக்கு இலங்கை மத்திய வங்கியில் பதிவுசெய்துள்ள அங்கீகரிக்கப்பட்ட வங்கியிடமிருந்து 2023-07-27ஆம் திகதி முதல் 2023-11-23ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் இரத்தினபுரி, புதிய நகரம், சபரகமுவ மாகாண சபை, காணி, மாகாண நீர்ப்பாசனம், விவசாயம், கால்நடை உற்பத்தி மற்றும் கால்நடை சுகாதாரம் மற்றும் கடற்றொழில் விவகார அமைச்சின் செயலாளரின் பெயரில் பெற்றுக்கொண்ட கேள்விப் பிணை முறி அல்லது குறித்த பெறுகையின் பெயரில் கேள்விப் பிணை முறியாக அமைச்சுக்கு ரொக்கப் பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை 2023-07-27ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மாகாண சபைக் கட்டிடத் தொகுதியின் முதலாம் மாடியில் அமைந்துள்ள காணி, மாகாண நீர்ப்பாசனம், விவசாயம், கால்நடை உற்பத்தி மற்றும் கால்நடை சுகாதாரம் மற்றும் கடற்றொழில் விவகார அமைச்சு செயலாளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

04. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறான கடித உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து மீண்டும் கடிதவுறையொன்றில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் ''விலங்குணவுக்கான கேள்வி'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

05. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்து கொள்ளலாம்.

06. தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும் என்பதுடன் கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அல்லது அதன் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்ளும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

07. சகல கேள்விகளும் 2023-10-24ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**காணி, மாகாண நீர்ப்பாசனம், விவசாயம், கால்நடை உற்பத்தி மற்றும்**
**கால்நடை சுகாதாரம் மற்றும் கடற்றொழில் விவகார அமைச்சு,**
**சபரகமுவ மாகாண சபை,**
**புதிய நகரம், இரத்தினபுரி.**
2023-07-06.


Daily News Classifieds, the Housewives' companion

it's what you want
www.adz.lk

## போதனா வைத்தியசாலை - இரத்தினபுரி

# பெறுகை அறிவித்தல்

இரத்தினபுரி போதனா வைத்தியசாலைக்குச் சொந்தமான கீழ்க்காணும் கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் பழுதுபார்ப்பதற்காக CIDA நிறுவனத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் 2023.07.26ம் திகதி 10.30 மணி வரை பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு குறித்த பெறுகை ஆவணங்களை 2023.07.06 முதல் 2023.07.25 வரை அரச விடுமுறை தினம் தவிர்த்து வாரத்தின் வேலை நாட்களில் 9.00 மணி முதல் 15.00 மணி வரை மீளளிக்கப்படாத ரூ. 3,500.00 கட்டணத்தை காசாளர் பிரிவிற்கு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டை சமர்ப்பித்து பின்னர் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட பெறுகை ஆவணங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

2023.07.26ம் திகதி 10.30 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் பணிமனையில் விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரால் அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம். பெறுகை ஆவணத்தில் குறிப்பிடப்படுமாறு அப் பெறுமதியின் பிரகாரம் விலைமனுக்கள் திறக்கப்படும் தினம் முதல் முன்வரும் 119 நாட்கள் செல்லுபடியாகும் இலங்கை மத்திய வங்கியில் செல்லுபடியாகும் வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட, கேள்விப் பிணையொன்றை அல்லது அப்பெறுமதிக்குச் சமமான தொகையை (மீளளிக்கப்படும்) பிணையாக வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டை பெறுகை ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

பெறுகை ஆவணங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலை விடயத்தின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். உங்களது விலைமனுக்களை குறித்த தினம் குறித்த நேரத்திற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பணிப்பாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். மேலதிக விபரங்களுக்கு இல. 045-2222261 ஊடாக கணக்காளரிடம் விசாரித்து அறியலாம்.

| ஒப்பந்த இல. | இலக்கம் | வேலை விடயம் | குறைந்த பட்ச CIDA தகைமை |
|---|---|---|---|
| 01 | THR/E17/PA04/2023 | Construction of OPD Laboratory Extension Balance Work in Second Floor | C8 |
| 02 | THR/E17/PA05/2023 | Renovation of NTS (Lecture hall, Kitchen, Demonstration room and Indirect lightning system) | C8 |
| 03 | THR/E17/PA06/2023 | Modification of NTS Hostel Stage I | C8 |

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**இரத்தினபுரி.**
2023.07.04

### பெயர் மாற்றம்

இலக்கம் 64, சுங்க வீதி திருகோணமலை எனும் முகவரியைச் சேர்ந்த பிறப்புச் சான்றிதழ் இலக்கம் 1262ஐ கொண்ட **ஸ்டீபன் ஸ்டெப்பி** ஆகிய நான் புனித இஸ்லாம் மதத்தை தழுவி எனது பெயரை **ஸ்டீபன் ச.்பியா** (Stephn Safiah) என மாற்றிக் கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் எனது சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கைாயொப்பமிடுவேன் எனவும் இத்தால் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**ஸ்டீபன் ச.்பியா**

பொது அறிவித்தல்
கம்பனியின் பெயர் மாற்றப்பட்டுள்ளது 2007 07 ஆம் இலக்கம் கம்பனிச்சட்டத்தின் 9 (2) பிரிவின் அடிப்படையில் கீழ்குறிப்பிட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம்.

கம்பனியின் இலக்கம் : **PV00257205**

கம்பனியின் பளய பெயர்:
REMADY (PRIVATE) LIMITED

கம்பனியின் புதுஸ பெயர்:
**SEN MISHEL LEISURE (PRIVATE) LIMITED**

திகதி : **19.06.2023**

பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி :
**755/2, PARLIMANT ROAD, PELAWATTA**

*********

செயலாளர்:
**கந்சல்டன்சி என்ட் எலய்ட் சர்விசர்ச் பிரைவட் லிமிட்டட்**
**86, எஸ்.டி. எஸ் ஜயசிங்ஹ மாவத்தை, கொவுறுவல, நுகேகொடை.**
**23rd June 2023**

**Repeat Your ad For Better Offers**

## மாவட்ட செயலகம் - களுத்துறை

## விலைமனுக்களுக்கான அழைப்பு - (IFB)

### களுத்துறை மாவட்ட செயலகத்தில் பழைய அலுவலக கட்டிடத்தின் குளியலறை புதுப்பித்தல் மற்றும் சிறிய திருத்த வேலைகள் – 2023

கீழே விபரிக்கப்பட்டவாறு களுத்துறை மாவட்ட செயலகத்தில் பழைய அலுவக கட்டிடத்தின் குளியலறை புதுப்பித்தல்/ திருத்துதல் மற்றும் சிறிய திருத்த வேலைகளுக்காக தகைமையும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து மாவட்ட செயலகம் களுத்துறை சார்பாக தி.பெ.கு தலைவர் பொறியிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். அத்துடன் மதிப்பிடப்பட்ட செலவு ரூ. 9.7 மில்லியன் (வெட் இன்றி)

**பாரிய உருப்படிகள்:** முதலாம், இரண்டாம், மூன்றாம் மாடிகளில் குளியலறைகளை புதுப்பித்தல்
**அமைவிடம்:** மாவட்ட செயலகக் கட்டிடம் (பழைய கட்டிடம்)
**ஒப்பந்த காலம்:** 120 நாட்கள்

2. தேசிய போட்டி விலைமனுக் கோரல் முறைமையின் ஊடாக விலை மனுக்கள் நடத்தப்படும்.
3. ஒப்பந்தங்கள் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருப்பதுடன் கீழ்க்காணும் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   கட்டிட நிர்மாணத்திற்கான CIDA பதிவு C6 அல்லது C7
   பொது நிதி சுற்று நிருப இல. 04/2016(ii) இல் குறிப்பிடப்படுமாறு தர முன்னுரிமை வழங்கப்படும்.
4. ஒப்பந்தங்கள் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு விலை மனுதாரர் போதுமான நிதியிடல் மற்றும் பௌதிக தன்மையுடைய ஆற்றலை வழங்கப்படும் வேளையில் கொண்டிருப்பதும் உள்ளடங்கும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மாவட்ட செயலகம் களுத்துறை பொறியியல் பிரிவிலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 09.00 மணி முதல் 15.00 மணி வரை மாவட்ட செயலகம் களுத்துறை, நிதிப் பிரிவில் விலைமனு ஆவணங்களைப் பரிசீலிக்கலாம்.
6. மீளளிக்கப்படாத கட்டணம் ரூ. 3500.00 செலுத்துவதன் பேரில் 2023.07.06 முதல் 2023.07.27 9.00 மணி முதல் 14.30 மணி வரை மாவட்ட செயலகம் களுத்துறைக்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.
7. நகல்களுடனான விலைமனுக்கள் 2023.07.28 மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன் மாவட்ட செயலகம் மற்றும் கேள்விச் சபைத் தலைவருக்கு முகவரியிடப்பட்டு விநியோகிக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகமளிக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்ட பின்பு உடனடியாகத் திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் 90 நாட்களுக்கு செல்லுபடியாதல் வேண்டும். அத்துடன் விலைமனுவுக்கு முன்னரான கூட்டம் மாவட்ட செயலகம் களுத்துறையில் 2023.07.14ம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நடைபெறும்.
9. எல்லா விலைமனுவுடனும் ஒரு இலட்சம் பெறுமதியான (ரூ. 100,000.00) 120 நாட்களுக்கு செல்லுபடியாகும் விலைமனுப் பிணை இணைக்கப்படல் வேண்டும்.

**கினிகே பிரசன்ன ஜானக்க குமார,**
**தலைவர், பெறுகைக்குழு,**
**மாவட்ட செயலாளர்,**
**மாவட்ட செயலகம். களுத்துறை.**

## கேள்வி அறிவித்தல் - கண்டி மாநகர சபை

### கண்டி எசல பெரஹர காலத்தில் களியாட்டங்களை நடத்துவதற்காக கண்டி கெட்டம்பே விளையாட்டு மைதானத்தை தற்காலிகமாக குத்தகைக்கு விடல்

2023ஆம் ஆண்டில் கண்டி எசல பெரஹர நடத்தப்படும் வேளையில் களியாட்டங்களை நடத்துவதற்காக கண்டி கெட்டம்பே விளையாட்டு மைதானத்தை தற்காலிகமாக குத்தகைக்கு விடுவதற்காக 2023.07.27 மு.ப. 10.00 வரை இரு பிரதிகளுடன் பொறியிடப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் மூலம் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

கேள்வி விண்ணப்பங்கள் 2023.07.26 பி.ப. 2.45 வரை வாரத்தில் வேலை நாட்களில் கண்டி மாநகர சபையின் வருமானப் பிரிவில் விநியோகிக்கப்படுவதுடன் 2023.07.27 மு. ப. 10.00 இற்கு திறக்கப்படும். பொறியிடப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் மாநகர ஆணையாளர் கண்டி மாநகர சபை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டு வந்து ஒப்படைக்கலாம். கையோடு கொண்டு வந்த ஒப்படைப்பதாயின் பிரதம மாநகர கணக்காளரின் பொறுப்பில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும்.

| குறைந்தபட்ச கேள்வித் தொகை | மீளளிக்கப்படாத விண்ணப்பப்படிவக் கட்டணம் (வரியுடன்) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகை | களியாட்ட வரி பிணை வைப்புத் தொகை | பாதுகாப்பு பிணை வைப்புத் தொகை | வழங்கப்படும் கால எல்லை |
|---|---|---|---|---|---|
| ரூ. 7,570,000.00 | ரூ. 2320.00 | ரூ. 150,000.00 | ரூ. 500,000.00 | ரூ. 500,000.00 | மேடையை அமைத்தல் மற்றும் ஒதுக்கிக் கொள்ளல் உட்பட 16 நாட்களுக்கு (2023.08.19 - 2023.09.03) |

- கேள்விச் சபையினால் ஏற்கப்படும் கேள்வித் தொகைக்கு மேலதிகமாக அரசிற்கு செலுத்த வேண்டிய வரித் தொகையை சேர்த்து அறவிடப்படும். மேலதிக விபரங்களை கண்டி மாநகர சபையின் கணக்காளர் (வருமானம்) இடம் அலுவலக நேரங்களில் நேரில் அல்லது தொ. பே. இலக்கம் 081-2227395 மூலம் பெற்றுக் கொள்ளலாம்.
- கண்டி மாநகர சபையுடன் சட்ட ரீதியிலான செயற்பாடுகளுக்கு உட்பட்டுள்ள நபர்கள்/ நிறுவனங்கள் மற்றும்/அல்லது கண்டி மாநகர சபையினால் அபகீர்த்தியானோர் பட்டியல் இடப்பட்டுள்ள நபர்கள்/நிறுவனங்களுக்கு கேள்விகளை சமர்ப்பிக்க முடியாது.
- கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளும் நபர்/நிறுவனத்தினாலேயே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- சமர்ப்பிக்கப்படும் கேள்வி பற்றிய இறுதித் தீர்மானம் எடுத்தல் மாநகர ஆணையாளர்/ மாநகர சபைக்கு உரியது.

2023.07.05ம் திகதி

**கே.கே.ஜீ.ஐ.டீ.பீ. விஜேதிலக்க**
**மாநகர ஆணையாளர்,**
**கண்டி மாநகர சபை.**

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

திருமண சேவைகள்

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.

உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.

முதல் 15 சொற்களுக்கு 300/- ரூபா

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377

*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 25 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

# விலை மனுக்கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல.<br>பொருட்களது விபரம் - தொகை | விலைமனு கோரல் முடிவு திகதி | விலை மனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே. இலக்கமும் | விலைமனு ஆவண விலை (ரூபா) | கேள்வி விபரம். ICB NCB |
| **சேவைகள்** | | | | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/23/093<br>வாடகைக்கு மோட்டார் கார்<br>மின் பொறியியலாளர் (அபிவிருத்தி)-திருகோணமலை<br>(இரண்டு வருடகாலம்) | 19-07-2023 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666/ 026-2221030 | 1000.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக் குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித் தன்மையுடன் கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவு செய்துகொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும் வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்து மூலமாக விண்ணப்பித்து 5 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப்பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்துமூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/ வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி.சபையின் உரித்தான பி.பொ.மு/ பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்திவரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை. பொ.மு/ பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**

**வளமான வாழ்விற்கு மின்சாரம்**

**விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.**

சுகாதார அமைச்சு

## ஆதார வைத்தியசாலை - அக்கரைப்பற்று

## பெறுகை அறிவித்தல்

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் கீழ்குறிப்பிடப்படும் பிரிவுகளுக்கு காற்றுச்சீராக்கிகள் வழங்குவதற்கும் அதனை பொருத்துவதற்குமான மூடப்பட்ட விலைமனு தகுதியானவர்களிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றது. பெறுகை ஆவணங்ள் 07.07.2023 தொடக்கம் 08.08.2023 வரை அலுவலக நேரத்தில் (9:00 -3:00) கணக்குப்பிரிவில் பெற முடியும். பூரணப்படுத்தப்பட்ட பெறுகை ஆவணங்கள் இரண்டு பிரதிகளில் தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, ஆதார வைத்தியசாலை, அக்கரைப்பற்று எனும் முகவரிக்கு 09.08.2023 ம் திகதி மு.ப 10:30 க்கு முன்னர் பதிவுத்தபால் மூலம் அல்லது கணக்காளர் அலுவலகத்திலுள்ள பெறுகை பெட்டியில் இடவும்.

| Serial No | Name of Project | Cost of Estimate excluding contingencies & VAT (Rs.in M) | Tender form fee (Non refundable) | Bid Security (Rs) | Contract Period |
|---|---|---|---|---|---|
| 01 | Supply & Installation of Air Conditioning System to the Units (Theatre, Clinic Pharmacy & MS, Office) | 5.44m | 6,000.00 | 55,000.00 (Valid for 119 days) | 45 days |

1. வழங்குனர் Black list ல் இல்லாதிருப்பதோடு பின்வரும் தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும்.
   - ICTAD பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் : விஷேடமாக மின்சாரம் மற்றும் இயந்திர சேவை,
   - Grade : EM4 அல்லது அதற்கு மேல் இத்துறையில் தரம் பெற்றிருக்க வேண்டும்.

3 வருடம் அனுபவம் பெற்றிருக்க வேண்டும் (ஆவணங்கள் இணைக்கவும்)

2. தேசியப் போட்டி விலைக்கேள்வி முறையில் இப்பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மீளப்பெற முடியாத மேற்குறிக்கப்பட்ட பணத்தை வைத்தியசாலை காசாளரிடம் செலுத்திய பின்பே பெறுகை ஆவணங்கள் வழங்கப்படும்.
3. ஆர்வமுள்ள வழங்குனர்கள் பெறுகை ஆவணங்களை அலுவலக நேரத்தில் பார்வையிட முடியும். மேலதிக தகவல்கள் பெற வேண்டுமாயின் வைத்திய அத்தியட்சகரை தொடர்பு கொள்ளவும்.
4. சமர்ப்பிக்கபடும் பெறுகை விலைமனுவானது 91 நாட்களுக்கு செல்லுபடியானதாக இருக்க வேண்டும்.
5. பெறுகைப் பெட்டி மூடப்பட்ட அதே நேரம் பெறுகை ஆவணங்கள் நிர்வாக கட்டிடத்தில் திறக்கப்படும். பின்பு கிடைக்கப் பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். இதன்போது விண்ணப்பதாரர் அல்லது அவரது பிரதிநிதி கலந்து கொளள் முடியும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**ஆதார வைத்தியசாலை, அக்கரைப்பற்று**
**0672277163/0672278213**

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை | பெசேவ அடங்கலாக ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/LP/23/PT/04/54 | 10 Nos. Mild Steel Channel Irons 200MM X 75 MMX 23.4 KG/M (EACH 6.0M Long) | 25,000.00 | 1,000.00 | 27.07.2023 13.30 மணிக்கு |
| CES/LP/23/PT/13/54 | Spares for RAM Twin Spreader | 20,000.00 | 1,000.00 | 27.07.2023 13.30 மணிக்கு |
| CES/LP/23/PT/03/051 | Braring Housing for Spin Turn Device of Mitsui RTGS at JCT - 06 Nos | 50,000.00 | 1,000.00 | 27.07.2023 13.30 மணிக்கு |
| CES/LP/23/PT/03/058 | 500 Metre - CU/ XLPE/SWA/PVC Cable 4 CX 35 SQMM, 600/1000V Armoured | 45,000.00 | 1,000.00 | 28.07.2023 13.30 மணிக்கு |
| CES/LP/23/PT/03/057 | 500 Meter - CU/XLPE/SWA/PVC Cable 4X16SQMM, 600/1000V Armoured | 25,000.00 | 1,000.00 | 28.07.2023 13.30 மணிக்கு |
| CES/LP/23/PT/14/056 | Dissolved Acetylene Gas for Year 2023 - 2024 | 275,000.00 | 1,000.00 | 28.07.2023 13.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான மொத்த ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படும். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு விலைமனுதாரரும் முகவரொருவராக, உபமுகவராக, பிரதிநிதியொருவராக அல்லது எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளரின் அல்லது ஒரு வழங்குநராக பெயர் குறிப்பிடப்படுபவராக செயற்பட விரும்பின், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான பண்டங்களை வழங்குவதில் ஆகக்குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2023 ஜூலை 07ஆம் திகதியிலிருந்து 4ஆம் நிரலில் சுட்டிக்காட்டியுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் நேரடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**






## பெறுகை அறிவித்தல்

### தேசிய வைத்தியசாலை - கண்டி

கண்டி தேசிய வைத்தியசாலையின் கீழ்க்காணும் வேலைகளை நிறைவேற்றுவதற்காக நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) இல் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. 2023.07.07 மு.ப. 9.00 முதல் 2023.07.27 பி.ப. 2.00 வரை வாரத்தின் வேலை நாட்களில் மீளளிக்கப்படாத ரூபா 5,000.00ஐ வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு செலுத்திய பின்னர் கேள்வி ஆவணங்களை வைத்தியசாலையின் தலைமையகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இரு பிரதிகளுடன் முறையான பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களை 2023.07.28 மு.ப. 10.00 இற்கு முன்பு மூலப்பிரதி மற்றும் நகல் பிரதிகளை வேறு வேறு உறைகளில் இட்டு அவ் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு தனி உறையில் இட்டு அவ் உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலை விடயத்தின் பெயரைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் கீழ்க்காணும் முகரிக்கு அனுப்பலாம். அல்லது பிரதம கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். பதிவுத் தபாலில் அனுப்பப்படும் கேள்வி ஆவணங்கள் 2023.07.28 மு.ப. 10.00 இற்கு முன் கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும். அத்துடன் அன்றே மு.ப. 10.30 இற்கு கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளையில் ஒப்பந்தக்காரர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

| | வேலை | அடிப்படை செலவு மதிப்பீடு (மில்லியன்) | ஒப்பந்த கால எல்லை | குறைந்த பட்ச தகைமை | தேவைப்படும் கேள்விப் பிணை முறி | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | கேள்விப் பிணை ரூபா | கால எல்லை |
| 01 | Contruction of New Toilet Block at NTS (Balance work) | 10.4 | 90 நாட்கள் | C6 | 180,000.00 | 2023.11.27 |

பெறுகைப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் பெறுகை சபைக்கு உரியது.

**தலைவர்,**
**பெறுகைக்குழு**
**தேசிய வைத்தியசாலை, கண்டி.**

## விலைமனுக்களுக்கான அழைத்தல் (IFB)

### ஊவா மாகாண கல்வி அமைச்சு - பதுளை

### General Education Modernization Project (GEMP)

**Bid No.: GEM/UP/G/2023/01 to 07**

1.) கீழே விபரிக்கப்பட்டவாறு **General Education Modernization Project (GEMP)** இன் கீழ் பின்வரும் உபகரணங்களின் வழங்கல், ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதல் ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் சார்பாக, பதுளை, ஊவா மாகாண சபை, ஊவா மாகாண கல்வி அமைச்சின், அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| | Description | Item No. | Type of Goods | Quantity | Bid Security (LKR) | Non-refundable Fee (Rs) |
|---|---|---|---|---|---|---|
| (01) | Supply & Delivery of Information Technology (IT) Related Equipment **Bid No.: GEM/UP/G/2023/01** | 1 | Desktop Computers (i5) | 35 | 140,000.00 | 5,000.00 |
| | | 2 | UPS | 35 | 6,000.00 | |
| | | 3 | Tablet | 11 | 60,000.00 | |
| | | 4 | Digital Photocopy Machine | 33 | 130,000.00 | |
| | | 5 | Multimedia Projectors | 35 | 65,000.00 | |
| | | 6 | Multimedia Projector Screen | 37 | 20,000.00 | |
| (02) | Supply & Delivery of Smart Interactive Panel with UPS **Bid No. GEM/UP/G/2023/02** | 1 | Smart Interactive Panel (Smart Board) (including all accessories) with UPS | 43 | 430,000.00 | 5,000.00 |
| (03) | Supply & Delivery of Mathematics Activity Pack (Primary & Secondary Education) **Bid No.: GEM/UP/G/2023/03** | 1 | Mathematics Activity Pack (35 items) (Primary Education) | 183 packs | 370,000.00 | 4,000.00 |
| | | 2 | Mathematics Activity Pack (11 items) (Secondary Education) | 183 packs | | |
| (04) | Supply & Delivery of English Book Pack **Bid No.: GEM/UP/G/2023/04** | 1 | English book pack | 149 packs | 45,000.00 | 2,000.00 |
| (05) | Supply & Delivery of Bookshelf, Notice Board & Wallpaper **Bid No.: GEM/UP/G/2023/05** | 1 | Tree Bookshelft | 45 | 15,000.00 | 1,500.00 |
| | | 2 | Cork Notice Boards | 25 | 6,500.00 | |
| | | 3 | Children's Hangable Wallpaper | 25 | 6,500.00 | |
| (06) | Supply & Delivery of School Desks & Chairs. **Bid No.: GEM/UP/G/2023/06** | 1 | School Chair (Primary) (Polypropylene(PP) & Steel tube) | 175 | 20,000.00 | 2,500.00 |
| | | 2 | School Chair (Primary) (Polypropylene (PP)) & Steel tube) | 175 | 15,000.00 | |
| | | 3 | School Desk (Secondary) (Polypropylene (PP) & Steel tube) | 175 | 20,000.00 | |
| | | 4 | School Chair (Secondary) (Polypropylene (PP) & Steel tube) | 175 | 15,000.00 | |
| (07) | Supply & Delivery of Learning & Other equipment for Special Education . **Bid No.: GEM/UP/G/2023/07** | 1 | Learning & other equipment for Special Education (set of 40 items) | 20 packs | 20,000.00 | 1,000.00 |

2.) விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும்.

3.) ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பதுளை, ஊவா மாகாண சபை, ஊவா மாகாண கல்வி அமைச்சு, பிரதான கணக்காளரிடமிருந்து பெற்று (தொலைபேசி: 055-2222814. தொலைநகல்: 055-2230962) 2023 ஜூலை 6 ஆம் திகதியிலிருந்து 2023 ஜூலை 23 ஆம் திகதியன்று வரையும் அலுவலக நேரங்களான மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மேலே கூறப்பட்டுள்ள அதே முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம். அத்துடன் **www.edumin.up.gov.lk** என்ற இணையதளத்தின் கேள்வி அறிவித்தல் வகுதியில் மேலதிக விபரங்களையும் பரீட்சிக்கலாம் (விலைமனு இல.: 03, 04 மற்றும் 07 பொதியிடல் அம்சங்களின் பட்டியல்)

4.) 2023 ஜூலை 06 ஆம் திகதியிலிருந்து 2023 ஜூலை 26 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் வேலை நாட்களில் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை சிறாப்பரிடம் செலுத்திய பின்னர், மேலேயுள்ள 3 ஆம் பந்தியிலுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப்பணத்திலே இருத்தல் வேண்டும்.

2023 ஜூலை 17 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு ஊவா மாகாண கல்வி அமைச்சின் 3 ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ள முகவரியின் மாநாட்டு அறையில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

5.) 2023 ஜூலை 27 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் மேலேயுள்ள 1 ஆம் பந்தியிலுள்ள முகவரியில் பதிவுத் தபாலில் இரு பிரதிகளில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது கல்வி அமைச்சின் கணக்கிடல் கிளையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். நகல் பிரதியானது மூலப்பிரதியின் அனைத்து பக்கங்களும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிழற்படப்பிரதியாகவிருத்தல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படுமென்பதுடன் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் கீழேயுள்ள முகவரியில் 2023 ஜூலை 27 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு திறக்கும் நிகழ்வில் பங்குபெற்றலாம்.

6.) பெறுகைத் தீர்மானம் தொடர்பான அனைத்து உரிமைகளையும் பெறுகைக் குழுவே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**ஊவா மாகாண கல்வி அமைச்சு,**
**ஊவா மாகாண சபை,**
**பதுளை.**

திகதி: 06.07.2023.

# எல்.பி.எல் ஒளிபரப்பு உரிமையை வென்றது ஸ்டார் ஸ்போட்ஸ்

LPL T20
LANKA PREMIER LEAGUE 2023
STAR SPORTS

இம்முறை லங்கா பிரீமியர் லீக் (எல்.பி.எல்) தொலைச்சாட்சி ஒளிபரப்பு உரிமையை பிரபல விளையாட்டு ஒளிபரப்பு நிறுவனமான ஸ்டார் ஸ்போட்ஸ் தொலைக்காட்சி வென்றுள்ளது.

இதன்படி இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், நேபாளம் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான தொலைக்காட்சி ஒளிபரப்பை அந்த நிறுவனம் மேற்கொள்ளவுள்ளது. அதேபோன்று ஐக்கிய அரபு இராச்சியம் உட்பட மெனா பிராந்தியம் எனப்படும் மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்காவைக் கொண்ட நாடுகளுக்கான ஒளிபரப்பு உரிமையையும் ஸ்டார் ஸ்போட்ஸ் பெற்றுள்ளது.

இம்முறை லங்கா பிரீமியர் லீக் புதிய கட்டத்தை எட்டும் என்றும் அதனால் ஸ்டார் ஸ்போட்ஸ் போன்ற புகழ்பெற்ற ஒளிபரப்பு நிறுவனம் ஒன்று போட்டியை பரந்த அளவான ரசிகர்களிடம் கொண்டு செல்வதற்காக வரவேற்பதாகவும் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட லங்கா பிரீமியர் லீக் தொடரின் பணிப்பாளர் சமந்த தொடன்வல தெரிவித்துள்ளார்.

லங்கா பிரீமியர் லீக் தொடர் எதிர்வரும் ஜூலை 30 ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

## இலங்கைக்கு எதிரான போட்டி:

# மேற்கிந்திய தீவுகளில் இரு முன்னணி வீரர்கள் இல்லை




உலகக் கிண்ண தகுதிகாண் தொடரில் நாளை (07) நடைபெறவுள்ள இலங்கைக்கு எதிரான கடைசி சுப்பர் சிக்ஸ் பேட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணியில் இருந்து இரு முன்னணி வீரர்கள் திரும்ப அழைக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெறாத மேற்கிந்திய தீவுகள் அணியில் இருந்து முன்னணி சகலதுறை வீரரான ஜேசன் ஹோல்டர் மற்றும் வேகப்பந்து வீச்சாளரான அல்சாரி ஜோசப் இருவரும் மேற்கிந்திய தீவுகளுக்கு திரும்ப அழைக்கப்பட்டுள்ளனர்.

இதனால் இந்த இரு வீரர்களும் நேற்று (05) நடைபெற்ற ஓமான் அணிக்கு எதிரான போட்டியிலும் அணியில் ஆடவில்லை.

எதிர்வரும் இந்திய அணியின் மேற்கிந்திய தீவுகள் சுற்றுப்பயணத்திற்காக அவர்களை தயார்படுத்தும் வகையிலேயே அந்நாட்டு கிரிக்கெட் நிர்வாகம் இந்த முடிவை எடுத்துள்ளது.

"ஜேசன் மற்றும் அல்சாரி இருவரும் அனைத்து வகை கிரிக்கெட்டிலும் முன்னணி பந்துவீச்சாளர்களாக உள்ளனர்" என்று மேற்கிந்திய தீவுகள் தேர்வுக் குழு தலைவர் டெஸ்மன் ஹெயின்ஸ் தெரிவித்துள்ளார். ஏற்கனவே உபாதையால் சுழற்பந்து வீச்சாளர் யனிக் கரியா விலகிய நிலையில் தற்போது இரு வீரர்கள் வெளியேறியுள்ளதால் மேற்கிந்திய தீவுகள் குழாத்தில் 13 வீரர்களே எஞ்சியுள்ளனர். மாற்று வீரர்கள் இன்னும் பெயரிடப்படவில்லை.

# சா∴ப் கிண்ணம் மீண்டும் இந்திய அணியின் வசம்




தெற்காசிய கால்பந்தாட்ட (சா∴ப்) சம்பியன்சிப் இறுதிப் போட்டியில் குவைட் அணியை பெனால்டி சூட் அவுட்டில் வீழ்த்தி இந்தியா சம்பியன் கிண்ணத்தை தக்கவைத்தது.

பெங்களூரில் கடந்த செவ்வாய்க்கிழமை (04) நடைபெற்ற இறுதிப் போட்டியில் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் இரு அணிகளும் தலா ஒரு கோலை பெற்றிருந்ததோடு கூடுதல் நேர முடிவிலும் அதே நிலை நீடித்தது.

இதனை அடுத்து முடிவை தீர்மானிக்க நடத்தப்பட்ட பெனாடி சூட் அவுட்டில் இந்தியா 5–4 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. இந்திய அணி சா∴ப் சம்பியன்சிப் கிண்ணத்தை வெல்வது இது 9ஆவது முறையாகும்.

சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் தடை காரணமாக இலங்கை முதல் முறையாக இம்முறை தொடரில் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சிங்கப்பூர் தடகள போட்டி: பதக்கங்கள் வென்றார் நதீ



சிங்கப்பூர் சர்வதேச மாஸ்டர்ஸ் தடகள சம்பியன்சிப் போட்டியில் சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பிஎல்சி (சி.டி.பி) நிறுவனத்தின் நதீ பெரேரா நான்கு பதக்கங்களை வென்றுள்ளார். மகளிர் வர்த்தக மெய்வல்லுனர் அணியின் தலைவியான இவர் 200 மீற்றர் ஓட்டப்போட்டி, நீளம்பாய்தல், முப்பாய்ச்சல் மற்றும் 100 மீற்றர் தடைதாண்டி போட்டிகளில் வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளார்.

மலேசியாவின் குரியமவுன்ட் ஒஸ்டினில் அண்மையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் இலங்கை வீர, வீராங்கனைகள் மொத்தம் 51 பதக்கங்களை வென்றதோடு சி.டி.பி நிறுவனத்தின் நான்கு பேர் கொண்ட அணி ஒன்றுக்கு மேற்பட்ட பதக்கங்களை வென்றமை குறிப்பிடத்தக்கது.

# கிரிக்கெட் தொழில்நுட்ப குழு: பர்வீஸ் மஹ்ரூப் இராஜினாமா



விளையாட்டுத் துறை அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதற்கு நியமிக்கப்பட்ட இலங்கை கிரிக்கெட் தொழில்நுட்ப குழுவில் இருந்து இலங்கை அணியின் முன்னாள் வீரர் பர்வீஸ் மஹ்ரூப் இராஜினாமா செய்துள்ளார்.

தற்போது சர்வதேச கிரிக்கெட் வர்ணனையாளராக செயற்படும் மஹ்ரூப், தமது பணி மற்றும் குடும்ப கடமைகள் காரணமாக குழுவில் தமது பணிகளை நிறைவேற்ற முடியாதுள்ளது என்று அமைச்சரிடம் தெரிவித்துள்ளார்.

மஹ்ரூப் கடந்த ஏப்ரல் மாதமே தொழில்நுட்பக் குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

இலங்கை கிரிக்கெட் தொடர்பான விடயங்களில் விளையாட்டுத் துறை அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதே இந்தக் குழுவின் பணியாகும்.

இந்தக் குழுவின் மற்ற உறுப்பினர்களாக முன்னாள் வீரர்களான சனத் ஜயசூரிய, சரித் சேனநாயக்க மற்றும் அசந்த டி மேல் உள்ளனர்.

# சம்பியனானது ஹிஜ்ரா அணி

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**



சம்மாந்துறை யுனிடி விளையாட்டு கழகத்தின் 17ஆவது வருடத்தை முன்னிட்டு நடைபெற்ற யுனிடி சம்பியன் கிண்ண மின்னொளி கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அக்கரைப்பற்று ஹிஜ்ரா விளையாட்டு கழகம் சம்பியனானது.

64 அணிகள் பங்கேற்ற இப்போட்டித் தொடரானது, அணிக்கு எட்டு பேருடன் ஐந்து ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தது. இதன் இறுதிப்போட்டி சம்மாந்துறை அல்–அர்ஷாத் வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் செவ்வாய்க்கிழமை (04) இரவு நடைபெற்றது. இதில் அக்கரைப்பற்று ஹிஜ்ரா விளையாட்டு கழகமும், சம்மாந்துறை நியூ சன் விளையாட்டு கழகமும் மோதிக்கொண்டன. சுற்றுப்போட்டித் தொடரின் சிறந்த வீரராக ஹிஜ்ரா அணியின் வீரர் முஹம்மட் தஸ்னீம் தெரிவானார்.

## சர்வதேச செய்திகள்

# அழகு நிலையங்களுக்கு ஆப்கானிஸ்தானில் தடை



ஆப்கானிஸ்தானில் பெண்களுக்கான அழகு நிலையங்களுக்கு அந்நாட்டின் தலிபான் அரசு தடை விதித்துள்ளது.

இந்தத் தடையை செயற்படுத்துவதற்கு வர்த்தகங்களுக்கு கடந்த ஜூலை 2ஆம் திகதி தொடக்கம் ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டிருப்பதாக ஆப்கான் நல்லொழுக்கத் துறை அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். எனினும், இந்நடவடிக்கைக்கான காரணத்தைத் தலிபான் அரசாங்கம் வெளியிடவில்லை.

அழகு நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டதும் அதற்கான காரணம் தெரிவிக்கப்படும் என அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார். ஏற்கனவே 2021 ஓகஸ்டில் ஆட்சிக்கு வந்த தலிபான்கள் பெண்கள் கல்வி கற்பதற்கு, பொது இடங்களில் இருப்பதற்கு மற்றும் சில தொழில்களில் ஈடுபடுவதற்கு கட்டுப்பாடுகள் விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீன ஒப்பந்தத்தை நீடிக்க அமெரிக்காவில் எதிர்ப்பு



சீனாவுடன் மேற்கொள்ளப்பட்டிருக்கும் நான்கு தசாப்தங்கள் பழமை வாய்ந்த விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தத்தைப் புதுப்பித்து நீடிக்க வேண்டாம் என்று அமெரிக்க கொங்கிரஸ் உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சீனா தொடர்பான செயற்குழுவின் தலைவர் மைக் கல்கார் தலைமையிலான பத்து அமெரிக்க கொங்கிரஸ் உறுப்பினர்கள் இக்கோரிக்கையை முன்வைத்துள்ளனர். இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கனிடம் இது தொடர்பான கடிதமொன்றை அவர்கள் கையளித்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதியாக ஜிம்மி காட்டர் பதவி வகித்த போது சீனாவுடனான நட்புறவை வலுப்படுத்தும் நோக்கில் இந்த விஞ்ஞான, தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இவ்வொப்பந்தம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 27 ஆம் திகதியுடன் காலாவதியாக உள்ளது.

# ஜெனினில் இருந்து வெளியேறிய இஸ்ரேல் காசா மீது தாக்குதல்



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் ஜெனின் அகதி முகாமில் இருந்து இரண்டு நாட்களின் பின் இஸ்ரேல் தனது படைகளை வாபஸ் பெற்ற நிலையில் காசா மற்றும் இஸ்ரேல் இடையே பரஸ்பரம் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

காசாவில் இருந்து இஸ்ரேலை நோக்கி நேற்று (05) ரொக்கெட் குண்டுகள் வீசப்பட்ட நிலையில், இஸ்ரேல் போர் விமானங்கள் காசா மீது தாக்குதல் நடத்தியுள்ளன.

ஜெனின் அகதி முகாமில் இஸ்ரேல் கடந்த இரண்டு தசாப்தங்களில் நடத்திய மிகப்பெரிய இராணுவ நடவடிக்கை மற்றும் ஆளில்லா விமானத் தாக்குதல்களில் 12 பேர் கொல்லப்பட்டு 100க்கும் அதிகமானவர்கள் காயமடைந்த நிலையிலேயே இஸ்ரேல் அங்கிருந்து வாபஸ் பெற்றது.

இஸ்ரேலியப் படை நேற்று அங்கிருந்து வாபஸ் பெறும் முன்னர் தேவைப்பட்டால் இதனைப் போன்ற நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று இஸ்ரேலிய பிரதமர் பென்ஜமின் நெதன்யாகு உறுதி அளித்துள்ளார்.

"தற்போது எமது திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதோடு ஜெனினில் எமது விரிவான செயல்பாடு ஒரு முறை மாத்திரமானதல்ல என்று என்னால் கூற முடியும்" என ஜெனின் புறநகர் பகுதியில் உள்ள இராணுவ முகாம் ஒன்றுக்கு சென்ற நெதன்யாகு தெரிவித்தார். "நாம் பயங்கரவாதத்தை எங்கு பார்த்தாலும் அதனை அழித்துவிடுவோம். அதன் மீது தாக்குதல் நடத்துவோம்" என்றார்.

இந்நிலையில் நேற்று காலை இஸ்ரேலை நோக்கி வந்த ஐந்து ரொக்கெட்டுகள் இடைமறிக்கப்பட்டதை அடுத்தே காசாவை நோக்கி இஸ்ரேல் வான் தாக்குதலை நடத்தியது.

வடக்கு காசாவில் உள்ள ஹமாஸ் அமைப்பின் இராணுவத் தளம் ஒன்று தாக்கப்பட்டதாக பலஸ்தீன பாதுகாப்பு தரப்பு குறிப்பிட்டுள்ளது. எனினும் இதனால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

முன்னதாக கடந்த செவ்வாய்க்கிழமை (04) இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் காரை மோதவிட்டு மற்றும் கத்திக்குத்து தாக்குதலில் ஏழு பேர் காயமடைந்தனர். இதன்போது தாக்குதல் நடத்திய சந்தேக நபர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இதில் மேற்குக் கரையைச் சேர்ந்த பலஸ்தீன ஆடவர் ஒருவரே கொல்லப்பட்டுள்ளார்.

இது ஜெனின் நடவடிக்கைக்கு எதிரான இயற்கையான பதில் நடவடிக்கை என்று டெல் அவிவ் தாக்குதல் தொடர்பில் காசாவை ஆளும் ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஜெனின் சுற்றிவளைப்பின்போது போராளிகளின் மறைவிடங்கள், ஆயுதக் கிடங்குகள் மற்றும் வெடிபொருட்களை சேமிக்கு நிலத்தடி கிடங்குகள் கண்டுபிடிக்கப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கை ஜெனின் மக்களுக்கு எதிரான போர் என்று பலஸ்தீன வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த சுற்றிவளைப்புக் காரணமாக ஜெனின் அகதி முகாமில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேறியுள்ளனர்.

இந்த பதற்றத்தை அடுத்து ஐக்கிய அரபு இராச்சியத்தின் அழைப்பின் பேரில் ஐ.நா பாதுகாப்பு சபை மூடிய அறையில் கூடுவதாக அறிவித்துள்ளது.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனர்களுக்கு இடையிலான பதற்றம் அண்மைக் காலத்தில் அதிகரித்திருப்பதோடு இந்த ஆண்டில் இதுவரை 190 பலஸ்தீனர்கள் மற்றும் 26 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'ஜூலை 03' உலகின் மிக வெப்பமான தினம்



உலகில் இதுவரை பதிவான அதிக வெப்பமான தினம் கடந்த ஜூலை 03 ஆம் திகதி பதிவானதாக சுற்றுச்சூழல் முன்னறிவுக்கான அமெரிக்க தேசிய நிலையம் தெரிவித்துள்ளது.

உலகெங்கும் வெப்ப அலை தாக்கி வரும் நிலையில் 2016 ஓகஸ்ட் மாதம் பதிவான 16.92 செல்சியஸ் என்ற சாதனை வெப்பத்தை விஞ்சி கடந்த திங்கட்கிழமை சராசரி உலக வெப்பநிலை 17.01 செல்சியஸை எட்டியுள்ளது.

அமெரிக்காவின் தென் பகுதியில் அண்மைய வாரங்களில் கடும் வெப்பம் நிலவி வருவதோடு சீனாவில் தொடரும் வெப்ப அலை காரணமாக அங்கு வெப்பநிலை 35 செல்சியஸை தாண்டியுள்ளது. வட ஆபிரிக்காவில் வெப்பநிலை 50 செல்சியஸை நெருங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அண்டார்டிகாவில்கூட இந்த ஆண்டு குளிர்காலத்தில் வழக்கத்தைவிட வித்தியாசமான அளவுகளில் அதிகபட்ச வெப்பநிலை பதிவானது.

பருவநிலை மாற்றத்தோடு, எல் நினோ எனும் வானிலை நிகழ்வால் வெப்பநிலை அதிகரித்திருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

# கொலம்பிய கடைசி கிளர்ச்சி குழுவுடனும் போர் நிறுத்தம்




கொலம்பியாவில் இயங்கும் கடைசி கிளர்ச்சிக் குழுவுடனும் சுமார் 60 ஆண்டு மோதலுக்குப் பின் அந்நாட்டு அரசு போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றை எட்டியுள்ளது.

வரும் ஓகஸ்ட் மாதம் முழுமையான போர் நிறுத்தம் ஒன்றை நோக்கி வியாழக்கிழமையில் (இன்று) இருந்து மோதலை நிறுத்துவதாக தேசிய விடுதலை இராணுவம் அறிவித்துள்ளது. அதே நேரத்தில் ஆயுதப் படைகளும் தாக்குதல்களை நிறுத்துவதாக கொலம்பிய பாதுகாப்பு அமைச்சு உறுதி செய்துள்ளது.

எம்–19 கிளர்ச்சிக் குழுவின் முன்னாள் உறுப்பினரான கொலம்பியாவின் பதவியில் உள்ள ஜனாதிபதி குஸ்தாவோ பெட்ரோ, நாட்டில் முழுமையான அமைதியை கொண்டுவருவதாக கடந்த ஆண்டு பதவிக்கு வந்தபோது உறுதி அளித்திருந்தார்.

கொலம்பியாவின் கெரில்லா குழு மற்றும் அந்நாட்டு அரசுக்கு இடையிலான அமைதிப் பேச்சுவார்த்தை வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேசிய விடுதலை இராணுவம் 1964 ஆம் ஆண்டே கொலம்பிய அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜூலை மாதம் 6ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.